# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் **மு. குலாம் முஹம்மது**

**Volume-13**
**Issue-7**

ஜூலை-2020 (துல்கஃதா-1441)

விலை ரூ. **20/-**




- கலீபா உமர் (ரழி) அவர்களின் அறிவுரை போர்களில் இஸ்லாம் கடைபிடித்த இங்கிதங்கள்
- பிராமணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள்... முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்
- இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம்

# சோபியா பள்ளிவாசல்

## மீண்டும் பள்ளிவாசலாக மாற்றம்

## சர்ச்சைகளுக்கான பதில்

## டெல்லி காவல்துறையின் முஸ்லிம் வேட்டை

## இந்தியாவின் எதிர்காலம் சிறையில் வாடுகிறது

بسم الله الرحمن الرحيم

"

தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டு, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் திட்டமிட்ட மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்களே (வாக்குறுதி மீறி உங்களைத் தாக்க) முதல் முறையாக துவங்கினர்; நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? (அப்படியல்ல!) நீங்கள் முஃமின்களாக இருப்பீர்களானால், நீங்கள் அஞ்சுவதற்கு தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனேதான்
(அல்குர்ஆன் - 9:13)

"


சோபியா பள்ளிவாசல் மீண்டும் பள்ளிவாசலாக மாற்றும் சர்ச்சைகளுக்கான பதில் - 6

டெல்லி காவல்துறையின் முஸ்லிம் வேட்டை இந்தியாவின் எதிர்காலம் சிறையில் வாடுகிறது - 16

டெல்லி கலவரம் - பாலியல் பலாத்காரம், கொலை, மசூதி எரிப்பு என இந்துத்துவ தீவிரவாதிகளின் திட்டமிட்ட கொடூரம் - 33

முஸ்லிம் இளைஞர்கள் எப்போதுமே சிறையில் இருக்க வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள்... - 36

கலீபா உமர் (ரழி) அவர்களின் அறிவுரை - 39
போர்களில் இஸ்லாம் கடைபிடித்த இங்கிதங்கள்

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ரயிஸ் முஹம்மத்-வுடன் ஒரு நேர்காணல் - 46

தமிழக அரசுப் பணிகளில் ஆர்.எஸ்.எஸ் - 51

பிராமணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள்... முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்... - 52

பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் என்ற பெயரில் மதவெறியர்கள் தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக் குழு தமிழ்நாடு முதல்வரிடம் புகார் - 55

RK நகர், நேதாஜி நகரில் நடந்த உண்மை சம்பவம் அத்துமீறும் காவல்துறை - 58

இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம் - 59

தமிழகத்தில் தீவிரவாத தாக்குதல் - பதற்றத்தை உருவாக்கும் ஊடகங்கள் - 64



ஜூலை-2020

# வைகறை வெளிச்சம்

துல்கஃதா-1441

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

தலையங்கம்

# கறுப்பர்களுக்கு வேண்டும் நீதி

மார்ட்டின் லூதர் கிங் ஜீனியர் அமெரிக்காவில் நடந்த மக்கள் உரிமை இயக்கத்தின் முக்கிய தலைவர். கருப்பு இன மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்தவர். அவர் ஒரு மத குருவும் கூட. 1963 ஆம் ஆண்டு வாஷிங்டனில் இரண்டரை லட்சம் மக்கள் முன்னிலையில் 'I Have a dream' அதாவது எனக்கு ஒரு கனவு உண்டு எனத் தொடங்கும் புகழ் பெற்ற உரையை அவர் நிகழ்த்தினார். அமெரிக்காவில் நிற பாகுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பங்காற்றிய அப்ரஹாம் லிங்கன் நினைவகத்தில் இந்த உரையை நிகழ்த்தினார். இந்த உரை மக்கள் உரிமை இயக்கத்தில் முக்கிய புள்ளியாக அமைந்தது. இந்த உரை நிகழ்த்தப்பட்ட அடுத்த ஆண்டு மார்ட்டின் லூதர் கிங் ஜீனியருக்கு அமைதிக்கான நோபல் பரிசுக் கொடுக்கப்பட்டது. அந்த புகழ்பெற்ற உரையிலிருந்து ஒரு பகுதி.

'எனக்கு ஒரு கனவு உண்டு' ஒருநாள் இந்த நாடு எழுந்து நின்று எல்லா மனிதர்களும் பிறப்பால் சமம் என்ற தனது நம்பிக்கையில் உண்மையான பொருளில் வாழும் என்று எனக்கு ஒரு கனவு உண்டு. முன்னாள் அடிமைகளின் மகன்களும் அடிமைக் கொண்டவர்களின் மகன்களும் ஒருநாள் ஜார்ஜியாவின் மாகாணத்தில் சகோதரத்துவத்தின் மேசையில் கூடி அமர்ந்திருக்க முடியும் என்று எனக்கு ஒரு கனவு உண்டு.

அநீதி மற்றும் ஒடுக்கு முறையின் வெப்பத்தில் தகிக்கும் பாலைவனமான மிஸிப்பி மாகாணம் கூட ஒருநாள் விடுதலையின் நீதியின் பாலைவசன் சோலையாக மாற்றமடையும் என்று எனக்கு ஒரு கனவு உண்டு.

என்னுடைய நான்கு சிறு குழந்தைகளும் தோலின் நிறத்தினால் அல்லாமல் அவர்களின் பண்பினால் மதிக்கப்படுகின்ற ஒரு நாட்டில் ஒருநாள் வாழ்வார்கள் என்று எனக்கு ஒரு கனவு உண்டு.

கொடூர இனவாதிகள் உள்ள அலபாபா மாகாணத்தில் கருப்பு இன சிறுமிகளும், வெள்ளை இன சிறுவர்களும், சிறுமியர்களோடு சகோதர, சகோதரிகளாக கைக் கோர்ப்பார்கள் என எனக்கு ஒரு கனவு உண்டு.

இன்று எனக்கு ஒரு கனவு உண்டு. இங்குள்ள பள்ளத்தாக்கு ஒருநாள் உயரும். மலைகளும், குன்றுகளும் கரடுமுரடான இடங்களும் சீராகும். வளைவுகள் நேராகும், தேவனின் புகழ் வெளிப்படும். இதை எல்லா இனமும் ஒன்றாகப் பார்க்கும் என எனக்கு ஒரு கனவு உண்டு.

இது நமது நம்பிக்கை. இந்த நம்பிக்கையோடுதான் தெற்கு நோக்கி செல்வேன். இந்த நம்பிக்கையுடன் விரக்தியின் மலையில் இருந்து நம்பிக்கையின் கல்லை நம்மால் செதுக்கி எடுக்க முடியும். இந்த நம்பிக்கையோடு நம்மால் நம் நாட்டின் நாராசமான ஸ்ருதி வேதத்தை சகோதரத்துவத்தின் இனிய மெல்லிசையாக நம்மால் மாற்ற முடியும். இந்த நம்பிக்கையோடு நாம் ஒருநாள் விடுதலை பெறுவோம் என்பதை அறிந்து நம்மால் ஒன்றாக கூடி வேலை செய்ய முடியும். கூடி ஜெபிக்க முடியும். ஒன்றாக சிறை செல்ல முடியும். விடுதலைக்காக சேர்ந்து நிற்க முடியும்.

அமெரிக்காவில் இனவெறியால் கொல்லப் பட்ட ஜார்ஜ் ஃப்ளாய்டு-ன் இறுதி வார்த்தை 'I Cannot Breathe' இன்று உலகம் முழுவதும் பேசப்படுகிறது. ஜார்ஜ் ஃப்ளாய்டு மட்டும் அல்ல அமெரிக்காவில் இன வெளியால் கொல்லப்பட்ட அநீதி இழைக்கப்படுகின்ற கறுப்பின மக்கள் ஏராளமாக உள்ளனர்.இந்த தொடர் சம்பவங்கள் ஒன்றை நமக்கு தெளிவுப் படுத்துகிறது. கறுப்பின மக்களுக்காக போராடி தன் உயிரையும் வெள்ளை இனத்தவரால் பறிக்கப்பட்ட அந்த மார்ட்டின் லூதர் கிங் ஜீனியரின் கனவு தகர்ந்தது. இன்றும் அவருடைய நம்பிக்கையான கிறிஸ்துவக் கொள்கையும், அமெரிக்கச் சட்டமும் கறுப்பின மக்களுக்கு நீதி, சமத்துவம், உரிமை அளிப்பதிலிருந்து தோல்வி அடைந்தது. கறுப்பின மக்கள் விடுதலை அடைய வேண்டுமென்றால் அவர்கள் தேர்ந்து எடுக்க வேண்டியது ஒரு மாற்றுப் பாதையை. அதுதான் இஸ்லாம். இஸ்லாத்தின் மட்டும்தான் கறுப்பின மக்கள் மனிதர்களாக, சகோதரர்களாக மதிக்கப்பட்டு எந்த வேறுபாடும் இன்றி உரிமைகளும் வழங்கப்படுகிறது.

அமெரிக்காவில் நிற வெறிக்கு எதிராக பல்வேறு வழிகளில் போராடி தோல்வியுற்று, இறுதியில் இஸ்லாத்தை ஏற்று லட்சக்கணக்கில் கறுப்பின மக்களுக்கு விடுதலைப் பெற்றுத்தந்த மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ். அவர்

தன்னுடைய ஹஜ் பயணத்தின் அனுபவத்தை தன் உறவினர்களுக்கும், சகோதரர்களுக்கும் எழுதிய கடிதத்தில் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

அமெரிக்கா இஸ்லாத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், 'இஸ்லாம்' மட்டும்தான் இனவெறியை முற்றிலும் அழிக்கின்றது. முஸ்லிம் உலகில் தான் மேற்கொண்ட பயணங்கள் முழுவதிலும் நான் முஸ்லிம்களை சந்தித்தேன். பேசினேன், அவர்களுடன் ஒரே தட்டில் உணவு உண்டேன், ஒரேக் கோப்பையில் தண்ணிர் பருகி னேன். ஒரே கம்பளத்தில் ஒன்றாக உறங்கினேன். ஒன்றாக தோளோடு தோள் உறுதி தொழுகையில் நின்றேன்.

உலகில் எத்தனை நிறங்கள் இத்தரை மீது உண்டோ, அத்தனை நிறத்தையும் கொண்ட மனிதர்கள் ஒன்று போலவே தொழுது ஒன்றுமை, சகோதரத்துவம் என எல்லோரும் ஒரே விதமான உணர்வையே வெளிக்காட்டினார். இங்கே எல்லோரும் முஸ்லிம்களே. நிறம் இங்கே எந்த விதத்திலேயும் தலையிடுவதில்லை. வெள்ளை நிற வெறி என்ற புற்றுநோய் அமெரிக்காவை அழித்து வருகின்றது.

உன்னத உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது ஒன்றே அமெரிக்காவை அது எதிர்நோக்கும் பேரழிவிலிருந்து காப்பாற்றும். இது இஸ்லாத்தின் தேவை அல்ல. இது அமெரிக்காவின் அவசரத் தேவை.

1400 ஆண்டுகளுக்கு முன்பே 'இஸ்லாம்' இனவெறியை ஒழித்தது. இதற்கு ஒரு எடுத்துக் காட்டு எத்தியோப்பியாவைச் சேர்ந்த பிலால் (ரழி) அவர்கள் எந்த அளவுக்கு இஸ்லாம் அவர்களுக்கு உரிமை வழங்கியது என்றால் முஸ்லிம்கள் புனித மாக கருதக்கூடிய மூன்று பள்ளிகள் காஃபத்துல்லா, மஸ்லிதுன் நபவி, பைத்துல் முகத்தஸ். இந்த மூன்று பள்ளிகளிலும் முதலில் பாங்கு சொன்னவர் பிலால் (ரழி) அவர்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த உலகைப் பிரியும் வரை மஸ்ஜிதுன் நபவியில் பாங்கு சொன்னவர் பிலால் (ரழி) அவர்கள்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்...

உங்களுக்கு உதடு தடித்த, சுருண்ட முடிகளைக் கொண்ட கறுப்பினத்தைச் சேர்ந்தவர் தலைவராக நியமிக்கப்பட்டால் அவர் உங்களி டையே அல்லாஹ்வின் திருமறைப்படி ஆணைப் பிறப்பித்துக் கொண்டிருக்கும் வரையில் நீங்கள் அவருக்கு செவி சாய்த்து வழிபடுங்கள்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள், தன் இறுதிப் பேருரையில் கூறினார்கள், மக்களே.. அறிந்து கொள்ளுங்கள். உங்கள் இறைவன் ஒருவனே. உங்கள் தந்தையும் ஒருவரே. இறையச்சத்தைத் தவிர வேறெந்த வகையிலும் ஓர் அரபியருக்கு அரபி அல்லாதவரை விட, ஓர் அரபி அல்லாதவருக்கு அரபியரை விட, ஒரு வெள்ளையருக்கு கருப்பரை விட, ஒரு கருப்பருக்கு வெள்ளையரை விட எவ்வித சிறப்பும், மேன்மையும் இல்லை.

முஹம்ம நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்...

எவருடைய உள்ளத்தில் அனு அளவும் பெருமை குடி கொண்டுள்ளதோ அவர் சுவனம் செல்லமாட்டான் என்று கூறினார்கள். அப்பொழுது, ஒருவர் நிச்சயமாக மனிதன் தன் ஆடை அழகாயிருப்பதையும், தன் காலணிகள் அழகாயிருப்பதையும் விரும்புகிறான் என்று வினவினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் நிச்சயமாக அல்லாஹ் அழகானவனே. எனவே அழகானதையும், தூய்மையானதையும் நேசிக் கிறான். ஆனால், பெருமை என்பது உண்மையை மறைப்பதும், மற்ற மனிதர்களை இழிவாக எண்ணி தன்னில் தானே செருக்கு அடைவது ஆகும்.

**மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆன், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். பின்னர் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினேன். உங்களில் எவர் (அல்லாஹ்வை) மிகவும் அஞ்சுபவராக இருக்கின்றாரோ, அவர் தாம் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியமானவர், நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன் (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.**

**(அல்குர்ஆன் - 49:13)**

**மேலும் வானங்களையும், பூமியையும் படைத்திருப்பதும், உங்களுடைய மொழிகளும் உங்களுடைய நிறங்களும் வேறுபட்டிருப்பதும், அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும். நிச்சயமாக இதில் அறிந்தோருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன.**

**(அல்குர்ஆன் - 30 : 22)**



# சோபியா பள்ளிவாசல்

## மீண்டும் பள்ளிவாசலாக மாற்றம் சர்ச்சைகளுக்கான பதில்

துருக்கி நாட்டில் ஹகியா சோபியா என்ற கண்காட்சி ஒன்று இருக்கிறது. மசூதியாக இருந்து கண்காட்சியமாக மாற்றப்பட்ட மியூசியம் (கண்காட்சி) இன்று மீண்டும் மசூதியாக மாற்றப்பட இருப்பதாக துருக்கி அதிபர் எர்துகான் குறிப்பிட்டிருக்கிறார்.

இதை தொடர்ந்து சில சர்ச்சைகள் மதச்சார் பவர்களாக காட்டிக்கொள்ளும் மேற்கத்திய கிறிஸ்துவர்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதனை விரிவாக காண்போம்.

### ஹகியா சோபியா வரலாறு

மேற்கத்திய கிறிஸ்தவ உலகம் தங்களை மதசார்பற்ற முற்போக்கானவர்கள் என காண்பித்துக் கொண்ட காலகட்டத்தில்தான், சோபியா பள்ளிவாசல் உருவான வரலாற்றை வகுப்புவாதமாக சித்தரித்தார்கள். இது இன்று துருக்கியில் உள்ள இஸ்தான்புல்லில் (அன்றைய கான்ஸ்டன்டில் நோபிள்) உள்ளது.

இது கிழக்காசிய ஆர்த்தோடக்ஸ் பிரிவு கிறிஸ்த்துவ சர்ச்சாக கி.பி. 360 ல் கட்டப்பட்டது. இவர்கள் கிறிஸ்துமஸ்ஸை ஜனவரி 7-ம் தேதி கொண்டாடக்கூடியவர்கள். கி.பி. 404-ல் இது எரித்து நாசமாக்கப்பட்டது. இதுபோல் கி.பி 532ல் கொடுங்கோண்மை ஜஸ்டினியன் அரசுக்கு எதிராக மக்களால் நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதலில் சர்ச் முழுவதுமாக அவர்களாலேயே எரிக்கப்பட்டது. மீண்டும் இன்றைய தோற்றத்தில் கி.பி. 537 ல் கட்டப் பட்டது.

இதற்கான தூண்கள் எஃபசஸ் (Ephessus)ல் இருந்த ஆர்டமிஸ் (Artemis) என்ற ரோமன் கோவிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டு பயன் படுத்தப்பட்டதுவிக்ரக வழிபாடு செய்துவந்த அம்மக்கள் முழுவதுமாக கிறிஸ்தவர்களாக மாறியதால் அவர்களுடைய சொத்தாக இருந்த ஆர்டமிஸ் கோவிலிருந்து எடுத்த தூண்களை சோபியா சர்ச்சில் பயன்படுத்தினர்.

கி.பி 1204-1261 வரை சிலுவை யுத்தக் காரர்களால் ரோமன் கத்தோலிக் சர்ச்சாக வலுக்கட்டாயமாக மாற்றப்பட்டது. சர்ச் மாற் றாந்தாய் மனப்பான்மையால் பராமரிக்கப் படாமல் கிடந்ததுஅன்றைய பைஸாண்டிய பேரரசின் எஞ்சிய நகரமான கான்ஸ்டன்டில் நோபிள் துருக்கிய ஆட்சிப் பகுதியால் சூழப் பட்டிருந்தது. இந்த இருசாராரும் ஐரோப்பிய இனத்தை சேர்ந்தவர்களே.

கி.பி1453ல் கான்ஸ்டான்டிநோபிள் துருக்கிய ஐரோப்பிய முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப் பட்டது. காலப்போக்கில் மக்கள் இஸ்லாத்தை

ஏற்றனர். உலகில் இந்த இனம் மட்டுமே முழுவதுமாக இஸ்லாத்தில் இணைந்தது. இவர்களே சோபியா வழிபாட்டுத் தலத்தின் உரிமையாளர்கள். தங்களுக்குரிய சர்ச் ஐ பள்ளி வாசலாக மாற்றியதை ஏற்றுக் கொண்டனர்.

கி.பி. 1931 வரை தொழுகையை நிறைவேற்றி வந்தனர்.ஆனால் கி.பி. 1934-ல் தன்னை மதசார்பற்றவராக கருதிக் கொண்ட கமால் அதார்துக் என்ற துருக்கிய அதிபர், சோபியா பள்ளிவாசலை அருங்காட்சியமாக மாற்றினார். இவர் ஸ்பெயினில் முஸ்லிம்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட பின் சர்ச் ஆக மாற்றப்பட்ட பள்ளிவாசலை பற்றி வாய் திறக்கவில்லை.

இது அதிகமாக வெளிநாட்டு சுற்றுலா வாசிகளை குறிப்பாக ஐரோப்பிய கிறிஸ்த வர்கள் ஈர்த்துள்ளது. அவர்கள் தங்கள் மத அடையாளத்துடன் தொடர்புபடுத்தி மீட்க துணிந்து உள்ளனர். சுற்றுலா பயணம் இவர்களை உணர்வுப்பூர்வமாக நினைக்க வைத்துள்ளதே இதற்கு காரணம். இதை 2007-லிருந்து அமெரிக்கர்கள் ஆக்கிரமிக்கும் நோக்கோடு குரல் எழுப்பி வருகின்றனர். ஆனால், இன்றைய துருக்கி மக்கள் விழித்துக் கொண்டுள்ளனர்.

ஆதாரம் : துருக்கி அரசின் வளைதலமான சோபியா மியூசியத்தின் ayasofyamuzesi.gov.tr

(இந்த வருடம் நம் வைகறை குழுமம் சார்பாக வெளியிட்ட காலண்டரில் வெளியான தகவல்)

## சோபியா பள்ளிவாசல் யாருக்கு சொந்தம்

கி.பி 537ல் ஹகியா சோபியா பழைய ரோமன் விகரக சமய வழிபாட்டு கோவில்களின் கற்களையும், தூண்களையும் கொண்டு கட்டப் பட்டது. அப்போது அம்மக்கள் முழுமையாக கிறிஸ்துவர்களாக மாறியதால் அதனை ஏற்றுக் கொண்டார்கள். ஏனெனில் உலகத்தில் எந்த ஒரு பொருளும் மதத்திற்கு சொந்தமானது அல்ல. அதனை உருவாக்கும் மக்களுக்கு சொந்தமானது. அதுபோன்று அனைத்து மதங்களின் வழிபாட்டு தளங்களும் சொத்தாக தான் பார்க்க முடியுமே அன்றி ஆன்மிகமாக பார்க்க முடியாது. இதை இன்றைய உலகில் உள்ள அனைத்து நாடுகளின் சட்டங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. (பாபரி மஸ்ஜித் பிரச்சனையும் இப்படியான இடத் தகராறு தான்)

அதன் பிறகு கிறிஸ்துவ பிரிவுகளுக்குள் சண்டை நிகழ்ந்து சர்ச் எரிக்கப்பட்டது, பின்பு பராமரிக்கப்பட்டது. 1453-ல் 21 வயதான சுல்தான் முஹம்மது 2 அவர்களின் தலைமையில் ஐரோப்ப இன முஸ்லிம்களின் பங்களிப்போடு நடத்தப்பட்ட தற்காப்பு போரில் கான்ஸ்டாண்டி நோபிள் கைப்பற்றப்பட்டு அங்கிருந்த ஹகியா சோபியா பள்ளிவாசலாக உருமாறியது. இதனை விக்ரக வழிபாட்டிலிருந்து கிறிஸ்துவ வழிபாட்டுக்கு மாறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அம்மக்கள் எதிர்த்து ஆர்ப்பாட்டம், போராட்டம் செய்யவில்லை.

ஏனெனில் இது ஒரு சொத்து பிரச்சனை. இவர்களுடைய முன்னோர்கள் கிறிஸ்துவர்களாக மதம் மாறியதால் ரோமன் கோவில்களை கிறிஸ்துவ சர்ச்களாக உருமாற்றியது போல் வழித்தோன்றல்களான அன்றைய முஸ்லிம்கள் சர்ச்,ஐ தங்களுடைய புது ஆன்மிக தேவைக்காக மசூதியாக உருமாற்றினார்கள். இப்படி மசூதி யாக இருந்து வந்த சோபியா பள்ளிவாசல் முதல் உலகப்போரில் மேற்கத்திய கிறிஸ்துவர்களால் தோல்வியுற செய்யப்பட்ட துருக்கிய அதிபர் கமால் அதார்த்துக்கால் மியூசியமாக மாற்றப் படுகிறது.

இந்த செயல் தவறானது என அப்போதி லிருந்து துருக்கிய மக்கள் குரலெழுப்பி வருகிறார்கள். வரலாற்றில் ஸ்பெயின் உட்பட உலக நாடுகளில் எத்தனையோ நூற்றுக்கணக் கான மசூதிகள் சர்ச்களாக மாற்றப்பட்டிருக் கிறது. இன்றும் வேறொரு வடிவில் மேற்கத்திய கிறிஸ்துவர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முஸ்லிம் நாடுகளின் மீது போர் தொடுத்து முஸ்லிம்களின் மசூதிகள், நினைவுச் சின்னங்கள் அழிக்கும் செயலை செய்து வருகிறார்கள்.

அந்த வரலாற்று சின்னங்களை திருடி மேற்கத்திய நாடுகளில் ஏலம் விடுவது, முஸ்லிம் நாடான இந்தோனேசியாவில் ஒரே பகுதியான தைமூரை (Timor) (1999) பிரித்து கிறிஸ்துவ பகுதியாக மாற்றுவது, சூடான் நாட்டில் கிளர்ச் சியை உண்டாக்கி இரண்டாக பிரித்து நெருக்கடி தருவது, ஈராக்கை பிரித்து குர்திஸ்தான் என்கிற நாட்டை உருவாக்கி குர்திஸ்தான் படையை



நிறுவி சூழ்ச்சி செய்வது. அடுத்த திட்டமாக, அகன்ற குர்திஸ்தான் என்ற பெயரில் துருக்கி, ஈரான், சிரியா பகுதிகளில் உள்ள சன்னி முஸ்லிம் களான குர்து இன முஸ்லிம் பகுதிகளை இணைத்து உருவாக்குவது, ஆன்மிக தளமான பைத்துன் முகத்தஸை யூதர்களின் யூதக் கோவி லாக மாற்றுவதற்கு தேவையான எல்லா வகை நடவடிக்கைகளையும் இஸ்ரேலுக்கு ஆதரவு என்ற போர்வையில் செயல்படுத்துவது.

இதையெல்லாம் தொடர்ச்சியாக முஸ்லிம் நாடுகளுக்கும், முஸ்லிம்களுக்கும் அச்சுறுத் தலாக இருந்து வருகிறது.ஹகியா சோபியா வெறும் பள்ளிவாசல் மட்டும் இல்லை. உலகம் முழுக்க விரிவடைந்த உலக முஸ்லிம்களின் தலைமையாக இருந்த ஓட்டமன் சாம்ராஜ் ஜியத்தின் மிக முக்கியமான அடையாளம். இதை நீங்கள் எப்படி மியூசியமாக மாற்றலாம் என்ற தொடர் வாதம் முன்னெடுக்கப்பட்டே வந்தது.

## எர்துகானின் அதிரடி முடிவு

துருக்கி ஹகியா சோபியா மியூசியமாக மாற்றப்பட்ட பிறகு இதன் மீது கிறிஸ்துவர் களின் UNESCO என்ற போர்வையில் பெரு மளவில் இருந்தது. அந்த ஆதிக்கத்தின் விளைவு இன்று ஒட்டுமொத்த ஊடகங்களும் சோபியா பள்ளிவாசலாக இருந்தது என்பதை குறிப்பிடா மல் சோபியா சர்ச் என்று எழுதுகிறார்கள்.

500 ஆண்டுகளாக எந்த சிறு பிளவும் இல்லாமல் முஸ்லிம்களின் வழிபாட்டு தலமாக திகழ்ந்து வந்த சோபியா பள்ளிவாசல் நம் கண் முன்னால் மியூசியமாக மாற்றம் அடைந்ததால் கிறிஸ்துவ உலகம் அதனை எங்கள் சர்ச் என உரிமை கோரும் நிலைக்கு வந்திருக்கிறது.23 மார்ச் 2019ல் துருக்கி அதிபர் எர்துகான் ஹாகியா சோபியா மீண்டும் பள்ளிவாசலாக மாற்றப்படும் என கருத்து வைத்த போது கிறிஸ்துவ உலகில் பலரும் ஹகியா எங்களது சொத்து என்று குரல் எழுப்பினார்கள்.

அப்போது அவர்களிடம், " ஹகியா உலக இஸ்லாமியர்களின், ஓட்டமன் சாம்ராஜ்ஜியத் தின் அடையாளம். உங்கள் குரல்களில் நியாயம் எப்போதும் இருந்தது இல்லை. ஒவ்வொரு முறையும் உலக முஸ்லிம்களின் புண்ணியஸ் தலமான அல் அக்ஸா பள்ளிவாசல் மீது இஸ்ரேல் தாக்குதல் நிகழ்த்தும் போது ஏன் முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஆக்கிரமிக்கப்படுகிறது என்று பேசவில்லை?.. உங்கள் அரசியலுக்காக எங்கள் அடையாளங்களை இழக்க முடியாது என்றார்"

துருக்கி நீதிமன்றத்தில் ஹகியா மியூசியத்தை பள்ளிவாசலாக மாற்றலாம் என்று உத்தரவு வந்த பிறகு மக்களிடம் பேசிய எர்துகான், " இனி ஹகியா சோபியாவில் தொழுகை நடைபெறும். அனைத்து மதத்தை சார்ந்தவர்களுக்கும் அனுமதி இருக்கிறது. எப்போதும் ஹகியா சுற்றுலாதலமாகவே இருக்கும். நாங்கள் எங்கள் அடையாளங்களை எங்களுடையதாக மாற்றியிருக்கிறோமே தவிர இதுவரை மற்ற மதத்தவர் பின்பற்றி வந்த உரிமைகளில் எந்த தடையும் இல்லை." என்று கூறினார்.(ஹகியா சோபியா மியூசியமாக இருக்கும்ன்போது எப்படி அனைத்து மதத்தவர்களுக்கும் அனுமதி இருந்ததோ அதே போல் அனுமதி இருக்கிறது.)

நமது அடையாளங்களை நாம் பாதுகாப் போம் நூற்றாண்டுகளுக்கு முன்பு என்ன நிகழ்ந்தது என்பதை பற்றியான ஆராய்ச்சிகளில் முரண்பட வாய்ப்பிருக்கிறது. ஆனால், கடந்த 100 ஆண்டுகளின் வரலாறு மிகத்தெளிவாக நம் கண் முன்னால் இருக்கிறது. அதில் பல நூறு மசூதிகள், சர்ஸ்களாக வெவ்வேறு வழிபாட்டு தலங்களாக மாற்றப்பட்டிருக்கிறது, அதை எந்த முஸ்லிம் தலைவர்களும் மீண்டும் மசூதியாக மாற்ற கோரவில்லை.

ஆனால், முஸ்லிம்களின் அடையாளங்களாக இருந்து அவர்கள் கைகளில் இருந்து பறிபோகும் நிலைகளில் இருக்கும் வரலாற்றையாவது பாதுகாக்க வேண்டும். ●

**500** ஆண்டுகால வரலாற்றை கொண்ட ஹகியா சோபியா பள்ளிவாசல் *1934*ல் துருக்கிய அதிபர் கமால் அதாதுர்க்கின் முடிவால் அருங்காட்சியமாக மாற்றப்பட்டது. அதனால் அன்று முஸ்லிம்கள் இழந்த வழிபாட்டு உரிமை தற்போது தான் மீட்டெடுக்கப பட்டிருக்கிறது.

### இந்த அதாதுர்க் யார்?..

துருக்கி உருவாக காரணமாக இருந்ததாக கூறப்படும் அதாதுர்க் ஒரு சர்வாதிகாரத்துடன் தான் ஆட்சியை நடத்தினார். முஸ்லிம்களுக்கு எதிராகவே தன்னுடைய ஆட்சி முழுவதையும் அமைத்துக் கொண்டார்.

*1920* களுக்கு முன் உலகத்தில் உள்ள முஸ்லிம்களுக்கெல்லாம் ஒரு தலைமையொன்று இருந்தது. அதனை கிலாபத் (முஸ்லிம்களின் தலைமை) என்று கருதி வந்தனர் உலக முஸ்லிம்கள். ஆனால், இதனை தகர்ப்பதற் காகவே உருவாக்கப்பட்ட முதல் உலகப்போரில் முஸ்லிம்கள் பெரிய தோல்வியை சந்தித்தனர்.


இந்த தோல்வியை சாதகமாக பயன்படுத்தி கிலாபத்தை மொத்தமாக கலைத்தனர் கிறிஸ்துவ நாடுகள். இராணுவ தளபதியாக இருந்த கமால் அதாதுர்க் இதனை தன் தேசியவாத சிந்தனையை காரணம் காட்டி துருக்கியை தனி செகியூலர் நாடாக அறிவித்தார். இவை அனைத்தையும் கிலாபத்தை வீழ்த்திய கிறிஸ்துவ நாடுகளோடு கைக்கோர்த்து செய்தார்.

துருக்கியின் ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு இன்றுடன் கிலாபத் (முஸ்லிம்களின் ஒரே தலைமை) முடிவுக்கு வருகிறது என அறிவித்தார். அத்துடன் இஸ்லாத்தின் வழிபாட்டு முறை களையும், கொள்கைகளையும் கேலி செய்தார். உடனே இவரை மதச்சார்பற்ற வாதி என்று உலகமே தலையில் தூக்கி வைத்து கொண்டாடியது.

பள்ளிவாசல்களில் பாங்கு அரபி மொழியில் சொல்வதற்கு தடை விதித்தார். உலகம் முழுக்க இருக்கும் பள்ளிவாசல்களில் பாங்கு அரபி மொழியில் தான் ஒலிக்கும்,.காரணம், நீங்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த நாட்டை சேர்ந்தவராக இருந்தாலும் இங்கே மசூதி இருக்கிறது தொழுது விட்டு செல்லுங்கள் என்று சொல்லத்தான். ஆனால், மசூதிகளில் பாங்கை அரபியில் ஒலிக்க தடை விதித்தார் அதாதுர்க்.

அதே போல், முஸ்லிம் பெண்கள் தலையை மறைக்கும் முறையை கேலி செய்தார். பொது இடங்களில் பெண்கள் தலையை மறைக்க கூடாது என்று சட்டம் இயற்றினார்.

துருக்கி முஸ்லிம்கள் கலாச்சார ரீதியாக அணியக்கூடிய பெரிய தொப்பிகளை போடக் கூடாது என தடை செய்தார்.



துருக்கியின் பழக்கத்தில் அரபி மொழி எதிலும் இருக்க கூடாது என்று ஆணையிட்டார். காரணம், அரபி மொழியை கற்றுக்கொள்வதால் குரான் மீது ஈர்ப்பு ஏற்படும் என நம்பினார். அரபு நாடுகளிலிருந்து தனித்து இருக்கவும் இதை செய்தார். நாடு முழுக்க இருந்த இஸ்லாமிய சட்ட நீதிமன்றங்களை மூடினார்.

மதரசாக்கள் நடத்தக் கூடாது. மசூதிகள் முழுக்க தன்னிச்சையாக இயங்க கூடாது அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்று ஆணையிட்டார்.

இன்னும் முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களை, முஸ்லிம்களின் பண்பாட்டு கலாச்சாரங்களை அழிக்கும் விதமாக ஆணை பிறப்பித்து சர்வாதிகார ஆட்சி செய்தார்.

தமிழகத்தில் இருக்கும் மக்களே சிந்தியுங்கள்," இந்துக்கள் அதிகமாக இருக்கும் இந்தியாவில் இந்து மத சடங்குகளை செய்வதற்கு அனுமதி யில்லை. திருநீறு போன்ற இந்து மத அடை யாளங்களை அணிந்து வரக்கூடாது என இந்தியாவின் அதிபர் சட்டம் இயற்றினால் அவரை மதச்சார்பற்றவர் என ஏற்றுக்கொள் வோமா?.." ஆனால், அவரைத்தான் இன்று வரலாறு தெரியாமல் மதச்சார்பற்றவர் என புகழ்கிறார்கள்.

சரி, ஹகியா சோபியாவிற்கு வருவோம். முதல் உலகப் போரில் தோல்வியடைந்து தனி நாட்டின் அதிபரான அதாதுர்க் கிறிஸ்துவ நாடுகளுக்கு சேவை செய்ய ஹகியா சோபியா என்ற நெடுங்காலம் பள்ளிவாசலாக, துருக்கி முஸ்லிம்களின் கலாச்சாரமாக இருந்த பள்ளிவாசலை அருங்காட்சியமாக மாற்றி உத்தரவிடுகிறார்.

முஸ்லிம்களின் வழிபாட்டுத்தலத்தை, முஸ்லிம்கள் முதல் உலகப்போரில் பெற்ற தோல்வியின் காரணமாக எதிராளிகளுக்கு சேவை செய்ய முஸ்லிம்களின் வழிபாட்டு உரிமையை தாரை வார்த்தார் அதாதுர்க்.

## அதாதுர்க்கின் தனிப்பட்ட வாழ்க்கை முறை

கமால் அதாதுர்க்கின் தனிப்பட்ட வாழ்க்கையில் நமக்கு என்ன அக்கறை!.. அவர் எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். ஆனால், இன்று மசூதியை தாரை வார்த்ததற்காக அவரை ஒட்டுமொத்தமாக மதச்சார்பற்றவர், உத்தமர் என தூக்கிக் கொண்டாடுவதால் இதனை பதிவிடுகிறோம்.

கமால் அதாதுர்க் அதிக குடிபழக்கம் கொண்டவர். அது மட்டுமல்ல, அவர் ஒரு ஓரினைச்சேர்க்கையாளர். விக்கிலீக்ஸ் என்ற இணையம் கமால் அதாதுர்க்கு நெருக்கமாக இருந்த ஆண்டர்சன் என்ற உளவாளியின் தகவல்களை விரிவாக பதிவு செய்திருக்கிறது.

அதில், அதாதுர்க் மிக அதிகமான குடிபழக்கம் கொண்டவர். தொடக்கத்தில் அதிகமான பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தார். அதன் பிறகு இவர் விரும்பிய பெண்கள் யாரும் இவரை விரும்பாத காரணத்தால் ஆண்களின் மீதே இவருக்கு ஈர்ப்பு ஏற்பட்டது. அதனால் ஓரினைச் சேர்க்கையாளராக இருந்து வந்தார் என்று குறிப்பிட்டிருக்கிறது.

இப்படியொரு ஒழுக்க சீலரை தான் முஸ்லிம்களின் மசூதியை தாரைவார்த்தற்காக கொண்டாடி மகிழ்கின்றன மேலாதிக்க நாடுகள்.

இங்கு இஸ்லாத்தை குறைகூற தமிழகத்தில் ஒரு வேலூர் இப்ராஹிம் இருப்பது போல துருக்கியில் ஒரு கமால் அதாதுர்க் கிடைத்தார். அதை வைத்து முழுவதையும் சாதித்து விட்டனர்.

## குற்றச்சாட்டுகளுக்கான பதில்

பாபரி மஸ்ஜித்திற்கு கோவப்படும் முஸ்லிம்களே நீங்கள் ஏன் சோபியா வை ஆதரிக்கிறீர்கள்?..

அருங்காட்சியகமாக இருந்து தற்போது சோபியா பள்ளிவாசலாக மாறுவதை ஆதரிக்கும் இஸ்லாமியர்களே, பாபரி பள்ளிவாசல் மட்டும் ராமர் கோவிலாக மாற்றினால் கசக்குதோ என்று சிலர் கேள்வி எழுப்புகிறார்கள். அவர்களுக்கான பதில்,

பாபரி பள்ளிவாசல் கோவிலின் மீது கட்டப் பட்டதல்ல என்பது தான் இந்திய உச்சநீதி மன்றத்தின்தீர்ப்பு. அப்படி இருந்த போதும்பாபரி பள்ளிவாசலுக்கான நியாயம் கிடைக்கவில்லை.

அதுதான் நம் நாட்டின் நீதிமன்றம்.

ஹகியா சோபியா பள்ளிவாசல் சர்ச் ஆக இருந்து மசூதியாக மாற்றப்படவில்லை. மசூதியாக இருந்தது அருங்காட்சியகமாக அநியாயமாக மாற்றப்பட்டது. அது மீண்டும் தற்போது பழைய நிலைக்கு திரும்பியிருக்கிறது அவ்வளவே.

இல்லை, அது கி.பி 530 ஆம் ஆண்டு சர்ச் ஆக தான் இருந்தது அதன் பிறகு 500 ஆண்டுகளுக்கு முன் இஸ்லாமியர்கள் மசூதியை சர்ச் ஆக மாற்றினார்கள் என்று வாதம் வைத்தால் ஹகியா சோபியா சர்ச் ஆக மாறுவதற்கு முன் ரோமர் கோவிலாக இருந்தது அதனால் ரோமர் கோவிலாக தானே மாற்ற வேண்டும்? இப்படி சிந்திக்க தொடங்கினால் தீர்வு எப்போது கிடைக்கும்.

500 ஆண்டுகாலத்திற்கு முன்பாக, 1000 ஆண்டு காலத்திற்கு முன்பாக நடந்தவற்றில் நமக்கு குழப்பம் இருக்கலாம். ஆனால், கடந்த 100 வருட காலம் நடந்தவற்றை உலகம் அனைத்தையும் மிக தெளிவாக பதிவு செய்திருக்கிறது.

இந்த நூற்றாண்டில் எங்கள்(முஸ்லிம்கள்) கண் முன்னால் ஹகியா சோபியாவும் மசூதியாக தான் இருந்தது. பாபரி மசூதியும் மசூதியாகவும் இருந்தது. இந்தியாவில் நேர்மையும் உண்மையும் எடுபடாத காரணத்தால் பாபரி மசூதியை மீட்க முடியவில்லை. ஆனால், ஹகியா பள்ளிவாசலை துருக்கி அரசு மீட்டிருக்கிறது.

## 500 வருடங்களுக்கு முன் தோற்றவர்களிடம் எழுதி வாங்கப்பட்டது நியாயமா?

500 வருடங்களுக்கு முன் ஹகியா சோபியா பள்ளிவாசல் நீதியாக விலை கொடுத்து வாங்கப்பட்டது என்று பத்திரத்துடன் வரும் செய்திகளை முஸ்லிம்கள் பதிவு செய்ய, தோற்றவர்களை மிரட்டி வாங்கிரதெல்லாம் அநியாயம் இல்லையா என்று கேள்வி எழுப்புகிறார்கள்.

முதலாவது, மிரட்டி வாங்க வேண்டும் என நினைத்தால் ஏன் காசு கொடுத்து தவணை முறையில் வாங்க வேண்டும்?.. மிரட்டி பறிக்க நினைத்தால் பணம் கொடுக்கிறேன், அதுவும் தவனை முறையில் தந்து விடுகிறேன் என்று எங்காவது வியாபரம் நடக்குமா?..

சரி, இதிலும் ஏதோ ஒரு லாஜிக் வைக்கிறது என்று எடுத்துக் கொண்டால் 1934ல் முதல் உலகப்போரில் இஸ்லாமியர்கள் தோற்றுவிட்டதால் மிரட்டி மாற்றப்பட்டது தானே ஹகியா பள்ளிவாசல். அதற்கு யார் குரல் கொடுப்பது?

சரி, இதுவரை எத்தனை மசூதிகள் சர்ச்சாக மாற்றப்பட்டிருக்கிறது. அதனை எல்லாம் முஸ்லிம்கள் மீட்க வேண்டும் என்று என்றாவது குரல் எழுப்பியிருக்கிறார்களா?.. மாட்டார்கள். காரணம், அது 500 ஆண்டு, 1000 ஆண்டு பழைய காலங்களில் நடந்தது. அதற்கு இன்று நீதி கோர முடியாது என்ற புரிதல் முஸ்லிம்களிடம் இருக்கிறது. அதனால் கேள்வி எழுப்புவதில்லை.

500 ஆண்டுகளுக்கு முன்பு போகட்டும் இந்த 20ம் நூற்றாண்டில் எத்துனை மசூதிகள் சர்ச்சாக வெவ்வேறு வழிபாட்டு தலங்களாக மாற்றப்பட்டிருக்கிறது. அதற்கு எப்போதாவது மற்றவர்கள் குரல் எழுப்பியிருக்கிறார்களா?.. ஈராக், சிரியா, பாலஸ்தீன் என முஸ்லிம் நாடுகள் சூரையாடப்பட்டு மசூதிகள் வேட்டையாடப்படுகிறதே அப்போதெல்லாம் எங்கே போனது இந்த மதச்சார்பற்ற குரல்.

முஸ்லிம்களின் மிக முக்கிய வழிபாட்டுத் தலமான பைத்துல் முகத்தஸை இஸ்ரேலிய அரசு ஆக்கிரமித்து வைத்திருக்கிறதே, அதற்கு எதிராக குரல் எழுப்பபடுகிறதா?

இதுவெல்லாம் எங்களுக்கு கவலையில்லை. ஆனால் முஸ்லிம்கள் 500 ஆண்டுகளுக்கு முன்பு இதை செய்து விட்டார்கள் என்று புரளியை கிளப்பி இருக்கும் முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலங்களையும் அழித்து விட நினைப்பதெல்லாம் என்ன நியாயம்?

இந்த ஹகியா சோபியா பள்ளிவாசலுக்கு எதிராக பேசுபவர்கள் இரண்டு வகையாக இருக்கிறார்கள். ஒன்று, வரலாறு சரியாக தெரியாதவர்கள். இரண்டாது, முஸ்லிம் வெறுப்பை பிரதானமாக கொண்டவர்கள். இதில் வரலாறு சரியாக தெரியாவதர்களுக்கு இந்த பதில் உதவும். ஆனால், இரண்டாம் வகையினருக்கு கஷ்டம், அவர்கள் உலகமே வேறுவிதம்.

ஹகியா சோபியா வரலாற்றை படிக்க - http://vaigaraivelichamonline.com/?p=1099

**- அபூ சித்திக்.**



# மியூசியமாக இருந்த மசூதி மட்டுமல்ல சர்ச்'ம் மாற்றப்பட்டிருக்கிறது

ஹகியா சோஃபியா அருங்காட்சியகத்தை மீண்டும் ஓர் இறைவனை தொழும் இடமாக முறைப்படி (எதிர் வாதத்திற்கு இடம் அளிக்கும் நீதிமன்றம் வாயிலாக) அயா சோஃபியா பள்ளிவாசலாக (Ayasofya) மாற்றியதை எதிர்த்து, துருக்கியில் விரல்விட்டு என்னும் எண்ணிக்கையில் இருக்கும் கிறிஸ்தவ மக்களின் பிரதிநிதிகள் துணிவுடன் மிரட்டல் தொனியில் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இஸ்லாத்திற்கு எதிராக கிறிஸ்தவர்கள் அணி திரள்வார்கள் என இஸ்தான்புல் நகரத்தின் தலைமைப் பாதிரி பார்தலோமெவ்-I (Bartholomew-I) கூறியுள்ளார். இவர்கள் 957 மாவட்டங்களை கொண்ட துருக்கியின் மக்கள் தொகையில் 0.1 சதவீதத்தினர்.அதாவது சுமார் 8 கோடியே 40 லட்சம் மக்கள் தொகையில், ஒரு லட்சம் மக்கள் தொகையை கொண்டுள்ளனர். இதில் 7000 பிராடஸ்டண்ட் கிறிஸ்தவர்களும்,2500 கிரீக் ஆர்தோடக்ஸ் கிறிஸ்தவர்களும் 90,000 அர்மீனிய ஆர்தோடக்ஸ் கிறிஸ்தவர்களும் அடங்குவர்.

உலகின் குறிப்பாக கிரீஸ், ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளின் கிறிஸ்துவ பாதிரிகளும், அரசியல்வாதிகளும் வருத்தம், கருத்து, மறுபரிசீலனை போன்ற வகை வகையான வார்த்தைகளால் தங்கள் உள்ளக்கிடக்கை வெளிப்படுத்தியுள்ளனர்.இது அவர்களின் மதசார்பற்ற சாயத்தை வெளுக்க செய்துவிட்டது.

ஜனநாயகம், மதச்சார்பின்மை, சோசலிசம் போன்றவைகளின் வருகையால் கடந்த 150 வருடங்களில் மனிதன் இதுவரை இல்லாத புது உலகத்தை, நவீன நாகரீகத்தை படைத்துள்ளான் என மார்தட்டிக் கொள்ளப்படுகிறது. இக்கால கட்டத்தில்தான் ஏராளமான பிற வழிபாட்டுத் தலங்கள் வெள்ளை கிறிஸ்தவர்களால் இடித்து தரைமாக்க பட்டுள்ளதை அவர்களின் பதிவே நமக்கு சாட்சியாகும்.

கடந்த 150 வருடங்களில் நடந்த வழிபாட்டுத் தலங்கள் மீதான வெள்ளை கிறிஸ்தவர்களின்

## ஹகியா சோஃபியா விஷயத்தில் முஸ்லிம்களுக்கு வழிகாட்டும் வெள்ளை கிறிஸ்தவர்கள்

தாக்குதல்கள் நன்கு வரையறுக்கப்பட்ட, ஆதாரபூர்வமாக உள்ளது. இதையெல்லாம் முற்போக்குவாதிகளாக அழைத்துக் கொள்ளும் இவர்கள் சரி செய்துவிட்டு பிறருக்கு ஆலோசனை கூறவேண்டும்.

கடந்த 2010- ஆகஸ்ட் மாதத்தில் டார்சஸ் (Tarsus) என்ற நகரில் மியூசியமாக இருந்த செயின்ட் பால் சர்ச்சை (st.paul's church) மீண்டும் வழிபாட்டுத்தலமாக மாற்றி உத்தர விட்டார் துருக்கி அதிபர் எர்டோகான்.

இதைத்தொடர்ந்து ஆகஸ்ட் 15-ல் இஸ்தான்புல் நகரின் தலைமை பாதிரியார் பார்தோலோமேவ் தலைமையில், 1500 கிறிஸ்த வர்கள் படையாக பெரும்பாலும் பகை நாடாக கருதப்படும் கிரீஸ் மற்றும் ரஷ்யா போன்ற வெளிநாட்டை சேர்ந்த கிறிஸ்தவர்களுடன் இச்சர்ச்சுக்கு சென்று வழிபாட்டை ஆரம்பித்து வைத்தார்.இன்றும் அது சர்ச்சாக தொடர்கிறது.

கிரீஸ் நாட்டின் நகரமான ஏதெனில் (முன்னாள் உதுமானிய ஆட்சிப்பகுதி) மியூசிய மாக மாற்றப்பட்ட ஃபத்தேயே பள்ளிவாசலை (fethiye mosque) மீண்டும் பள்ளிவாசலாக மாற்ற வேண்டும் என்ற துருக்கியின் கோரிக்கை பத்து ஆண்டுகள் ஆனபின்பும் கண்டுகொள்ளாமல் இருப்பது கிறிஸ்தவர்களின் மனப்போக்கை படம் பிடித்து காட்டுகிறது.

அயா சோஃபியா பள்ளிவாசலை எதிர்ப்பவர்கள் இதை நன்றியுடன் நினைக்க வேண்டும்.

மதசார்பற்ற வர்களாக தங்களைக் காட்டிக் கொள்ளும் ஐரோப்பிய கிறிஸ்தவ தலைவர்கள், செயின்ட் பால் சர்ச் திறக்கப்பட்டதை எதிர்க்க வேண்டியது தானே?.இது கமால் அத்தாதுர்கின் தொலைநோக்குப் பார்வையையும், அவரின் மதசார்பற்ற குணத்திற்கு விழுந்த பெரும் அடி என யாரும் கருத்து தெரிவிக்கவில்லை.

செயின்ட் பால் சர்ச்சை மீண்டும் வழி பாட்டுத்தலமாக மாற்றி,தான் எந்த மத நம்பிக் கைக்கும் எதிரானவன் அல்ல என்பதை துருக்கி அதிபர் எர்டோகான் காட்டினார். இது சம்பந்தமாக சலசலப்பு ஏற்பட்டபோது, 500 அல்லது 2000 பேர் கூடி தங்கள் மத கடமையை செய்வது, எந்த பக்கவிளைவையும் ஏற்படுத்தபோவதில்லை என தன் மக்களுக்கு சமாதானம் செய்தார். கிறிஸ்தவ சிறுபான்மை யினருக்கு ஆதரவாளராக இருந்தார். தனக்கு ஓட்டுப் போட்டவர்களின் அதிபராக மட்டும் இருக்க விரும்பவில்லை. பொதுவானவராக இருந்தார்.



இது நடந்து 10 வருடங்களுக்குப் பிறகே, தான் பின்பற்றும் சமயத்தின் வழிபாட்டுதலத்தை நீதிமன்ற உத்தரவுபடி மீட்டுள்ளார். சிறுபான்மை கிறிஸ்தவர்களுக்கு முன்னுரிமையும் பெரு பான்மை முஸ்லிம்களுக்கு காலதாமதமும் செய் துள்ளார். சவலைக் குழந்தை க்கு முன்னுரிமை கொடுப்பாள் பொறுப்புள்ள தாய்.

கிறிஸ்தவ உலகின் எதிர்ப்பை எதிர் கொண்ட துருக்கி அதிபர் எர்டோகான்," துருக்கிய மக்களாகிய நாங்கள், முஸ்லிமல்லாதவர்களின் வழிபாட்டு தலங்களை கண்ணியப்படுத்து கிறோம். ஆனால் உதுமானியப் கிலாஃபத் தில் வரலாற்று கலைச்செல்வங்கள் பாதுகாக்கப் படாமல் கிழக்கு ஐரோப்பா மற்றும் பால்கன் நாடுகளில் இருந்து படிப்படியாக மறைந்து போய்விட்டது," என வருத்தம் தெரிவித்துள்ளார்.

மதச்சார்பின்மை, கருத்து சுதந்திரம் போன்ற போர்வையை போர்த்திக்கொண்டு ஏமாற்றுவதும், முஸ்லிம்களின் அடையாளங் களை கண்டு கொள்ளப்படாமல் விடுவதா லேயே அழிக்கப்படுவது போன்ற தந்திரங்கள் வழிகாட்டுதலாக இருப்பது முஸ்லிம்களுக்கு ஒரு எச்சரிக்கை மணியாகும்.

**- கி. ஜாகிர்**

(வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் - மதுரை)

# மதுபான கேளிக்கை விடுதியாக மாறும் மசூதி

# அயா சோபியா பள்ளிவாசலுக்கு

## குரல் எழுப்பியவர்கள் எங்கே போனார்கள்?

முதல் உலகப்போருக்கு பின் முஸ்லிம் உலகை வீழ்த்தி இஸ்ரேல் என்ற நாட்டை பாலஸ்தீனை ஆக்கிரமித்து உருவாக்கின கிறிஸ்துவ நாடுகள். இஸ்ரேலின் ஆக்கிரமிப்பின் போது பல்வேறு மசூதிகள் ஆக்கிரமிக்கப்பட்டு வெவ்வேறு பயன்பாட்டுக்கு பயன்படுத்தப் பட்டன.

அதில் மிக முக்கியமானது அல்-அஹ்மர் மசூதி. இந்த மசூதியை தற்போது இஸ்ரேல் நிர்வாகம் மதுபானக் கூடமாகவும், கேளிக்கை விடுதியாகவும் மாற்றியிருக்கிறது. 1948ல் இந்த மசூதியை கையகப்படுத்திய இஸ்ரேல் முதலில் மசூதியை யூதக் கல்விக்கூடமாகவும், பிறகு தேர்தல் பரப்புரை செய்யும் இடமாகவும், தற்போது மதுபான விடுதியாகவும் மாற்றி யிருக்கிறது.

சில நாட்களுக்கு முன் அயா சோபியா என்ற அருங்காட்சியமாக இருந்த பள்ளி வாசலை மீண்டும் மீட்டு பள்ளிவாசலாக அறிவித்தது துருக்கிய அரசு. பள்ளிவாசலாக மாற்றப்பட்டிருக்கிறதே ஒழிய அருங்காட்சிய மாக இருந்த போது என்னென்ன உரிமைகள் இருந்தனவோ அவை அனைத்தும் தற்போதும் இருக்கிறது என துருக்கி அரசு வெளியிட்ட அறிவிப்பை உலகில் உள்ள கிறிஸ்துவ நாடு களும், மதச் சார்பற்றவர்கள் என்ற போர்வையில் ஒளிந்து கொண்டிருக்கும் அனைவரும் அநியாயம் நிகத்தப்பட்டது என்று கண்டித்தார்கள். கவனிக் கவும், இதே துருக்கிய அரசு 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே அருங்காட்சியமாக இருந்த சர்சையும் மீண்டும் சர்ச் ஆக மாற்றியது, அப்போது யாரும் ஒருவர் கூட கண்டித்து குரல் எழுப்பவில்லை.





அதையே தற்போதும் செய்திருக்கிறார்கள். இஸ்ரேலிய அரசு முஸ்லிம்களின் நீண்ட வரலாறு கொண்ட வழிபாட்டுதலத்தை கேளிக்கை விடுதியாக மாற்றிய நடவடிக்கையை யாரும் கேள்வி கூட கேட்கவில்லை.

துருக்கிய அரசு, அயா சோபியா மீண்டும் மசூதியாக இயங்கும் என்று சொன்னவுடன்,

போப் பிரான்சிஸ், அயா சோபியாவை நினைக்கையில் மனம் வருந்துகிறது, இது தவறான நடவடிக்கை என்றார்.

ரஷ்யாவின் ஆர்தோடக்ஸ் சர்ச், துருக்கியின் இந்த முடிவு கோடிக்கணக்கான கிறிஸ்துவர்களின் மனதில் காயத்தை உண்டாக்கியிருக்கிறது. அதனால் இந்த நடவடிக்கையை பின்வாங்க வேண்டும் என்றார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு தலைவர் ஜோசப், இந்த முடிவு மிகவும் வருந்தத்தக்கது என்றார்.

இன்னும் பலர் இது தவறு, மதசார்பின்மைக்கு எதிரானது என இந்தியாவில் இருந்தெல்லாம் கூட குரல் எழுப்பினார்கள்.

ஆனால், அவர்களின் குரல் எதுவும் முஸ்லிம்களின் வழிபாட்டுத்தலம், மதுபான கேளிக்கை விடுதியாக மாற்றப்பட்டிருக்கும் போது எழுவில்லை.


இத்தகைய போலி முகமூடிகள் தான் மதச்சார்பற்றவர்கள் என்று தங்களை கூறிக் கொள்கிறார்கள்.

(source - muslim mirror)

**- அபூ சித்திக்.**


# இப்போது பரபரப்பான விற்பனையில்



# டெல்லி காவல்துறையின்
# முஸ்லிம் வேட்டை

இந்தியாவின் தலைநகர் டெல்லியில் இந்துத்துவ சக்திகள் காவல்துறையுடன் இணைந்து நிகழ்த்திய கோர கலவரத்தில் இந்த வருட பிப்ரவரியில் 53 உயிர்கள் பலியாகின. இதில் 40 பேர் முஸ்லிம்கள்.

'இந்த கலவரம் மிகுந்த திட்டமிடலுடன் நிகழ்த்தப்பட்டது, இதனை விரிவாக நாம் இதற்கு முந்தைய வைகறை வெளிச்சம் இதழில் ஆதாரப்பூர்வமாக வெளிப்படுத்தியிருந்தோம்.

கலவரம் நிகழ்ந்து மூன்று மாதத்திற்கு மேல் ஆன பிறகு, தற்போது டெல்லி காவல்துறை, கலவரத்தின் கோரத்தில் யாரெல்லாம் பாதிக்கப் பட்டார்களோ அவர்களையே ஆள் தூக்கிச் சட்டங்கள் மூலம் பழி வாங்கத் தொடங்கி யிருக்கிறது,

டெல்லி காவல்துறையின் இந்த கொடுமையான போக்கை ஆராய்வதற்கு முன் 53 உயிர்கள் கொடூரமாக கொல்லப்பட்ட கலவரத்தில் டெல்லி காவல்துறையின் பங்கு என்ன என்பதையும் நியாயகப்படுத்திக் கொள் வோம். அப்போது தான் வேலிக்கு ஓணான் சாட்சி என்பது போல குற்றம் செய்தவர்களே அந்த குற்றத்தை விசாரிக்கும் வினோதத்தை நாம் அறிய முடியும்.

### காவலர்கள் கண் முன் கொல்லப்பட்ட முஸ்லிம் இளைஞன்

28 வயதான முபாரக் நெஞ்சில் சுடப்பட்டு நடு வீதியில் பிணமாக்கப்பட்டார். முபாரக்கின் உடல் கூட கேட்பாரற்று வீதியில் போடப்பட்டி ருந்தது. காவலர்களுக்கு அழைத்து சொல்லியும், ஆம்புலன்சுக்கு அழைத்து சொல்லியும் மூன்று மணி நேரத்திற்கு பிறகே உடலை எடுத்து சென்றார்கள்.

இந்த சம்பவத்தை நேரில் பார்த்த மக்கள் பத்திரிக்கையாளர்களிடம் சொல்லும் போது, கருப்பு ஜாக்கெட் அணிந்த ஒருவன் தான் இவரை சுட்டான். அப்போது காவலதிகாரிகள் இந்த சம்பவத்தை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள். சுட்டவன் கடந்து செல்லும் வரை காவலர்கள் அமைதியாகவே நின்றிருந்தார்கள். (print 26.02.2020)



## காவல்துறையினருடன் கைகோர்த்து கலவரம் செய்த பயங்கரவாதிகள்

காவல்துறையினர் மற்றும் பயங்கரவாதி களும் நிகழ்த்திய கோரத்தை கண்ணால் கண்ட கேரவன் பத்திரிக்கையாளர் கௌசல் ஷ்ரோஃப் இவ்வாறு விவரிக்கிறார்,

*"24 பிப்ரவரி மாலை 6 மணிக்கு டெல்லியின் யமுனா விஹார் பகுதிக்கு அருகில் உள்ள ஃபஹான் சர்வதேச பள்ளிக்கு அருகில் சிறிய அளவிலான காவலர்கள் நின்றிருந்தார்கள். ஏன் காவலர்கள் குவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று விசாரிக்கையில் அந்த பகுதியில் காலையில், முஸ்லிம்கள் பகுதியில் இருப்பவர்களுக்கும் சிஏஏ வை ஆதரித்து போராட்டம் நடத்திய வர்களுக்கும் இடையில் கலவரம் நடைபெற்ற தாக கூறினார்கள்.*

*சிறிது நேரத்திற்கு பிறகு 100 பேர் கொண்ட இந்துத்துவ கும்பல் ஒன்று அப்பகுதிக்கு வந்தது. அவர்களுடன் காவல்துறையினரும் இணைந்து கொண்டார்கள். நான் இந்துத்துவ கும்பலுக்கு பின்னால் ஒளிந்து கொண்டேன். காவலர்களும், அந்த கும்பலில் இருந்தவர்களும் முஸ்லிம்களை திட்டிக்கொண்டே கல்லெறிதலில் ஈடுபட்டனர்.*

*காவலர்களும் கும்பலுடன் இணைந்து ஜெய் ஸ்ரீ ராம் கோசத்துடன் கல்லெறிதலில் ஈடுபட்டனர். ஒவ்வொரு தாக்குதலுக்கும் பதில் தாக்குதலாக முஸ்லிம்கள் பகுதியிலிருந்தும் கல்லெறிதல் நிகழ்த்தினார்கள். பத்து நிமிடத்திற் கொரு முறை காவலர்களும் இந்துத்துவ கும்பலும் ஆக்ரோசமாக முன்னேறினார்கள். ஆனால் பதில் தாக்குதல் வந்ததால் பின் வாங்கினார்கள்.*

*அங்கே துப்பாக்கிகளில் சுடும் சத்தமும் கேட்டுக்கொண்டே இருந்தது. ஆனால் அது எங்கிருந்து வருகிறது என கண்டுபிடிக்க முடிய வில்லை. அங்கே இருந்த ஒரு பத்திரிக்கையாளர் துப்பாக்கியுடன் நிற்கும் நபரின் போட்டோவை தந்தார். அதில் ஒரு நபர் துப்பாக்கியுடன் முஸ்லிம் பகுதியான சாந்த்பக்கை நோக்கி சுட்டவாறு நின்றிருந்தார்.*

*இந்த கலவர சூழலுக்கு முன்பாக மாலை 5.30 மணிக்கு அங்கிருக்கும் தலைமை காவல் அதிகாரியிடம் நான் விசாரித்தேன். அவர் தன் பெயரை வெளியில் சொல்லக்கூடாது என்ற நிபந்தனையோடு, தன் மேலதிகாரிகள் தங்களை கைவிட்டதாகவும் இந்த கேவலமான நாய்கள் மருத்துவமனைகள், கடைகள், பள்ளிகள் என எல்லாவற்றையும் கொழுத்தி விட்டதாகவும் கூறினார். ஆனால் இதனை எந்த பிரிவினர் செய்தார்கள் என தெரியவில்லை என்றார்.*

*இறுதியாக இன்னும் சில இந்துத்துவ கும்பல் வாசிராபாத் சாலையிலிருந்து வந்து சேர்ந்து கொண்டார்கள். இம்முறை முஸ்லிம் பகுதியை நோக்கி முன்னேறிய காவல்துறையினரும், கலவரக்காரர்களும் பின்வாங்கவில்லை. சிறிது நேரத்தில் சாந்த்பாக் பகுதியில் போராட்டக் காரர்களின் பகுதி தீப்பிடித்து எரிந்தது. அவர்களின் டெண்ட் உட்பட அனைத்தும் எரிக்கப்பட்டது.*

*சிஏஏ எதிர்ப்பு போராட்டக்காரர்கள் அமர்ந்திருந்த இடம் முழுக்க எரிக்கப்பட்டது. அருகிலிருந்த வாகனங்கள் எரிக்கப்பட்டன. கலவரக்காரர்கள் கையில் ராடு, கத்தி போன்ற ஆயுதங்களுடன் முஸ்லிம் பகுதிக்குள் முன்னேறினார்கள்.*

*அவர்கள் முஸ்லிம் பகுதிக்குள் போகும் போது தொடர்ச்சியாக, "வந்தே மாதரம்" "மோடி மோடி" "ஜெய் ஸ்ரீ ராம்" "பாரதத்தின் துரோகி களை சுட்டுத்தள்ளுங்கள்" என்ற கோசத்தை கூறிக் கொண்டே சென்றார்கள். அங்கிருந்த பொருட்களை அடித்தும், தீ வைத்தும் கொளுத்தினார்கள்.*

*அப்பகுதியிலிருந்து 300 மீட்டர் தள்ளி இன்னொரு புதிய 100 பேர் கொண்ட கும்பல் நின்றிருந்தது. அவர்கள் யார் என கலவரக் காரர்களிடம் நான் கேட்க, "கவலை வேண்டாம் எல்லாம் நம் ஆட்கள் தான் எல்லோரும் இந்துக்கள். இந்த அனைத்து முஸ்லிம்களின் தாய்மார்களையும் இன்று வன்புணர்வு செய்யாமல் விடமாட்டோம்" என்று கூறினார். அருகிலிருந்த இன்னொரு கலவரக்காரர் "மடை யர்களே (நாகரிகம் கருதி இந்த வார்த்தையை உபயோக்கிறோம். மிக கேவலமான வார்த்தைகள் இங்கே கோசமாக போடப்பட்டது) சுதந்திரம் கேட்டீர்களே இதோ சுதந்திரம்" என்று கோசம் போட்டார்.*

பின்னர் இரண்டு மணி நேரம் கழித்து காவல்துறையினர் மெதுவாக கலவரக்காரர்களை கலைக்க தொடங்கினர். கலவரக்காரர்கள் அருகிலுள்ள பாஞ்சன்பூரா பகுதிக்குள்ளும் கடை வீதிகளுக்குள்ளும் புகுந்து கலைந்து சென்றனர்.

மாலை 7.30 மணி இருக்கும் போது ஃபஹான் பள்ளிக்கு அருகில் நூறு பேர் கொண்ட காவி கும்பல் நின்று கொண்டு குலாத்தி கம்யூனிகேஷன் கடைக்கு முன்னால் 50 வயது மதிக்கத்தக்க ஒரு முஸ்லிம் நபரை கொடூரமாக தாக்கிக் கொண்டிருந்தார்கள். அந்நபர் ஓட முயற்சிக்க அவரை பிடித்து கும்பலாக அடித்து கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே இருந்த ஒரு இந்து நபர் அந்த காவிக்கும்பலின் தலைவனிடம் அவர் நமது சகோதரர் அவரை ஏன் அடிக்கிறீர்கள் என சண்டைக்கு வர அவரையும் அடித்து விட்டு முஸ்லிம் நபரை கடுமையாக தாக்கிக் கொண்டிருந்தார்கள். அந்த முஸ்லிம் நபர் தப்பித்து ஓடினார். அவரை துரத்தி இருவர் சென்றனர். அவரை பிடித்தனரா, இல்லையா என்று என்னால் பார்க்க முடியவில்லை.

இந்த அத்தனை சம்பவத்தையும் காவலதிகாரிகள் பார்த்துக் கொண்டு அமைதியாக வேடிக்கை பார்த்தனர். தனி மனித தாக்குதல், கும்பல் தாக்குதல் எதனையும் காவலர்கள் கண்டிக்கவில்லை. இந்துத்துவ கும்பல் செய்யும் கலவரத்திற்கு எல்லாம் காவலர்கள் உடந்தையாக இருந்தனர்.

நான் அந்த நாள் முழுவதும் மஜ்பூர் மெட்ரோ நிலையம் செல்வதற்காக ஆதர்ஷ் மொஹல்லா, விஜய் பார்க், சட்டார் வாலி கலி, நூர் இலாஹி, பஹஜன்புரா, யமுனா விஹார் பகுதிகள் வழியாக சென்றேன். அந்த பகுதிகள் முழுக்க கலவரக்காரர்களுடன் காவல்துறையினர் இணைந்து நிற்பது தெரிந்தது. எப்படி உத்திர பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கெதிராக காவலதிகாரிகள் இந்துத்துவ கும்பலுடன் இணைந்து கொண்டார்களோ அதே நிலைப்பாட்டை டெல்லி காவல்துறையினர் எடுத்திருக்கிறார்கள். அதற்கேற்றவாறு மஜ்பூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் இந்துத்துவ கும்பல் " டெல்லி போலீஸ் வாழ்க " என்ற கோசத்தை எழுப்பியவாறு இருந்தனர்.

இரவு 8 மணிக்கு பிறகு கூட்டம் குறைந்தது. கல்லெறிதலும் நின்றது. சுற்றி பல்வேறு இடங்கள் தரைமட்ட மாக்கப்பட்டதற்கு நடுவில் மசூதி ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அதற்கு அருகில் 30 பேர் கொண்ட இந்துத்துவ கும்பல் நின்று கொண்டு, "இந்தியாவில் நீங்கள் வாழ வேண்டுமா, ஜெய் ஸ்ரீராம் நீங்கள் சொல்ல வேண்டும்" என்று கோசம் போட்டு கொண்டிருந்தார்கள். கும்பலில் ஒருவர் ஜெய் ஸ்ரீராம் சொல்பவர்களுக்கு லட்டு வழங்கி கொண்டிருந்தார். எல்லோரும் மகிழ்வுடன் மசூதி எரிந்து கொண்டிருக்க ஜெய் ஸ்ரீ ராம் கூறி லட்டுக்களை பகிர்ந்து கொண்டிருந்தார்கள்.

அப்போது கும்பலில் இருந்த ஒருவர் அருகிலிருந்த ஆட்டோவின் மீதேறி ஆட்டோவுக்கு தீ வைக்க முயன்றார். இந்துவின் சொத்துக்கு சேதாரம் வரக்கூடாது என கும்பலின் தலைவன் சொல்ல அந்த ஆட்டோவின் உரிமம் முஸ்லிம் பெயரில் தான் இருக்கிறது என்று கூறினார். கும்பலின் தலைவன் உங்கள் சக்தியை வீணாக்காதீர்கள். மசூதியை சேதப்படுத்துவதில் கவனம் செலுத்துங்கள் என்றார். அதன் பிறகு மசூதி முழுக்க எரிந்து கொண்டிருந்தது. அதனை காவலர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்." (The caravan 25.02.2020)

## சிசிடிவியை உடைத்து கலவரத்தை நிகழ்த்திய டெல்லி காவல்துறையினர்

டெல்லியின் வடகிழக்கு பகுதியில் இரண்டு நாட்களாக பெரிய அளவில் வன்முறை நிகழ்த்தப்பட்டது. இதில் கலவரக்காகரர்களும், காவலர்களும் நிகழ்த்தும் அநியாயங்கள் வெளியே தெரியக் கூடாதென காவல்திகாரிகள் வீதிகளில் வைக்கப்பட்டிருந்த சிசிடிவி கேமராக்களையும் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள்.

வீதிகளில் வைக்கப்பட்டது மட்டுமல்ல, திருடர்களிடமிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு கடைகளில், வீடுகளில் மாட்டியிருந்த சிசிடிவிக்களையும் காவல்துறையினர் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள்.

இதற்கு முன்பாக உத்திரபிரதேசத்திலும் இத்தகைய வன்முறை கட்டவிழ்த்து விட்ட போதும் காவலர்கள் முதலில் சிசிடிவியை உடைத்து மதரசாக்களில் புகுந்து அடித்தார்கள். அதே பாணியை டெல்லியிலும்



செய்திருக்கிறார்கள்.

காவல்துறையினரின் கலவரக்காரர்களுக்கு ஆதரவான செயல்கள் அனைத்தும் வீடியோக்களாக சமூக வலைத்தளங்களில் நிரம்பி இருக்கிறது.

இத்தனை மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்ட அதே டெல்லி காவல்துறை இன்று டெல்லி கலவரத்திற்கு காரணமானவர்களுக்கு தண்டனை தருவதாக கூறி முஸ்லிம்களையும், சிஏஏ எதிர்ப்பு போராட்டங்களுக்கு மையமாக இருந்த அறிவாளர்களையும் தங்களது அதிகார துஷ்பிரோகத்தின் காரணமாக பழி வாங்குகிறது.

## நடு ரோட்டில் கொலை செய்த காவல்துறை - வீடியோ இருந்தும் பயனில்லை

டெல்லி கலவரத்தின் கோரக்காட்சிகளில் ஒன்று, நான்கு முஸ்லிம் இளைஞர்கள் உயிருக்கு போராடிக் கொண்டு இருக்கும் போது டெல்லி காவல்துறையினர் அவர்களை மேலும் அடித்து தேசிய கீதம் பாடச்சொல்லி துன்புறுத்தினர். இது வீடியோவாக உலகம் முழுக்க சென்றடைந்தது.

அந்த வீடியோவில் இருந்த ஃபைசல் என்ற இளைஞன் அடுத்த நாளில் உயிரிழந்தான். அவனது இறப்புக்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை.

தற்போது டெல்லி காவல்துறை கலவரத்தை விசாரிக்கும் சூழலில் ஃபைசலை கொன்றவர்கள் யாரும் இல்லை. அவன் மருத்துவமனையில் இறந்து விட்டான். அவனது கொலையில் சந்தேகத்திடமாக யாரும் இல்லை என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்கிறது.

உலகமே வீடியோவில் நான்குக்கும் மேற்பட்ட காவலர்கள் ஈவு இரக்கமின்றி அடிக்கும் வீடியோவை பார்த்த போதும் காவல்துறை சந்தேகத்திற்கு இடமானவர்கள் யாரும் இல்லையென வழக்கை முடித்திருக்கிறது.

காவல்துறையின் முதற் தகவல் அறிக்கைப் படி, "ஃபைசல் கலவர கும்பலால் தாக்கப்பட்டு சிகிச்சைக்காக GTB மருத்துவமனையில் சேர்ந்தான். அதன் பிறகு அவனாகவே வீட்டுக்கு திரும்பி விட்டான். அவனை தேடி காவல்துறை வீட்டுக்கு போகவே அவன் லோக் நாயக் மருத்துவமனைக்கு சென்று விட்டதாக தெரிந்தது" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், ஃபைசலின் அம்மா கிஸ்மாத்துன் கூறுகிறார்...

"என் மகனை சிலர் GTB மருத்துவ மனையில் பார்த்ததாக கூறினார்கள். அங்கே என் மகன் மிக மோசமான நிலையில் இருந்தான். சாப்பாடாவது கொஞ்சம் தருகிறேன் என்றேன். என்னை மிரட்டி போக வைத்து விட்டார்கள் என்கிறார்."

ஃபைசலுடன் சேர்த்து கொண்டு செல்லப்பட்ட மற்றொரு இளைஞன் கூறும் போது,

"எங்களை காவல்துறை வண்டியில் ஏற்றி ஸ்டேஷனுக்கு அழைத்து சென்றார்கள். பிறகு நிஜிஙி மருத்துவமனையில் முதலுதவி மட்டும் கொடுத்து விட்டு மீண்டும் ஸ்டேசனுக்கே

அழைத்து சென்று விட்டார்கள். அங்கே தான் ஃபைசல் இறந்து விட்டான்" என்றார்.

ஆக, நடந்தது முழுக்க ஒன்றாக இருக்க காவல்துறையினரோ ஒரு கொலையையும் செய்து விட்டு தங்களுக்கு ஏற்றவாறு ஒரு கதையும் எழுதி அதை வைத்து வழக்கையும் முடித்து விட்டனர்.

தற்போது, காவல்துறை அதிகாரிகள் நேரில் கண்ட சாட்சிகளை ,உங்கள் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளுங்கள் என்று தொடர்ச்சியாக மிரட்டி வருகிறார்கள். The wire 22.06.2020

## புகார்களை வாங்க மறுக்கும் காவல்துறை – கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களின் புகார்கள் மற்றும் சாட்சியம்

டெல்லி கலவர தினத்தின் போது என்ன நடந்தது - ரூபினா பானுவின் நேரடி சாட்சியம்

"பிப்ரவரி 23ம் தேதி கரவால் நகருக்கு பிஜேபியை சேர்ந்த கபில் மிஸ்ரா வந்தார். அவர் தனது கூட்டாளிகளுடன் வந்திருந்தார். அவர்கள் அனைவரும் சேர்ந்து ஜாஃப்ராபாத்தில் கலவரத்தை தொடங்கினார்கள். அதன் பிறகு ஜாஃப்ராபாத் மெட்ரோ ஸ்டேஷனிலும் கலவரம் செய்தார்கள். அங்கிருந்து கபில் மிஷ்ரா கலவரத்தை பார்த்து கொண்டிருந்தார். அதன் பிறகு அங்கிருந்து சென்று விட்டார்.

பிப்ரவரி 24 ம் தேதி கலவரம் என்று அறிந்த பிறகு பெண்கள் அனைவரும் வீடுகளிலிருந்து வெளியேற ஆரம்பித்து விட்டார்கள். நானும் வெளியேறி விட்டேன். அப்படி வெளியேறும் போது அங்கே காவலதிகாரிகள் இருந்தனர். கிசிறி அனுஜ் ஷர்மா மற்றும் ஷிபிளி இருவரும் சிஏஏவுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களை அசிங்கமாக பேசிக் கொண்டிருந்தனர். அப்போது இங்கு என்ன நடக்கிறது என்று நாங்கள் அவர்களிடம் கேட்டோம். அதற்கு, நீங்கள் இங்கே சட்டத் திற்கு புறம்பான வேலைகளை செய்கிறீர்கள். அதனால் உங்களை அகற்ற வந்திருக்கிறோம் என்றனர். உடனே நான், சார் நாங்கள் இரண்டு மாதங்களாக இங்கே அமர்ந்திருக்கிறோம். நாங்கள் அப்படி என்ன சட்ட விரோதமாக நடந்து கொண்டோம்?.. சொல்லுங்கள் என்றேன்.

உடனே இங்கே பிரச்சனை உருவாயிருக் கிறது. கல்லெறிதல் நடந்திருக்கிறது. அதனால் பாதுகாப்புக்காக வந்தோம் என்றார்கள். உடனே நான், எங்கள் பாதுகாப்புக்கு தான் வந்தீர்கள் என்றால் எதற்கு லத்தி சார்ஜ் செய்கிறீர்கள்? என்றேன்.

அந்த நேரத்தில் கபில் சர்மாவிடமிருந்து SHOவின் போனுக்கு கால் வந்தது. அவர் அதை அனுஜ் சர்மாவுக்கு கொடுத்து, சார் கபில் மிஸ்ரா ஜி லைனில் இருப்பதாக கூறினார். போனை அனுஜ் சர்மா வாங்கி சிறிது தூரம் நகன்று கபில் மிஸ்ராவிடம் பேசினார்.

கபில் மிஸ்ராவிடம், "சார் நாங்கள் உங்கள் கட்டளைப்படியே நடக்கிறோம். கவலை வேண்டாம் இன்று இவர்களை உயிரோடு விடப்போவதில்லை என்றார். இன்று நாம் இவர்களுக்கு சுதந்திரம் கொடுத்து விடுவோம். "இது பொதுமக்களுக்கு தெரிந்த பிறகு பிரச்சனை உருவானது. நாங்கள், நீங்கள் ஏன் கபில் மிஸ்ராவின் கட்டளையை ஏற்று வேலை செய்கிறீர்கள் என்று கேட்டோம்.

கலவரத்தை தூண்டி விட்டு ஓடியவர் கபில் மிஸ்ரா. ஆனால், அவரிடம் கிசிறி சொல்கிறார் நீங்கள் சொல்றபடியே செய்கிறோம்.

அதுமட்டுமல்ல, அவர் மேலும் சொல்லும் போது காவல்துறைக்கு மூன்று நாட்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆம்புலன்ஸ், தீ அணைப்பு வண்டி, ஆபத்து என வரும் எந்த அழைப்புகளையும் எடுக்க கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

ஏழைகள் மீது முழு அடக்குமுறையும் நடந்தது. கையில் ஆயுதங்களுடன் வந்த கலவரக்காரர்கள் ஜெய் ஸ்ரீ ராம் கோசத்துடன் எங்களை தாக்கினார்கள். காவல்துறையினர் வேடிக்கை பார்த்தனர்.

ரூபினா பானு தனது நேரடி சாட்சியத்தை கேரவன் பத்திரிக்கைக்கு கொடுத்திருக்கிறார், காவல்துறை பானுவின் புகாரை ஏற்க மறுத்திருக்கிறது. அதனால் தொடர்ச்சியாக மிரட்டலுக்கும் உள்ளாகியிருக்கிறார் ரூபினா. எவ்வளவு மிரட்டல்கள் வந்தாலும் தான் பின் வாங்கப்போவதில்லை என்று கூறியிருக்கிறார் ரூபினா. Caravan 22.06.2020

## கலவரத்தால் கையை இழந்தவரின் புகார் மற்றும் நேரடி சாட்சியங்கள் - காவல்துறையின் மோசடி

22 வயதான முஹம்மது அக்ரம் கான் தனது வலது கையை டெல்லி கலவரத்தின் போது நிகழ்ந்த கோரத்தால் இழந்து விட்டார். நான்கு மாதம் கடந்தும் அந்த வேதனையில் இருந்து அவர் மீளவில்லை. அதோடு தான் பாதிக்கப் பட்டதற்கான நியாயத்தை கூட காவல்துறை யினரிடம் கோர முடியாத நிலைக்கு தள்ளப் பட்டிருக்கிறார்.

அக்ரம் கொடுத்துள்ள புகார்,

நான் மசூதியில் இருந்து திரும்பி வீட்டுக்கு வந்து கொண்டிருந்தேன். அப்போது காவிக் கொடியுடன் பலர் கூட்டமாக வந்து கொண்டி ருந்தனர். அதில், கௌரவ் மற்றும் சௌரவ் இருவரும் காவிக்கொடியுடன் நின்றிருந்தனர். அவர்கள் இந்த பகுதியை சேர்ந்தவர்கள் என்பதால் எனக்கு தெரியும். அப்போது அங்கிருந்த ஒருவர் என் பெயர் என்னவென்று கேட்டார், அக்ரம் என்றதும் என்னை அடிக்க தொடங்கி விட்டார்கள். அவர்களிடம் இருந்து தப்பித்து ஓட முயன்று கீழே விழுந்து விட்டேன்.

அப்போது அங்கே உள்ள மோகன் நர்சிங் மருத்துவமனையின் மாடியிலிருந்து அதன் முதலாளியும், கூட்டாளிகளும் இணைந்து குண்டுகளை எறிந்தார்கள். அந்த குண்டு என் கைகளில் பட்டு மரண வலி கொடுத்தது. பிறகு என்னை சிலர் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கே என் வலது கையை வெட்டினால்தான் பிழைக்க முடியும் என்பதால் வெட்டி விட்டனர். மற்றொரு கையில் செப்டிக் என்பதால் எதுவும் ஆகலாம் என்று கூறியிருக்கிறார்கள்." என்று தான் சொல்ல தன் மாமா எழுதிய புகாரில் கை நாட்டு வைத்தார் அக்ரம். இந்த கையில் கையெப்பம் இட முடியாது என்பதால் கைநாட்டு வைத்தேன் என்றும் குறிப்பிடுகிறார்.

புகார் கொடுத்த பிறகு இதனை திரும்ப பெறவில்லையென்றால் நீயும், உன் குடும்பம் முழுவதும் ஜாமீன் கூட வாங்க முடியாத அளவுக்கு சிறையில் தள்ளி விடுவேன் என போலீசார் மிரட்டுகிறார்கள் என்று குறிப்பிடுகிறார்.

அக்ரம் உடைய புகாரோடு இதற்கு நேரில் பார்த்த சாட்சியங்களையும் உடன் சேர்த்து பதிவு செய்திருக்கிறார்கள்.

அந்த நேரடி சாட்சிகள் கூறுவதாவது,

அன்று மசூதியில் சிறப்பு வகுப்பு (இஜ்திமா) இருந்தது. அதனை முடித்து விட்டு திரும்பு வார்கள் அனைவரையும் தாக்கினார்கள்.

மோகன் நர்சிங்க் ஹோம் மாடியில் இருந்து குண்டு வீசி தாக்குதல் நடத்தினர். இதில் பலருக்கு காயம் ஏற்பட்டது. அதே போல் அங்கி ருந்தவர்கள் கையில் துப்பாக்கி வைத்திருந்தனர். அவர்கள் சுட்டதில் ஒரு இளைஞன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டான். கலவரக் காரர்கள் மோகன் மருத்துவமனையை முழுமை யாக உபயோகித்தார்கள். மருத்துவமனையின் வண்டியை கூட உபயோகித்து மக்களை தாக்கினார்கள்

MLA ஜகதீஷ் பிரதான், கபில் மிஸ்ரா, பாஜக கவுன்சிலர் கண்ஹையா லால் ஆகியோரின் ஆதரவாளர்களே இதை செய்தனர்

மோகன் நர்சிங் ஹோமிலிருந்து குண்டுகள் வீசித்தாக்குதல் நடத்தியதற்கு நேரடி வீடியோ ஆதரங்கள் கூட இருக்கிறது.

இவ்வளவு தெளிவான புகார்கள், நேரடி சாட்சியங்கள், வீடியோ காட்சிகள் இருந்தும் ஒரு சிறிய விசாரணையை கூட அந்த குறிப்பிட்ட மருத்துவமனை மீதோ, குறிப்பிட்ட தலைவர்கள் மீதோ காவல்துறை நடத்தவில்லை.

- The quint 26.06.2020

## கலவரத்தை தூண்டிய பிஜேபி தலைவர் கபில் மிஸ்ரா - நேரடி சாட்சியம்



டெல்லி கலவரத்திற்கு மூல காரணமாக இருப்பவர் பிஜேபி தலைவர் கபில் மிஸ்ரா. டெல்லி வீதியில் பொதுமக்கள் முன்னிலையில் பிஜேபியினரை எல்லோரையும் விரட்டுவோம் என்று வெளிப்படையாக பேசினார். அவரின் பேச்சு வீடியோவாகவே இருக்கிறது. போராட்டக்காரர்கள் நாங்கள் அகற்றவில்லையென்றால் நாங்கள் அகற்றுவோம் என்று பேசுகிறார்.

மேலும் கபில் மிஸ்ராவின் பங்கு டெல்லி கலவர வன்முறையிலும் இருந்தது என்பதற்கான நேரடி சாட்சியங்களும் இருக்கிறது.

முஹம்மது ஜமி ரிஜ்வி டெல்லியின் யமுனா நகரில் வசிக்கும் இவர் கபில் மிஸ்ரா கலவரத்தை தூண்டும் விதமாக பேசும் போது தான் அங்கிருந்ததாகவும் அங்கே என்ன நடந்தது என்பதையும் விவரிக்கிறார்,

**கபில் மிஸ்ரா முதலில் அங்கிருந்த கூட்டத்தை பார்த்து சில கோசங்களை எழுப்பினார். அதில்,**

**நீங்கள் அவர்களை அடியுங்கள் நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்.**

**நீண்ட கம்புகலால் அவர்களை அடியுங்கள் நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்.**

**உங்கள் முழு சக்தியை கொண்டு அவர்களை அடியுங்கள் நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்.**

**முஸ்லிம்களை அடியுங்கள் நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்.**

**தலித்களை அடியுங்கள் நாங்கள் உங்களுடன் இருக்கிறோம் என்பன போன்ற கோசங்கள் இருந்தது.**

மீண்டும் சுற்றியிருந்தவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராகவும், தலித்களுக்கு எதிராகவும் தாக்குவதற்காக உணர்ச்சிகரமாக பேசிக் கொண்டிருந்தார்.

கபில் மிஸ்ரா முஸ்லிம்களை பற்றி குறிப்பிடும் போது, "இந்த முஸ்லிம்கள் முதலில் சிஏஏ, NRCக்கு எதிராக போராடுதாக கூறினார்கள். ஆனால், இப்போது இடஒதுக்கீடு கேட்கிறார்கள். இப்போது நாம் அவர்களுக்கு சரியான பாடத்தை கற்பித்தே ஆக வேண்டும்" என்று பேசினார்.

அதே போல தலித்களுக்கு எதிராகவும் "கழிவறை சுத்தம் செய்வதை நாம் பீடத்தில் வைப்போமா.. அது போலத்தான் தலித்களும் என்றார்."

"முஸ்லிம்கள், தலித்களை தாக்குங்கள். அவர்களின் வண்டிகளை எரியுங்கள். நாம் கொடுக்கும் பாடத்தில் இனி போராட்டம் எப்படி செய்ய வேண்டும் என்பதையே அவர்கள் மறந்து விட வேண்டும்" என்றும் பேசினார்.

இந்த அத்தனை பேச்சுகளையும், காவலர்களுக்கு முன்பாகவே பேசினார். ஆனால், அனைவரும் அமைதியாகவே இருந்தார்கள்.

இந்த புகாரின் மீது இன்றும் முதற் தகவல் அறிக்கை கூட தாக்கல் செய்யப்படவில்லை. கபில் மிஸ்ரா வின் மீதும் எந்த விசாரணையும் இல்லை.

பிஜேபி கவுன்சிலர் கன்னையா லால் முன்னெடுத்த கலவரம்

புகார்தாரரின் பெயர் பாதுகாப்பின் காரணமாக வெளியிடப்படவில்லை.

" 24.02.2020 அன்று இரவு 8-9 மணிக்கு நான் வீட்டிலிருந்தேன். வெளியே பெரும் சத்தம் கேட்டது. சிவ மந்திர் பகுதியையும், பால் சௌக் பகுதியையும் வீட்டிலிருந்தே பார்த்தேன், 100 முதல் 150 பேர் வரை கும்பலாக கூடியிருந்தார்கள்.

ஜெய் ஸ்ரீ ராம், முஸ்லிம்களுக்கு பாடம் புகட்ட வேண்டும், அவர்களை வெட்டுங்கள், கொல்லுங்கள் என்ற கோசங்களை எழுப்பிக் கொண்டே இருந்தார்கள்.

கலவரக்காரர்கள் கையில் திரிசூலம், கத்தி, கம்பு, பெட்ரோல் குண்டு என பல்வேறு ஆயுதங்களை வைத்திருந்தார்கள்.

அங்கே யோகேந்திர ஜீன்ஸ்வாலா மற்றும் பாஜக கவுன்சிலர் கன்னையா லால் இருந்தனர். பிறகு கன்னையாவின் தலைமையில் அங்கிருப்பவர்களை தாக்க ஆரம்பித்தார்கள். சிறிது

நேரத்தில் அங்கே இருந்த மசூதி பற்றி எரிந்தது.

இந்த தகவல் அனைத்தையும் புகாராக காவல்துறையினரிடம் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட்ட வில்லை. The quint 22..06.2020

## அப்பாவிகளை குற்றவாளியாக்க முனையும் காவல்துறை

போராட்டக்காரர்களுக்கு எதிராக காவலர்கள் கையாளும் மோசமான தந்திரங் கள் - மூன்று முறை கைது செய்யப்பட்ட பெண் கல்வியாளர்.

டெல்லியில் சிஏஏ சட்டத்திற்கு எதிராக பெண்கள் தன்னிச்சையாக போராடிய நிலையில் பிறகு ஒவ்வொருவரும் தங்கள் ஆதரவை தெரிவிக்க தொடங்கினர் அந்த வகையில் டெல்லியில் இயங்கி வந்த United Against Hate, pinjra Tod மற்றும் இன்னும் சில மனித உரிமை அமைப்புகளும் பங்கு கொண்டன. அதனால் இந்த அமைப்பை சார்ந்தவர்களையும் காவல்துறை கைது செய்கிறது,

அதிலும் Pinjra Tod அமைப்பை சேர்ந்த இரண்டு பெண்களை கைது செய்திருக்கிறது காவல்துறை. இதில் தேவகான கலிதா என்ற பெண்மணியும் ஒருவர். இவர் JNU பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் படித்து வருகிறார். மே 23ம் தேதி முதலில் டெல்லி காவல்துறை கைது செய்தது.

பிறகு கலிதா உயர்நீதிமன்றத்தை அணுகி ஜாமீன் பெற்றார். அதன் பிறகு மே 28ம் தேதி கலிதாவை இன்னொரு வழக்கில் இணைந்து ஹிகிறிகி சட்டத்தின் கீழ் கைது செய்தது. அதிலும் இரண்டு நாள் கஸ்டடியுடன் கலிதா வெளியேறும் நிலையில்.

மூன்றாவது முறையாக கலவரத்தில் நேரடியாக ஈடுபட்டார் என்று கூறி பிணை வாங்க முடியாத வகையில் குற்ற பிரிவுகளுக்கு கீழ் கைது செய்தனர் டெல்லி அதிகாரிகள்.

இதன் மூலமே டெல்லி காவலதிகாரிகளின் நிலையை புரிந்து கொள்ளலாம். ஆனால் இந்த காவல்துறையின் இந்த அநீதி நடவடிக்கையும் நீதிமன்றம் பார்க்கிறதே ஒழிய அதற்கு எதிராக எந்த நீதி விசாரணையும் மேற்கொள்ள முன்வருவதில்லை.

## ஸஃபூரா சர்கார் - ஐந்து மாத கர்ப்பிணி நான்கு மாதம் சிறையில்

## நீதிமன்றம் நிகழ்த்திய அநீதி

டெல்லி ஜாமியா கல்லூரியின் ஒருங்கி ணைப்பு குழுவின் ஊடக ஒருங்கிணைப்பாளராக இருப்பவர். டெல்லியில் நடைபெற்ற சாஹின் பாக் போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் கல்வியாளர் ஸஃபூரா சர்கார்.



ஆனால், இவர் தான் டெல்லி கலவரத்திற்கு மூல காரணம் என்று கூறி டெல்லி காவல்துறை UAPA என்ற கொடூர சட்டத்தின் கீழ் கைது செய்தது. இவரை கைது செய்த போது ஸஃபூரா இரண்டு மாத கர்ப்பிணி.

ஆனால், ஐந்து மாத கர்ப்பிணியாக ஸஃபூரா மூன்று மாதங்களுக்கு மேலாக சிறையிலேயே இருக்க நேர்ந்தது. மூன்று மூறை ஜாமீனுக்காக நீதிமன்றத்தை நாடிய போதும் காவல்துறை, ஸஃபூரா பெரிய சதித்திட்டத்தை நிகழ்த்தியவர். இவர் வெளியில் சென்றால் நாட்டுக்கே ஆபத்து என்று பூச்சாண்டி காட்டி பிணை வாங்க விடமால் தடுத்து வருகிறது.

இந்தியாவின் அரசியலமைப்பின் படியும், சர்வதேச சட்டங்களின் அடிப்படையிலும் ஸஃபூரா கண்டிப்பாக பிணை வழங்கப்பட வேண்டும். நீதிமன்றம் ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்கிறது என பல சட்ட வல்லுனர்கள் குரல் எழுப்பினார்கள். வெளிநாடுகளில் இருந்து பல்வேறு அழுத்தங்கள் தொடர்ச்சியாக கொடுக் கப்பட்டது.

இதன் பிறகு இறுதியாக நான்காவது முறை ஜாமீனுக்காக முறையிட்ட போது ஜாமீன் கிடைத்தது.

## காலித் சைஃபி - சமூக ஆர்வலர்: பழிவாங்கும் காவல்துறை

காலித் சைஃபி நாற்காலிகள் வியாபாரம் செய்யும் வியாபாரி. அத்துடன் சமூக சேவைகளை செய்பவராகவும் இருந்து வருகிறார். டெல்லியில் இருக்கும் நிறைய சமூக சேவகர்களுடன் இவருக்கு தொடர்புண்டு.

மோடி ஆட்சியின் கீழ் மக்களுக்குள்ளாகவே வெறுப்பு பிரச்சாரம் கட்டமைக்கப்படுவது அதிகமானதால் இதற்கெதிராக இயங்க United Against Hate (வெறுப்புக்கெதிராக ஒன்று திரள்வோம்) என்ற பெயரில் அமைப்பை உருவாக்கினார்.

இதில் பல்வேறு சமூக நல ஆர்வலர்களும் இணைந்து கொண்டனர். பிஜேபி கொண்டு வந்த சிஏஏ 2019 சட்டத்திற்கு எதிராக நாடே ஒன்று திரண்ட வேளையில் டெல்லியில் இந்த சட்டத்தின் பின்விளைவுகளை எடுத்துக் கூறி போராட்டங்களை ஒருங்கிணைத்தவர் காலித்.

சிஏஏ போராட்டங்களை முன்னெடுத்து சென்ற காரணத்திற்காகவே பிஜேபி அரசின் மூலம் காவல்துறையினரால் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்.

டெல்லி கலவரம் நடந்த இரவே காலித் டெல்லி காவல்துறையால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டு அடுத்த நாள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய போது இரண்டு கால்களிலும் மாவுக்கட்டுகளுடன் சக்கர நாற்காலியில் வந்தார். கைது செய்யப்பட்ட இரவு காவல்துறையின் கொடூரமான சித்ரவதையின் காரணமாக நலமுடன் இருந்த ஒருவரை சக்கர நாற்காலியில் அமர வைத்து விட்டனர்.

தற்போது நான்காவது மாதமாக சிறையில் இருந்து வருகிறார் காலித். இவருக்கு எதிராக காவல்துறை குற்றச்சாட்டுகளை புனைந்து சிறையிலேயே வைத்திருக்கிறது.

இதனை நீதிமன்றங்களும் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் காவல்துறைக்கு சார்பாகவே செயல்படுகிறது, இந்த சூழலில் ஜாமீன் மனுவை மறுத்த காவலதிகாரிகள், கொரோனா காலம் என்பதால் காலிதின் போனில் என்னென்ன இருக்கிறது என்பதை கண்டறிய முடியவில்லை. இதுபோல் கொரொனா காலத்தில் விசாரிக்க காலம் தேவைப்படுகிறது என கேட்க மேலும் இரண்டு மாதங்களுக்கு விசாரணை செய்ய அனுமதி கொடுத்திருக்கிறது நீதிமன்றம்.

காலிதின் மனைவி நார்கிஸ், தன் கணவன் சிஏஏ போராட்டங்களை ஒருங்கிணைத்ததால் மட்டுமே அவர் காவல்துறையால் பழிவாங்கப் படுகிறார். எங்களுக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றனர். அவர் எங்களுக்கு மட்டும் அல்ல அனைவருக்கும் நல்லவராக இருந்திருக்கிறார்.

“ஒவ்வொரு முறையும் அவர் மற்றவர்களுக்கு உதவ செல்லும் போதும் எதற்காக உங்களை வருத்தி கொள்கிறீர்கள் என கேட்கும் போதெல்லாம், இறக்கும் போது அடுத்த மனிதர்களுக்கு உதவி செய்தோம் என்ற மன நிறைவோடு இறக்க வேண்டும் என்று கூறுவார்.

சிஏஏ பிரச்சனை வந்த போது கூட, நீங்கள் ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள் நாம் இருவரும் டெல்லியில் தான் பிறந்தோம். நம்மிடம் அனைத்து ஆவணங்களும் இருக்கிறது. நமது பெற்றோரின் ஆவணங்களும் இருக்கிறது, கவலை கொள்ளாமல் இருக்க வேண்டியது தானே என்று கூறும் போது உலகம் அப்படி செயல்படாது. எது சரி, எது தவறு என்று நாம் சொல்ல வேண்டும் என்று சொன்னார்.” என தன் நிலையை விவரிக்கிறார் காலித்தின் மனைவி. - Huffpost 25.06.2020

## குல்ஃபிசா ஃபாத்திமா - பிஜேபியால் பழிவாங்கப்படும் பெண் மாணவர்

குல்ஃபிசா பாத்திமா 28 வயதான விஙிகி பட்டதாரி. இவரும் சஃபூரா சர்காரும் ஒரே நாளில் தான் கைது செய்யப்பட்டனர். சிஏஏ எதிர்ப்பு போராட்டங்களில் கலந்து கொண்டதற்காகவே இவரும் கைது செய்யப்பட்டார்.

கொலை, கலவரத்தை தூண்டுதல் உட்பட 20 க்கும் மேற்பட்ட வழக்குகள் இவர் மீது போடப்பட்டிருக்கிறது.

பாத்திமா முதலில் கைது செய்யப்பட்ட பிறகு அந்த வழக்கில் நீதிமன்றம் ஜாமீன்

வழங்கியது. ஆனால், காவல்துறை மீண்டும் ஒரு வழக்கை இணைத்து இவரை இன்னும் சிறையிலேயே வைத்திருக்கிறது.

UAPA வழக்கு என்பதால் ஜாமீன் எளிதாக கிடைக்காது. அதனால் தான் காவலர்கள் இந்த பிரிவின் கீழ் கைது செய்கிறார்கள்.

## தாஹிர் உசைன் கவுன்சிலர் - குற்றப்பத்திரிக்கை தாக்கல்

டெல்லி கலவரத்தில் முக்கிய பங்கு இருப்பதாக ஊடக வெளிச்சத்தில் பெரிய பரப்புரையுடன் கைது செய்யப்பட்டவர் ஆம் ஆத்மி கட்சியில் கவுன்சிலராக இருந்த தாஹிர் உசைன்.



ஆனால், தாஹிரே தனது பகுதியில் கலவரம் நடக்கிறது. உயிருக்கு ஆபத்து என்று காவல்துறையினருக்கு போன் செய்து உதவி கோரிய ஆடியோ உட்பட தாஹிர் அப்பாவி என நிரூபிக்கும் பல சாட்சியங்கள் வந்த போதும் அவரை வைத்து முஸ்லிம்கள் மீது திட்டமிட்டு வெறுப்பு பிரச்சாரம் செய்யப்பட்டது.

கலவரம் நடந்த தினத்தில் பிப்ரவரி 24ம் தேதி ACP (கூடுதல் போலீஸ் கமிஷனர்) அஜீத் குமார், கவுன்சிலர் பாதுகாப்பில்லாத் சூழலில் இருந்ததால் கலவர சூழலில் இருந்து தானே தாஹிர் உசைனை மீட்டு வந்ததாக குறிப்பிட்டிருக்கிறார். பிப்ரவரி 26ம் தேதி தான் தாஹிர் மீது கலவர குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது. குற்றச்சாட்டு வைத்த சில மணி நேரங்களில் தனது வீட்டில் என்ன நடந்தது. தான் அப்பாவி என்று நிரூபிக்கும் விதமாக சில ஆதாரங்களுடன் தாஹிர் உசேன் வீடியோ ஒன்றையும் வெளியிட்டார். (scroll 04.03.2020)

இப்பாடி தாஹிர் மீது காவல்துறை பொய்க் குற்றச்சாட்டை கட்டமைக்கிறது என்று கைது செய்யும் சூழலில் கூறியதை தற்போது காவல் துறை சமர்பித்திருக்கும் குற்றப்பத்திரிக்கையும் நிரூபுணம் செய்கிறது.

தாஹிர் உசேன் மட்டும் தனியாக கலவரத்தில் ஈடுபடவில்லை. தாஹிர் உசேனுடன் இணைந்து JNU மாணவர் உமர் காலித்தும், United against Hate என்ற மனித உரிமை அமைப்பின் நிறுவனர் காலித் சைபி இருவரும் கூட்டாளிகள் என்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

காலித் சைஃபி மற்றும் உமர் காலித் இருவருமே மனித உரிமை அமைப்புகளில் நீண்ட காலமாக செயல்பட்டு வருபவர்கள். மோடி அரசின் நடவடிக்கைகளை விமர்சித்ததால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டவர்கள். தற்போது டெல்லி காவல்துறை மோடி அரசுக்காக கலவரத்தையும் செய்து விட்டு மோடி அரசின் மீது விமர்சிப்பவர்களையும் அதிகாரத்தை காட்டி வழக்குகளை பதிந்து பயமுறுத்தி வருகிறது. (The Quint 12.06.2020)

## சாஹின் பாக் போராட்டத்தில் உணவு அளித்த சீக்கியர் மீது வழக்கு

சிஏஏ சட்டத்திற்கு எதிராக டெல்லியில் நடைபெற்ற சாஹின் பாக் போராட்டத்தில் தனது ஆதரவை தெரிவிப்பதற்காக அங்கு 24 மணி நேரம் தங்கி போராடும் மக்களுக்கு உணவு சமைத்து கொடுக்க முடிவு செய்தார் பிந்த்ரா.

இதற்காக பல்வேறு இடங்களில் உதவி தேட போக அனைவரும் மறுத்து விட்டனர். இறுதியில் தன் நிலத்தை விற்று அதில் சாஹின் பாக்கிற்கு அருகேயே ஒரு குடில் அமைத்து தேவைப்படுவோருக்கு சைவ உணவுகளை சமைத்து கொடுக்க தொடங்கினார். சிறிது காலத்தில் உதவிகள் கிடைக்கவே அனைவருக்கும் இலவசமாக சமைத்துக் கொடுத்தார். இதற்காகவே இவரின் மீது பலரின் கவனம் சென்றது. உலகம் முழுக்க இருந்து நெகிழ்ச்சியான பாராட்டுகளும் கிடைத்தது.

அதே நேரத்தில் சாஹின் பாக்கில் இருப்பவர்களுக்கு யாரெல்லாம் உதவி செய்தார்களோ

அவர்கள் மீது காவல்துறை வழக்கு பதிந்து பழி வாங்கும் படலத்தில் பிந்த்ராவும் தப்பிக்க வில்லை.

டெல்லி கலவரத்தில் கொல்லப்பட்ட காவலதிகாரி கொலையில் பிந்த்ராவும் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று காவல்துறை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள். பிந்த்ரா மீது கலவரத்தை உருவாக்க முனைதல், பொது அமைதியை கெடுத்தல் என பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டி ருக்கிறது.

பிந்த்ரா சமூக சேவை செய்து வருபவர். முக்கியமாக உணவு இல்லாதவர்களுக்கு சமைத்து கொடுப்பதே இவரது தலையாய பணி என்று இயங்கி வருபவர். இந்த நிலையில் சாஹின் பாக்கில் சமைத்து கொடுத்ததற்காக கலவரத்திற்கு காரணமாக வழக்கு போடுவதா?.. என்று பிந்த்ரா கேள்வி எழுப்பியிருக்கிறார்.

ஆனால், பிந்த்ரா சிறிதும் பயம் கொள்ள வில்லை. எங்கள் சீக்கிய குரு பசித்தவருக்கு உணவளிப்பது தான் பெரிது என்று கூறி வளர்த்திருக்கிறார். காவ்லதுறை என்னை கைது செய்தால் கூட நான் பயப்பட மாட்டேன். எனது நிலையில் இருந்து நான் மாறவும் மாட்டேன் என்று தீர்க்கமாக கூறி விட்டார் பிந்த்ரா.

## டெல்லி கலவரத்தில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு மருத்துவம் அளித்ததால் மருத்துவர் மீது கொலைப்பழி

டெல்லியில் நடைபெற்ற கலவரத்தை பலரின் உயிரை காப்பாற்றியது அல்-ஹிந்த் மருத்துவமனை. இந்த மருத்துவமனையை நடத்தும் அன்வர் மீது டெல்லி காவல்துறை கொலை வழக்கு பதிவு செய்திருக்கிறது.

டெல்லியில் பிப்ரவரி 23, 2020 தொடங்கிய கலவரம் மூன்று நாட்களுக்கு நீடித்தது. அப்போது கலவரத்தில் தாக்கப்பட்டவர்களுக்கு முன்னனியில் நின்று சிகிச்சை அளித்தது அல் ஹிந்த் மருத்துவமனையும், அதன் தலைவர் அன்வரும் தான்.

இந்த மருத்துவமனையில் போதிய வசதிகள் இல்லாததால் GTB மருத்துவமனைக்கு காயம் பட்டவர்களை அனுப்பும் போது காவலர்கள் ஆம்புலன்சை செல்ல விடாமல் தடுத்ததால் வழக்கறிஞர் சூருர் மந்திர் உயர்நீதிமன்றம் சென்று காவல்துறையின் இந்த போக்கை நிறுத்த வேண்டும் என்று வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை அவசர வழக்காக எடுத்து விசாரித்து காவல்துறையை கண்டித்து பாதிக்கப் பட்டவர்களுக்கு மருத்துவம் அளிக்க வேண்டும் என உத்தரவிட்டார் நீதிபதி முரளி. இந்த உத்தரவை கொடுத்த காரணத்தினாலேயே நடு இரவில் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டார்.

ஒரு நீதிபதிக்கே இந்த நிலை எனும் போது காவல்துறை முன்னின்று நடத்திய கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவம் அளித்தவர்களை சாதாரணமாக விடுவார்களா?.. அதனால் தான் தற்போது அன்வர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அன்வர் சொல்லும் போது, நான் எந்த போராட்டங்களிலும் கலந்து கொள்ளவில்லை. நான் எப்போதும் பிஸியாக இருப்பவன். டெல்லி கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவம் அளித்ததற்காகவும், மனிதாபிமானத் துடன் நடந்து கொண்டதற்காகவும் தான் இந்த வழக்கில் என் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றார்.

காவல்துறையின் இந்த நடவடிக்கையை பல்வேறு மருத்துவர்களும் கண்டித்திருக் கிறார்கள். - The Indian express 27.06.2020

## உண்மை கண்டறியும் குழு என்ற பெயரில் பிஜேபி அடிமைகள்

நான்கு மாதங்களுக்கு பிறகு டெல்லி கலவரத்தில் நடந்தது என்ன என்று மொத்தம் ஆறு பேர் கொண்ட குழு அறிக்கையை அமித் ஷாவிடம் தாக்கல் செய்தது.

அதாவது, கலவரத்திற்கு காரணமான பிஜேபி அரசு நியமித்த உண்மை கண்டறியும் குழு பிஜேபியிடம் அறிக்கையை தாக்கல் செய்தது. அந்த அறிக்கையில் இந்த கலவரத்திற்கு ஆம் ஆத்மி, காங்கிரஸ், பாப்புலர் பிரண்ட் போன்ற இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் பாகிஸ்தானின் மிஷிமி அமைப்பு தான் காரணமாக இருந்தன என்று கூறுகிறது.



இப்படி ஒரு அறிக்கையை சமர்பித்த ஆறு பேர் கொண்ட உண்மை கண்டறியும் குழுவில் உள்ள அனைவருமே பிஜேபி விசுவாசிகள்.

குழுவின் முக்கிய உறுப்பினராக இருக்கும் டாக்டர்.திர்தா தாஸ் தாக்ரா பிஜேபியும் நீண்ட காலமாக நெருக்கம் கொண்டவர். 2002ம் ஆண்டு குஜராத் படுகொலை, இஸ்ரத் ஜகான் போலி எண்கவுன்டர், பாட்லா ஹவுஸ் எண்கவுண்டர் என பிஜேபி நிகழ்த்திய கோர படுகொலைகளுக்கு சாதகமாக மருத்துவ அறிக்கை தயாரித்து கொடுத்தவர் தான் இந்த தாக்ரா.

அடுத்ததாக குழுவின் மற்றொரு உறுப்பினர் நீரஜ் அரோரா, சிபிஐ உடன் மிக நெருக்கமாக பணியாற்றுபவர். தற்போது மோடி அரசின் கைப்பாவையாக உள்ள ழிமிகிவிற்கு சிறப்பு அரசு வழக்கறிஞராகவும் இருக்கிறார்.

குழுவில் உள்ள மூன்றாவது நபர் நீரா மிஸ்ரா, இவர் திரௌபதி ட்ரஸ்ட் ஒன்றை வைத்துள்ளார். அதன் நோக்கமே வேத காலமும் அதன் கொள்கையை விரிவாக்குவதும் பழைய இந்திய மரபை எளிதாக புரிய வைப்பதும் ஆகும். அதாவது, சாதிய கோட்பாடுகள் கூடிய சனாதானத்தை விரிவுபடுத்தும் நோக்கம் கொண்ட ட்ரஸ்ட். அதன் வலைத்தளத்தில் மோடியின் படத்துடன் அவரது பெருமையும் விவரிக்கப்பட்டிருக்கும். 2016ம் ஆண்டு பாஜக தலைவர் சுப்ரமணியன் சுவாமியை வைத்து தன் கண்காட்சி நிகழ்ச்சியை தொடங்கினார் மிஸ்ரா.

குழுவில் இருக்கும் நான்காவது நபர் அம்பாதாஸ் ஜோசி, இவர் மும்பை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியாக இருந்தவர். இவர் 2014 முதல் 2019 வரை பாஜக தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் மகாராஷ்டிர நிர்வாக தீர்ப்பாயத்தின் தலைவராக பணியாற்றியவர்.

ஐந்தாவது நபர் துபே, இவர் 2019 மக்களவை தேர்தலில் சிறப்பு மத்திய காவல்துறை பார்வையாளராக பணியாற்றினர். இதில் மோடி அரசுக்கு தேவையானவற்றை செய்து தருவதில் முத்தாய்ப்பாக செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டும் இவர் மீது இருக்கிறது.

ஆக, உண்மை கண்டறியும் குழு என்ற பெயரில் இடம்பெற்றவர்கள் பொதுவானவர்கள் அல்ல. அனைவரும் பாஜக அரசிற்கு அடிபணிந்து பதவி சுகம் அனுபவித்தவர்கள். பாஜகவுக்கு தேவையானவற்றை அறிக்கையாக எழுதி கொடுத்திருக்கிறார்கள்.

இந்த குழு வெளியிட்ட அறிக்கையில் இன்னும் மிக மோசமான விசயம் என்னவென்றால்,வெளியிட்ட செய்திகளுக்கு ஆதாரமாக opindia என்ற ஒரு இந்துத்துவ ஆன்லைன் செய்தி வலைத்தளத்தின் செய்தியை காட்டியிருக்கிறார்கள். Opinida அதிகம் பொய்களையும், வதந்திகளையும் வெளிப்படுத்தும் ஊடகம் என்பதால் தான் அதற்கு உண்மை கண்டறியும் பத்திரிக்கைக்கான தரச்சான்று கூட மறுக்கப்பட்டது. தொடர்ச்சியாக முஸ்லிம்களுக்கு எதிராக வெளியிடும் பொய் செய்திகளின் காரணமாக சில விளம்பரதாரர்கள் கூட அதிலிருந்து விலகி விட்டனர். இந்த நிலையில் இதனை ஆதாரமாக காண்பித்திருப்பதே இந்த அறிக்கையின் உண்மை(?)த்தன்மையை கூறிவிடும்.

உண்மையில் டெல்லி கலவரத்தில் என்ன நிகழ்ந்தது என்பதை மூன்று உண்மை கண்டறியும் குழுக்கள் வெளிக்கொண்டுவந்தன. சிவில் அமைப்புகள் நடத்திய ஆய்வறிக்கை, வழக்கறிஞர்கள் நடத்திய ஆய்வறிக்கை, காங்கிரஸ் நடத்திய ஆய்வறிக்கை. இதில் இரண்டு அறிக்கைகள் அரசியல் சார்பற்ற பொதுத்தன்மையுடையது. The print 02.06.2020

## சிவில் அமைப்புகள் நடத்திய உண்மை கண்டறியும் குழுவின் அறிக்கை

டெல்லி கலவரம் நடந்து முடிந்த ஐந்து தினங்களுக்கு பின்பு சிவில் அமைப்புகள் இணைந்து உண்மை கண்டறியும் குழு ஒன்றை உருவாக்கினார்கள். அதில், சரோஜினி,நவ்ஷரன் சிங், ஃபாராஹ் நக்வி, மற்றும் நவீன் சந்தர்

ஆகிய பொதுவான நபர்கள் பங்கெடுத்தனர்.

அவர்கள் அளித்த அறிக்கையில் கூறப்பட்டி ருப்பது,

"*1984ல் சீக்கியர்களுக்கு எதிராக எப்படி கலவரம் நிகழ்த்தப்பட்டதோ, 2002ல் முஸ்லிம் களுக்கெதிராக குஜராத்தில் நிகழ்த்தப்பட்ட கலவரத்தை போல 2020ல் டெல்லியில் நிகழ்த் தப்பட்ட கலவரமும் திட்டமிட்டு முஸ்லிம் களுக்கெதிராக நிகழ்த்தப்பட்டது.*

*கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களின் நேரடி சாட்சியத்திலிருந்து டெல்லி காவல்துறை இந்த கலவரத்தில் எந்த உதவியையும் மேற்கொள்ள வில்லை. ஆபத்து என்று அவசர எண்ணுக்கு அழைப்பவர்களுக்கு கூட காவல்துறை பதில் அளிக்கவில்லை. மாறாக பல இடங்களில் கலவரங்களை வேடிக்கை பார்ப்பவர்களாகவே காவலர்கள் இருந்திருக்கின்றனர்.*

*முஸ்லிம்களுக்கெதிராக திட்டமிட்டு அவர்களின் வாழ்வாதாரங்கள் மட்டும் குறி வைத்து அழிக்கப்பட்டன. சில இடங்களில் ஒரு முஸ்லிம் கடை எரிக்கப்பட்டிருக்கிறது, அருகில் இருக்கும் இரண்டு இந்துக்கள் கடைகளுக்கு சேதாரங்கள் இல்லை. மசூதிகள், கடைகள், வீடுகள் என பல இடங்களில் எரிந்து கொண்டிருப்பதை பார்க்க முடிந்தது.*

*சில இடங்களில் முஸ்லிம்களின் மசூதிகள் எரிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் முஸ்லிம்கள் அப்பகுதியில் இருக்கும் கோவில்களை பத்திர மாக பாதுகாத்த சம்பவங்களும் நடந்திருக்கிறது.*

*ஒரு இடத்தில் இந்துத்துவ அமைப்பினர் இந்துக்களின் ஆட்டோவையே கொழுத்தும் சம்பவங்களும் நடைபெற்றிருக்கிறது. ஜெய் மாதா ஜி என்று ஆட்டோவில் எழுதப்பட்டி ருந்தாலும் ஆட்டோவில் முஸ்லிம்களை ஏற்றி செல்வதை கண்ட கும்பல் டிரைவரை அடித்து ஆட்டோவை கொழுத்தியுள்ளார்கள். அதே போல் ஒரு இந்து ஆட்டோ டிரைவர் தன் ஆட்டோவில் அமர்ந்திருக்கும் இரண்டு ஹிஜாப் அணிந்த முஸ்லிம் பெண்மணிகளை கலவரக்காரர்களின் கண்களில் மறைத்து பாதுகாப்பான இடத்தில் சேர்த்தார்.*

*முஸ்தாபாத்தில் ஒரு சிறிய கடை நடத்தி வரும் இந்து குடும்பம் தங்களுக்கு காவல் துறையின் மீது நம்பிக்கை இல்லை. ஆனால் அருகில் இருக்கும் முஸ்லிம்கள் மீது தான் நம்பிக்கை இருந்தது. ஆகவே அவர்களை நம்பியே நாங்கள் இருந்தோம். ஆனால், காவல்துறைக்கு நூற்றுக்கும் மேற்பட்ட தடவை கால் செய்தும் பதில் இல்லை என்றனர்.*

*எங்கள் கண்களுக்கு முன்னாலேயே, இராணுவத்துக்கு முன்னால் ஒரு கும்பல் எந்த அனுமதியும் இல்லாமல் பாரத் மாதா கி ஜெய், NRC ஜிந்தாபாத், CAA ஜிந்தாபாத் என்று கோசம் எழுப்பி சென்றார்கள். ஆனால் அதிகாரிகள் எதுவும் தடுக்கவில்லை.* " -The wire 29.02.2020

## வழக்கறிஞர்கள் நடத்திய உண்மை கண்டறியும் அறிக்கை

டெல்லி கலவரம் நடந்த சில தினங்களுக்கு பிறகு வழக்கறிஞர்கள் குழு ஒன்றினைந்து ஒரு உண்மை கண்டறியும் ஆய்வை செய்தனர்.

இதில் காவலர்கள் மேற்கொண்ட நடவடிக் கையை விரிவாக பதிவு செய்திருந்தார்கள்.

"*காவலர்கள் போராட்டக்காரர்களை வன்முறையை உபயோகித்து அப்புறப்படுத்தி னார்கள். காவலர்கள், கலவரப்பகுதியில் இருந்த சிசிடிவி கேமராக்களை உடைத்த பிறகு அங்கிருக்கும் பொது மக்களை மிக மோசமாக தாக்கியிருக்கிறார்கள்.*

*போராட்டத்தை அப்புறப்படுத்திய பிறகு அங்கிருந்து போராட்டத்தில் பங்கெடுத்த முக்கியமான கல்வியாளர்கள், மாணவர்கள் அனைவரையும் கைது செய்தனர்.*

*காவலர்கள், பெண்களிடமும் ஆபாசமான முறையில் நடந்து கொண்டனர். சில காவலர்கள் பெண்களிடம் தவறாகவும் நடந்து கொண்டனர்.*

*முஸ்லிம்கள் மட்டுமல்ல சிஏஏ எதிர்ப்பு போராட்டங்களில் பங்கெடுத்த விக்ரம் பிரதீப் போன்ற இந்து மாணவர்களையும் கைது செய்தனர்*" என்று வழக்கறிஞர்கள் சமர்பித்த அறிக்கை கூறுகிறது.

இதனை உறுதிப்படுத்தும் விதமாகவும் டெல்லி கலவரத்தில் காவலர்கள் சிசிடிவி கேம ராக்களை உடைக்கும் வீடியோக்களும், முஸ்லிம்

பெண்கள் மீது தவறாக நடந்து கொள்ளும் வீடியோக்களும் வெளியாகின. ஆனால், இந்த குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## குற்றப்பத்திரிக்கையின் குளறுபடிகள்

டெல்லியில் நடைபெற்ற கலவரத்தை விசாரிப்பதாக கூறி பாதிக்கப்பட்ட முஸ்லிம் களையே குற்றவாளிகளாக சித்தரித்து கைது நடவடிக்கைகளை நிகழ்த்தியது டெல்லி காவல்துறை.

ஜூன் மாதம் முஸ்லிம்கள் கைது செய்யப் பட்ட வழக்குகளின் கீழ் குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்தது காவல்துறை.

இதில் டெல்லி கலவரம் முஸ்லிம்களால் உருவாக்கப்பட்டது என்பதை போலவும், முஸ்லிம்கள் தான் முழுக்க குற்றவாளிகள் என்பது போலவும் அடுக்கடுக்கான குற்றச் சாட்டுகளை குற்றப்பத்திரிக்கையில் வைத்திருக் கிறது டெல்லி காவல்துறை.

ஆனால் கொடூரம் என்னவென்றால், டெல்லியில் இருக்கும் ஒரு முஸ்லிம் தலைவரை கூட விடவில்லை. ஜாமியா மில்லியா கல்லூரி, டெல்லியில் இருக்கும் இஸ்லாமிய அமைப்புகள், தேவ் பந்த், தியோ பந்த், தப்லிக் ஜமாத், டெல்லி சிறுபான்மை குழுவின் தலைவர் உட்பட முஸ்லிம்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கும் தலைவர்களையும் விடவில்லை. ஹர்ஸ் மந்தர், யோகேந்திர யாதவ் போன்றவர்களையும் குற்றப்பத்திரிக்கையில் இணைத்திருக்கிறது. அத்துடன் மலேசியாவில் இருக்கும் ஜாகிர் நாயக், பாகிஸ்தான் ISI ஆகியவற்றையும் குற்றப்பத்திரிக்கையில் இணைத்திருக்கிறார்கள்.

டெல்லி கலவரத்தை பற்றி பேசியதற்காக ஈரான் பிரதமர், பாகிஸ்தான் பிரதமர், மலேசிய பிரதமர் போன்ற முஸ்லிம் தலைவர்களின் பெயர்களை குற்றப்பத்திரிக்கையில் சேர்க்காமல் விட்டிருப்பது தான் டெல்லி காவல்துறையின் மகிமை.

## வாட்சாப் மெசேஜ்களை கொண்டு குற்றப்பத்திரிக்கை

Pinjra tod (பிஞ்ரா தோட்) அமைப்பை சேரந்த இரண்டு பெண்களை கைது செய்த வழக்கில் குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்த போது அவர்கள் போனில் இருந்த வாட்சாப் மெசேஜ் ஒன்றையும் குறிப்பிட்டு கலவரம் செய்ய முயன்றதற்கு சாட்சியாக கூறுகிறார்கள்.

டெல்லி கலவரம் தீவிரமான போது இந்தியாவின் ஏதொவிரு மூலையில் யாரோ ஒருவர் கலவரக்காரர்களிடம் இருந்து தப்பித்து கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று எழுதி அதை வாட்சாப்பில் பரவி விட்டிருக்கிறார்கள்.

அந்த வாட்சாப் மெசேஜ்,



“கலவரக்காரர்களிடம் தப்பிக்க நீங்கள் செய்ய வேண்டியது, வீட்டில் தண்ணீர், டீ, ஆயில் போன்ற பொருட்கள் இருந்தால் அதை சூடுபடுத்தி தயார் செய்து கொள்ளுங்கள்.

வீடுகளின் படிகட்டுகளில் ஷாம்பு, சோப்பு போன்ற வழுவழுப்பான பொருட்களை ஊற்றி விடுங்கள்.

மிளகாய்த்தூள் அல்லது அதிக காரமுள்ள பொடிகளை தயார் படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். வீட்டில் பிளாஸ்டிக் கதவுகள் இருந்தால் அதை இரும்பு கதவுகளை வைத்து மாற்றி விடுங்கள்.

ஆசிட் பாட்டில்களை வீட்டில் இருந்தால் அதையும் எடுத்து வைத்து கொள்ளுங்கள்.

வீட்டின் மாடிகளில் செங்கற்கற்கள் போன்ற பொருட்களை வைத்துக் கொள்ளுங்கள்.

வீடுகளில் உள்ள கார்/ பைக்கில் இருந்து பெட்ரோல்களை எடுத்து வைத்துக் கொள்ளவும். முடிந்தால் வீட்டு கதவுகளில் கரண்டை இணைத்து விடுங்கள்.

ஒரு வீட்டு மாடியில் இருந்து மற்றொரு வீட்டு மாடிக்கு செல்வதற்கு வழி ஏற்படுத்தி வையுங்கள்.

ஆண்கள் அனைவரும் மாடியிலேயே இருந்து விடாதீர்கள் சிலர் பெண்களின் பாதுகாப்பிற்காகவும் அவர்களுக்கு அருகிலும் நில்லுங்கள்."

இந்த வாட்சாப் மெஸேஜ் டெல்லியில் உள்ள அனைவரது செல்போனிற்கும் கலவர சூழலில் வாட்சாப் குரூப்களின் வாயிலாக பரவியிருக்கிறது. ஆனால், இதனை ஒரு ஆதாரமாக குறிப்பிட்டு காவல்துறை வழக்கு பதிந்திருப்பது தான் வினோதம். - The quint 12.06.2020

## டெல்லி கலவரத்தின் மீளாத கோரம்

## சொந்த வீடுகளுக்கு திரும்ப மறுக்கும் முஸ்லிம்கள்

டெல்லி கலவரம் நடைபெற்று மூன்று மாதங்கள் கடந்த பிறகும் அப்பகுதியில் இருந்து வெளியேறிய முஸ்லிம் குடும்பங்கள் திரும்ப செல்ல பயந்து தங்கள் சொந்த வீடுகளுக்கு செல்லாமல் வறுமையில் வாடுகின்றனர்.

இர்ஷாத் அலி, அவர் மனைவி சாதியா மற்றும் அவரது மூன்று குழந்தைகள் பிப்ரவரி 25ம் தேதி அவர்கள் சொந்த வீட்டை விட்டு உயிர் பிழைப்பதற்காக வெளியேறினர். அப்போது அங்கே முஸ்லிம்கள் தங்கள் கண்களுக்கு முன்னால் எரிக்கப்படுவதை பார்த்திருக்கின்றனர். அதிலிருந்து மீள முடியாமல் இனி மீண்டும் அங்கே செல்லக் கூடாது என்று உறுதியாக இருக்கிறார் சாதியா.

இர்ஷாத் தங்களது வீட்டில் இருக்கும் மீதி பொருட்களை எடுத்து வர சொந்த வீட்டுக்கு சென்றிருக்கிறார். அங்கிருக்கும் அண்டை வீட்டுக்காரர், மீண்டும் இங்கே வாருங்கள் எந்த பிரச்சனையுமில்லை என்று சொல்வதற்கு பதிலாக வீட்டை விற்க போகிறீர்களா?.. எங்களுக்கு கொடுங்கள் என்று இர்சாத்திடம் கேட்டிருக்கிறார்கள். இதனை சொல்லி புலம்புகிறார் இர்சாத்.

என்ன நடந்தாலும் பரவாயில்லை. நாங்கள் 15 வருடமாக அங்கே தான் வாழ்ந்தோம். இப்படியொரு நிலை உருவாகும் என்று நாங்கள் நினைக்கவே இல்லை. தற்போது மிகச்சிறிய வீட்டில் வாடகைக்கு இருக்கிறோம். மிக கஷ்டப்பட்டு தான் வாழ்கிறோம். ஆனாலும் இனி அந்த வீட்டுக்கு நாங்கள் போக மாட்டோம் என்று அழுது கொண்டே சொல்கிறார் சாதியா.

சாதியாவின் வீட்டுக்கு பத்திரிக்கையாளர்கள் சென்று விசாரித்த போது இர்சாத் மட்டும் தான் இந்த தெருவில் ஒரே முஸ்லிம் என்றார்கள். அப்போது தான் சாதியாவின் பயம் புரிந்தது என்கிறார் பத்திரிக்கையாளர்.

இர்சாத்தின் குடும்பத்தை போலவே மற்றொரு குடும்பம் சௌகீன் மற்றும் அவரது மனைவி செஹனாஸின் குடும்பம். சௌகின் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் கலவரத்தில் இருந்து தப்பித்து உயிர் பிழைத்திருக்கிறார்.

செஹனாஸ் இது பற்றி கூறும் போது, எங்கள் உயிரை காத்துக் கொள்ள நாங்கள் அண்டை வீட்டு இந்து நபரின் மாடியில் குதித்து விட்டோம். அவர்கள் எங்களை பாதுகாக்க முடியாது என்று கூறிவிடவே என் சிறிய மகனை இடுப்பில் வைத்து ஒழிந்து ஒழிந்து ஓடினோம். என் மகன் அதிகமாக அழுததால் அவன் சத்தம் கலவரக்காரர்களுக்கு கேட்டு விடக் கூடாது என்பதற்காக அவன் வாயை பொத்தி விட்டேன். என் கணவர் பைக்கை எடுத்து வருகிறேன் என்றார். பைக்கின் சத்தம் கேட்டு விட்டால் கலவரக்காரர்களிடம் பிடிபட்டு விடுவோம் என்பதால் இரண்டு மணி நேரம் நடந்து என் அம்மா வீட்டுக்கு வந்தோம்.

சௌகீன் ஒரு தையல்காரர். வீட்டில் இருக்கும் மீதி பொருட்களை எடுத்து செல்ல போகும் போது தனது தையல் மிஷின்கள் உட்பட அனைத்தும் எரிக்கப்பட்டது தெரிந்தது. என் அண்டை வீட்டுக்காரரான சதீஸ் குமார் அங்கிருந்தார். அவர் ஏதும் பேசவில்லை. ஆனால், அவர் கண்களில் எங்களை காப்பாற்ற

முடியாமல் போனதற்கான வருத்தம் இருந்ததை புரிந்து கொள்ள முடிந்தது. இனி எந்த காலத்திலும் நாங்கள் திரும்பி போக மாட்டோம் என்று கூறுகிறார்கள் சௌகீன் குடும்பத்தினர்.

இதைப்போலவே ஒரு 50 வயதான கணவனை இழந்த முஸ்லிம் பெண்மணி இரண்டு இந்து இளைஞர்களின் உதவியோடு குங்குமத்தை வைத்து தப்பி பிழைத்திருக்கிறார். இவரும் தன் சொந்த வீட்டுக்கு திரும்ப விரும்பவில்லை.

இப்படி கிட்டத்தட்ட கலவரம் முடிந்து நான்கு மாதங்கள் கடந்தும் தங்கள் சொந்த வீட்டுக்கே திரும்பாமல் பயத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். - The Wire 02.06.2020

## புல்லட்களினால் தங்கள் வாழ்க்கையை இழந்த நான்கு சிறுவர்களின் சோகம்

டெல்லி கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களில் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அடங்குவர். அதில் இளைஞர்களின் நிலையை விவரிப்பது தான் இந்த நான்கு இளைஞர்களின் கதை.

சமீர்,15 வயது டெல்லி கலவரத்தில் காலில் சுடப்பட்டு தற்போது வரை எழுந்து நடக்க முடியாமல் சிகிச்சை பெற்று வருகிறார்.

சமீரே தனக்கு நடந்த கொடுமையை விவரிக்கிறார்" அன்று, மசூதியில் இருந்து வீட்டுக்கு சாப்பிடுவதற்காக சென்றுக் கொண்டிருந்தேன். அப்போது தூரத்தில் காவிக்கொடியுடன் ஒரு கும்பல் கோசம் எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

அவ்வளவு தான் என் கால்களில் ஏதோ பெரிய அடி விழுந்தது போல இருந்தது. உடனே விழுந்து விட்டேன். ரத்தம் ஓடிக்கொண்டே இருந்தது. அருகிலிருக்கும் சிறிய கிளினிக் கொண்டு சென்றார்கள். அங்கே இரு பெண் மருத்துவர் ரத்தத்தை நிறுத்துவதற்காக பேண்டேஜ் போட்டார். ஆனால் போடப் போட முழுவதும் ரத்தமாக மாறியது. அந்த பெண் மருத்துவரின் ஆடையையே நான் எனது ரத்தத்தில் வீணாக்கி விட்டேன் என சொல்லலாம்.



அதன் பிறகு நீண்ட நேரத்திற்கு பின்னால் மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். அங்கே அறுவை சிகிச்சை செய்து புல்லட்டை வெளியில் எடுத்தார்கள். ஆனால், எனது முதுகெலும்பு பாதிக்கப்பட்டதால் எனது கை, கால்கள் வேலை செய்யவில்லை.

தொடக்கத்தில் சில வாரங்களுக்கு எனக்கு வலி குறைவதற்காக ஊசி போடுவார்கள். ஒரு ஊசியின் விலை 3000 ரூபாய். இப்போது தான் என்னால் எழுந்து உட்கார முடிகிறது. ஆனாலும் இன்னும் நடக்க முடிவதில்லை.

வீட்டிற்கு இப்போது சம்பாய்தமும் இல்லை. அரசு நிவாரணமாக 20,000 ரூபாய் கொடுத்தார்கள். ஆனால் அது மருத்துவத்திற்கே போதவில்லை.

முதலில் கலவரம், அடுத்து எனக்கு மருத்துவமனை, தற்போது ஊரடங்கு என்பதால் அப்பாவுக்கும் வருமானமில்லை. இந்த நிலையில் தான் எங்கள் வாழ்க்கை கழிகிறது. தினமும் குரான் ஓதுகிறேன் அதுதான் எனக்கு சக்தியை கொடுக்கிறது என்றார்"

சமீரின் அம்மா கலவரத்தை பற்றி பேசுவதற்கு நாங்கள் விரும்பவில்லை. எங்கள் குழந்தைக்கு இப்படி ஆனதற்கு நியாயம் வேண்டும் என்றெல்லாம் எங்களுக்கு எண்ண மில்லை. இதுவே போதும். என் குழந்தை மீண்டும் பழைய முறையில் எழுந்து நடந்தால் போதும் என்று கூறினார்.

சமீரை போலவே 19 வயதான அத்னானின் கதையும்,

தனக்கு நடந்த நிகழ்வை அத்னான் விவரிக்கிறார்," எனது தாய்க்கு மருந்து

வாங்க இந்துக்கள் அதிகமாக இருக்கும் பகுதிக்கு சென்றேன். அப்போது அங்கே ஒரு பெரிய கும்பல் நின்றிருந்தது. திடீரென எனது காலில் சுட்டார்கள். அங்கேயே மயங்கி விழுந்து விட்டேன். அதன் பிறகு எனது சகோதரன் தான் என்னை மருத்துவமனையில் சேர்த்தார்.

இப்போதும் ஒரு துணைக்கருவியை கொண்டே என்னால் காலை மடக்க முடிகிறது. நான் எப்போதும் போல எப்போது நடப்பேன் என தெரியவில்லை.

இங்கே இந்து - முஸ்லிம் உறவு பிளவுபட்டிருக்கிறது. இங்கே முஸ்லிம்கள் தாக்கப்படுகிறார்கள். நான் இந்துக்களை வெறுப்பதாக கூறினால் நான் ஏன் இந்துக்கள் அதிகமாக இருக்கும் இடத்திற்கு மருந்து வாங்க செல்கிறேன். எங்கள் மனதில் ஏதும் இல்லை."

அத்னானின் வீட்டிலும் தனது மகனுக்கான நீதி கிடைக்க வேண்டும் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. எங்கள் மகனின் கால் பழைய நிலைக்கு வந்து விட்டால் போதும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு.

16 வயதான சைஃப் உடைய வயிற்றில் குண்டு பாய்ந்தது. இரண்டு மாதத்திற்கு குண்டு வயிற்றிலேயே தான் இருந்தது. என் மகனை ரத்த வெள்ளத்தில் பார்க்கும் போது என் உயிர் பறிபோனது போல் இருந்தது. இப்போது அவன் மீண்டு வருவதை பார்க்கும் போது இது தவிர எங்களுக்கு வேறு எதுவும் அவசியமில்லை என்று தோன்றுகிறது என்கிறார் சைஃபுடைய அம்மா ஹூர் பானு.

சைஃப் உடைய நிலைமைக்கு நீதி வேண்டும் என பலர் சொல்கிறார்கள். ஆனால், எனக்கு நீதியை விட என் குடும்பத்தின் மீது தான் கவலை அதிகம். அதனை இழக்க விரும்பவில்லை என்கிறார்கள் பெற்றோர்கள்.

14 வயதான தாய், தந்தை இல்லாத ஃபைசனின் கதையும் மிக கோரமானதே, வயிற்றில் சுடப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்த ஃபைசனை மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள். எட்டு மணி நேரத்திற்கு பிறகு ஃபைசனின் வயிற்றிலிருந்து புல்லட் வெளியில் எடுக்கப்பட்டது. தற்போது வரை சிகிச்சையில் தான் ஃபசன் இருக்கிறான்.

இப்படி 14 வயது சிறுவன் முதல் முதிய வர்கள் வரை டெல்லி கலவரத்தின் கோரம் நீண்டிருக்கிறது. ஆனால், இதில் யாரும் தங்கள் குழந்தைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நீதி கோரவில்லை, இனி வாழும் வாழ்க்கையிலாவது இத்தகைய கோரங்கள் நிகழாமல் இருக்க வேண்டுமென்பதே இவர்கள் எதிர்பார்ப்பு.
- The wire 04.06.2020

## சர்வதேச அழுத்தம்

ஐக்கிய மனித உரிமை அமைப்பு - சிஏஏ எதிர்ப்பு போராட்டக்காரர்கள் விடுதலை செய்ய கோரிக்கை

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்பை சார்ந்த வல்லுனர்கள், இந்தியாவில் சிஏஏ எதிர்ப்பு போராட்டங்களில் கலந்து கொண்ட காரணத்திற்காகவே மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள் மீது வழக்கு பதிந்து சிறைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். சிஏஏ எதிர்ப்பு போராட்டங்களில் பேசியவற்றை அடிப்படையாக கொண்டு மட்டுமே இத்தகைய கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக் கிறது. அதனால் அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

குறிப்பாக சிலரது பெயர்களை குறிப்பிட்டு விடுதலை செய்ய வலியுறுத்தப்பட்டிருக்கிறது. "மீரான் ஹைதர், குல்ஃபிஹா பாத்திமா, சஃபூரா சர்கார், ஆசிஃப் இக்பால், தேவகானா கலிதா, நடாஷா நார்வல், காலித் சைஃபி, சிஃபா உர் ரஹ்மான், டாக்டர்.கஃபில் கான், சர்ஜீல் இமாம், அகில் கோகாய்" ஆகியோர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் சஃபூரா மட்டுமே ஜாமீனில் உள்ளார். மற்ற அனைவரும் சிறையில் தான் இருக்கிறார்கள்.

விசாரணைக்கு முன்பாகவே சிறையில் தள்ளுவது அநீதியான செயல் முதலில் இவர் களை சிறையில் இருந்து வெளிவிட வேண்டும்.

அதே போல், சிஏஏ ஆதரவு போராட்டங் களில் சுட்டுத்தள்ளுங்கள், கொல்லுங்கள் போன்ற வெறுப்பு கோசமிட்டவர்கள் மீது எந்த நடவடிக்கை எடுக்காததையும் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. - Live Law 26.06.2020



# டெல்லி கலவரம்

## பாலியல் பலாத்காரம், கொலை, மசூதி எரிப்பு என இந்துத்துவ தீவிரவாதிகளின் திட்டமிட்ட கொடூரம்



இந்த வருடம் பிப்ரவரி மாத இறுதியில் இந்தியாவின் தலைநகர் டெல்லியில் சிஏஏ சட்டத்திற்கு எதிராக போராட்டங்கள் நடத்தியவர்கள் மீதும், முஸ்லிம் வீடுகள் மீதும் பெரும் கலவரம் நடத்தப்பட்டது. இதில் 53 பேர் தங்கள் உயிரை இழந்தனர். அதில் 40 பேர் முஸ்லிம்கள்.

முஸ்லிம்களின் மீது எப்படியெல்லாம் திட்டமிட்டு கலவரம் நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்பதை கைது செய்த ஒரு இந்துத்துவ தீவிரவாதியின் வாட்சாப் மூலம் வெளிப்பட்டிருக்கிறது.

பிப்ரவரி 26ம் தேதி இரவு 11.44 மணிக்கு இந்த வாட்சாப் குழுவில் வந்த செய்தி "பாகிராதி பகுதியில் உன் நண்பன் இரவு 9 மணிக்கு 2 முல்லாக்களை (முஸ்லிம்களை) கொன்றிருக்கிறான்." கொலை செய்யப்பட்ட இரண்டு பேர், முஹம்மது ஆமீர்(30). ஹாசிம் அலி(16) இருவரின் உடல்களும் 27ம் தேதி சாக்கடையில் இருந்து எடுக்கப்பட்டது.

எந்த காரணமும் இல்லாமல் அப்பாவி 16 வயது சிறுவனை கொலை செய்ததை கூட பெருமையாக வாட்சாப்பில் பகிர்ந்து சந்தோசப்படும் மனநிலை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள்.

டெல்லி கலவரத்தில் கொல்லப்பட்ட ஒருவரின் வழக்கில் கைது செய்யப்பட்டவனின் செல்போனில் வாட்சாப் குழு பிப்ரவரி 25ம் தேதி உருவாக்கப்பட்டது. இதனை உபயோகித்து கலவரம் நிகழ்த்தியதும், கலவரம் செய்பவர்களுக்கு வழிகாட்டியதும் தெரிய வந்திருக்கிறது. இதை தொடர்ந்து காவலர்கள் வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள்.

இந்த வாட்சாப் குழுவை பிப்ரவரி 25ம் தேதி "kattar Hindu Ekta" (தீவிர இந்துக்கள் ஒன்றினைவோம்) என்ற பெயரில் உருவாக்கியிருக்கிறார்கள். இதில் மொத்தம் 125 பேர் உறுப்பினர்களாக உள்ளார்கள். இந்த குழுவின் முக்கிய பணியாக அவர்கள் குறிப்பிட்டிருப்பது, கலவரக்காரர்களை ஒன்று திரட்டுவது, அருகிலிருக்கும் முஸ்லிம்களை கண்காணிப்பது, முஸ்லிம்களை கொல்ல தேவையான ஆயுதங்களை சப்ளை செய்வது.

அந்த குழுவில் உள்ள மெஸேஜ்களை ஆய்வு செய்து தி வயர் செய்தி நிறுவனம் தகவல்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறது.



எந்த காரணமும் இல்லாமல் அப்பாவி *16* வயது சிறுவனை கொலை செய்ததை கூட பெருமையாக வாட்சாப்பில் பகிர்ந்து சந்தோசப்படும் மனநிலை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள்.

அந்த குழுவில் வந்த சில மெசேஜ்கள்,

"நான் கங்கா நகர், கோகுல் புரி, ஜோஹ்ரிபூர் ஆகிய இடங்களில் இருந்தேன். அங்கே நமது ஆட்களால் *23* முல்லாக்களின்(முஸ்லிம்களின்) தலை வெட்டப்பட்டிருக்கிறது."

"பாஹிரவதி நகரின் *4* வது தெருவில் தற்போது முஸ்லிம்கள் நுழையும் தகவல் கிடைத்திருக்கிறது. இந்து சகோதரர்களே அவர்களை தாக்குவதற்கு தயார்படுத்திக் கொள்ளுங்கள்"

"முஸ்லிம் பெண்கள் பல பகுதிகளில் மசூதிக்கு வெளியே தஞ்சம் புகுந்து இருக் கிறார்கள். அவர்களை அனைவரையும் பாலியல் பலாத்காரம் செய்யுங்கள்."

பிப்ரவரி *27*ம் தேதி அதிகாலை *1.50* மணிக்கு " இங்கே எங்களிடம் ஒரு முஸ்லிம் மாட்டியுள்ளான். அவனது பெயர் சோனு"

"இந்த நாதாரிகள் (முஸ்லிம்கள்) இந்துக் களின் பேர்களை உபயோகித்து தப்பிக்கிறார்கள். சிக்கியவர்களிடம் நன்றாக விசாரணை செய்யுங்கள்"

அதேநாள் காலை *4.05* மணிக்கு "பிடிபடுவர்கள் முஸ்லிம்களாக இருக்கலாம் என்று சந்தேகம் வந்தால் ஜெய் ஸ்ரீ ராம் மந்திரம் சொல்லச் சொல்லுங்கள். அவர்களுடைய அடையாள அட்டைகளை எடுத்து விசாரித்து அனுப்புங்கள்"

பிப்ரவரி *28*, மாலை *3.24* மணிக்கு, "இன்று பாஹிரதி பகுதியில் முஸ்லிம்களை தொழுகை நடத்த நாங்கள் (கலவரக்காரர்கள்) அனுமதிக்க மாட்டோம்."

கபில் மிஸ்ரா உட்பட பாஜகவினர் பற்றிய மெஸேஜ்களும் இந்த குழுவில் இடம் பெற்றிருக் கிறது.

கபில் மிஸ்ரா கூட்டத்தில், காவலர்கள் சிஏஏ சட்டத்திற்கு எதிராக போராடுபவர்களை நீக்கவில்லையென்றால் நாங்கள் ஒவ்வொரு வரும் ரோட்டில் இறங்கி அவர்களை விரட்டு வோம் என்று மிரட்டும் வீடியோவை பகிர்ந்து" கபில் மிஸ்ராவின் வீடியோவை கேளுங்கள், கேட்டீர்கள் எனில் சொல்வது புரிந்து விட்டதா இனி இதை இந்தியா முழுக்க கொண்டு போவோம். நண்பர்களே நம்மால் முடிந்ததை நாம் செய்வோம்"

முஸ்லிம்களின் உயிரை எடுக்க வேண்டும் என்பதை குறிப்பிட்டு "நீண்ட காலமாக முஸ்லிம்கள் சுதந்திரம், சுதந்திரம் என்று கத்திக் கொண்டே இருக்கிறார்கள். இப்போது அவர்களுக்கு ஒரேடியாக சுதந்திரம் அளிக்க தயாராவோம்."

இன்னொரு மெசேஜில் "நாம் இவர்களின் மசூதிகளை எரித்து முடித்து விட்டோம். மிக நல்லது, இனி நாம் அவர்கள் தாய்மார்களை பாலியல் பலாத்காரம் செய்வோம்."

அப்பாவி முஸ்லிம் குழந்தைகளை, இளைஞர்களை அடித்தே கொன்றிருக்கிறோம் என்று மகிழ்ச்சியாக வாட்சாப்பில் பகிரக்கூடிய, அப்பாவி பெண்களை முஸ்லிம்களாக இருந்தால் பாலியல் பலாத்காரம் செய்யுங்கள் என்று சுட்டிக்காட்டி தைரியப்படுத்தும் இக்கொடூர இந்துத்துவ தீவிரவாதிகள் இந்த நாட்டுக்கு எவ்வளவு ஆபத்தானவர்கள் என்பதை உணர வேண்டும்.

பிப்ரவரி *25*ம் தேதி இரவு *8* மணிக்கு வந்த மெஸேஜில், "பிரிஜ்புரி பகுதியில் எங்களுக்கு உதவு ஆர்.எஸ்.எஸ் அமைப்பை சார்ந்தவர்கள் வந்து விட்டார்கள். பிரிஜ்புரி பாலத்தில்

மட்டும் 9 முஸ்லிம்களை கொன்றிருக்கிறோம்."

பிப்ரவரி 25ம் தேதி இரவு 9.08 மணிக்கு வந்த மெஸேஜில்." அவர்களின் தாய்களை பாலியல் பலாத்காரம் செய்யுங்கள். என்ன ஆனாலும் பரவாயில்லை, பார்க்கும் எந்த முஸ்லிம்களையும் விடாதீர்கள். எல்லோரையும் கொன்று விடுங்கள். எதையும் பார்த்துக் கொள்வோம் நாம்."

முஸ்லிம்கள் நம் இந்து மதத்தை அழிக்கிறார்கள், நாட்டை அழிக்கிறார்கள், நமது இந்து பெண்களை கடத்தி செல்கிறார்கள், அவர்களை (முஸ்லிம்களை) விட்டால் நமது நாட்டில் நம்மை அடிமை ஆக்கிவிடுவார்கள் என்று முஸ்லிம்களின் மீது வெறுப்புக் கருத்துக் களை பரப்பும் நிறைய ஃபார்வர்டு மெசேஜ்கள் குழுவில் அதிகமாக இருக்கிறது.

ஒரு மெஸேஜில் "இனி அவர்கள் மசூதியில் ஸ்பீக்கர் உபயோகப்படுத்தக்கூடாது. முஸ்லிம் களுக்கு நம்மைப் பற்றியான பயத்தை உருவாக்க வேண்டும்"

இந்த குழுவில், முஸ்லிம்களை கொல்வதற்கு என்ன மாதிரியான ஆயுதங்கள் உபயோகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு துப்பாக்கிக்கும் என்ன குண்டுகள் பயன்படுத்த வேண்டும் எனவும் பகிரப்பட்டிருக்கிறது.

இந்த ஒரு குழுவில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் தான் இத்தனையும். இந்த குழுவில் நிறைய பார்வர்டு மெசேஜ்களும் இருக்கிறது. இதுபோல் பல குழுக்கள் இயங்கலாம் என்று தற்போது கணிக்கப்பட்டிருக்கிறது.

அப்பாவி முஸ்லிம் குழந்தைகளை, இளைஞர்களை அடித்தே கொன்றிருக்கிறோம் என்று மகிழ்ச்சியாக வாட்சாப்பில் பகிரக்கூடிய, அப்பாவி பெண்களை முஸ்லிம்களாக இருந்தால் பாலியல் பலாத்காரம் செய்யுங்கள் என்று சுட்டிக்காட்டி தைரியப்படுத்தும் இக்கொடூர இந்துத்துவ தீவிரவாதிகள் இந்த நாட்டுக்கு எவ்வளவு ஆபத்தானவர்கள் என்பதை உணர வேண்டும்.

- தகவல் The Wire 06.07.2020

- அபூ சித்திக்



# முஸ்லிம் இளைஞர்கள்

## எப்போதுமே சிறையில் இருக்க வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள்...

**- அஜித் சாகி**



**(குற்றமற்றவர் என்று தெளிவாகத் தெரிந்தும் பல ஆண்டுகளாக காவல்துறையினரால் பலியாடாகப் பயன்படுத்தப்பட்டு வருபவர் மௌதாசிம் பில்லா)**

பிரதிவினை வாதம் மற்றும் பயங்கரவாத வழக்குகள் சுமத்தப்பட்டதால் பொறியியல் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் தனது படிப்பை விட்டுவிட வேண்டியதாயிற்று ஹைதராபாத்தைச் சேர்ந்த 27 வயதான மௌதாசிம் பில்லா இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவுகள் குறித்துப் பேசுவதைக் காணும்போது எந்தவொரு வழக்கறிஞரும் பெருமைகொள்வார். பில்லா இந்தப் பிரிவுகளில்ன் கீழ் தேர்ச்சியுடையவராக இருப்பதற்குக் காரணம் அவர் கடந்த ஏழு ஆண்டுகளாக இந்தப் பிரிவுகளின் கீழ் தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்.

2008 மார்ச், 5 அன்று பில்லா கைது செய்யப்பட்டிருக்கிறர். கடந்த ஆண்டு நடை பெற்ற வெடிகுண்டு வழக்குகள் தொடர்பாகப் பல இளைஞர்களைக் கைது செய்து மின்சாரம் பாய்ச்சி சித்திரவதை செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றபோது அதில் ஒன்றில் இவர் பெயர் குறிப்பிட்டிருந்தது. 2007 மே மாதத்தில் சார்மினார் அருகில் உள்ள மெக்கா மஸ்ஜித் மசூதிக்கு வெளியே நடந்த வெடிகுண்டு சம்பவத்தில் 9 பேர் கொல்லப்பட்டிருந்தனர். தின் பண்டக் கடை ஒன்றிலும் பூங்கா ஒன்றிலும் ஆகஸ்ட் மாதத்தில் ஒரே நேரத்தில் நடைபெற்ற வெடிகுண்டு சம்பவங்களில் மேலும் 40 பேர் கொல்லப்பட்டனர்.

இரண்டு வெடிகுண்டு சம்பவத்திலும் பில்லாவைக் கைது செய்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்பதை உணர்ந்த காவல்துறை பில்லாவும் அவரது நண்பரும் கல்லறையொன்றில் இரசியமாகச் சந்தித்து, இந்து - முஸ்லிம் கலவரத்தைத் தூண்டத் திட்டமிட்டிருந்தார்கள் என்ற போலியாக வழக்கொன்றைப் பதிவு செய்தது. அச்சந்திப்பு நடக்கவிருந்த இடத்தைச் சோதனையிட்டு ஏழு பேரைக்கைது செய்ததாகவும் ஆனால் மார்ச் மாதம் கைதாகும் வரை தலை மறைவாக இருந்தார் என்றும் காவல்துறை கூறியது. உயர்நீதிமன்றம் பிணை தரும்வரை பில்லா 90 நாட்கள் சிறையில் இருந்தார். "உணர்வைத் தூண்டும் குறுந்தகடுகள்" கல்லறை அருகே

கண்டுபிடிக்கப்பட்டது என்பதுதான் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கிருந்த ஒர் ஆதாரம்.

"ஏதோவொரு காரணத்தின் பேரில் முஸ்லிம் இளைஞர்கள் எப்போதும் சிறையில் இருக்க வேண்டும் என்று காவல்துறை விரும்புகிறது" என்று பில்லா தெரிவித்தார். அவர் விடுதலையாகி சில மணிநேரங்களுக்குப் பிறகு 2008, ஜூன் 12 அன்று ஹைதராபாத்திலுள்ள தனது வீட்டில் பேசிக் கொண்டிருந்தபோது பில்லா இதனை டெகல்காவிடம் தெரிவித்தார். இந்தியக் காவல் துறை எவ்வாறு அப்பாவி மக்களை வலையில் சிக்கவைத்து அவர்களின் வாழ்வை நரகமாக்கு கிறது என்பதற்கு பில்லாவின் வாழ்க்கை ஒரு நல்ல எடுத்துக்காட்டு. அவரது கதை, அவரது 15-ஆவது வயதிலிருந்து தொடங்குகிறது.

ஆப்கானிஸ்தானிக்குள் நுழைவது என்ற அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹைதராபாத்தில் 2001 ஆம் ஆண்டு உள்ளூர் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் என்று விடுத்திருந் தனர். அதில் பில்லாவும் கலந்து கொண்டான். ஏதோ சில காரணங்களுக்காக இந்தியாவில் இதைக் குற்றமெனக் காவல்துறை கருதியது. எனவே அது பில்லா உட்பட நூற்றுக் கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது வழக்குத் தொடுத்தது. சுதந்திரமான எந்த சாட்சிகளோ சான்றுகளோ இல்லாமல் இவ்வழக்கு கடந்த ஏழு ஆண்டுகளாக இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. இக்காலக்கட்டத்தில் பில்லா விசாரணைக்காக ஐம்பதுக்கும் மேற்பட்ட முறை விசாணைக்காக நீதிமன்றம் சென்றிருப்பார்.

2002 இல் அவர் இன்னொரு ஆர்ப்பாட் டத்தில் கலந்து கொண்டதால், இன்னொரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் மீது வீசப்பட இருக்கும் உயிருள்ள கையெறி குண்டாக அதுஅவர் முன் நிற்கிறது.

2004-இல் ஒரு துயர நிகழ்வு ஏற்பட்டது. பில்லாதான் அதற்கு இரையானார். ஆனால் பில்லா மீது கடுமையான குற்றங்களைக் காவல் துறை குற்றம் சுமத்தி வழக்குப் போட்டது. ஹைதராபாத்தைச் சேர்ந்த மௌாலான நசிருதீன் மற்றும் அவரது இரண்டு மகன்களும் வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பதைக் காவல்துறை மறைத்துப் பொய் கூறுகிறது என்பதைக் கடந்த மாதம் டெகல்கா அம்பலப் படுத்தியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஹைதராபாத்தில் சைதாபாத் முஸ்லிம்கள் பகுதியில் மௌலானா நசிருதீனும் பில்லாவின் குடும்பத்தாரும் அண்டை வீட்டார்கள். தன் மீது இருந்த பழைய வழக்கு ஒன்றுக்காக உள்ளூர் காவல்நிலையம் சென்று பில்லா கையெழுத்திடு வது வழக்கம். அதேபோல் 2004 அக்டோபரில் ஒருநாள் சென்றபோது, குஜராத் மாநிலத்தின் முன்னாள் உள்துறை அமைச்சர் ஹிரேன் பாண்டி யாவைக் கொலை செய்தது உட்பட அம்மாநிலத் தில் கலவரத்தை ஏற்படுத்த சதித்திட்டமிட்ட தற்காகவும் பில்லாவைக் கைது செய்ய குஜராத் காவல்துறையினர் அங்கு காந்திருந்தது.

நசிருத்தீனுடன் காவல்நிலையத்திற்கு உடன் சென்றிருந்த சில முஸ்லிம்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஒரு குஜராத் காவல் துறை அதிகாரி அவர்களை நோக்கித் துப்பாக்கி யால் சுட்டபோது எதிர்ப்பு தெரிவித்தவர்களில் ஒருவர் கொல்லப்பட்டார். அவன் பில்லாவின் உடன் பிறந்த சகோதரர். தன் சகோதரர் மரணத்திற்கு பில்லா நியாயம் கேட்காமலிருக்க, எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் மீது தொடுக்கப் பட்ட வழக்கில் அவரையும் ஒரு குற்றவாளியாகச் சேர்த்தது காவல்துறை.

காவல்துறை அதிகாரிகள் தங்கள் கடமை யைச் செய்ய இடையூறாக இருந்தனர் என்ற மிகவும் கடுமையான குற்றச்சாட்டு அவர்மீது பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் நசிருத்தீன் கைது செய்யப்பட்டார். எதிர்ப்பாளர்கள் கடுமையாகப் போராடி குஜராத் காவல்துறை அதிகாரியை வழக்குப் பதிவு செய்ய வைத்தனர். இவ்வழக்கில் நேரடி சாட்சியாக பில்லா சேர்க்கப்பட்டார்.

நாடு முழுவதும் காவல்துறை ஒவ்வொரு வழக்கிலும் திரும்பத் திரும்ப யாரோ ஒருவரை 'தலைமறை' என்று காட்டி வந்ததை டெகல்கா வின் விசாரணைகள் புலப்படுத்தின. காவல்துறை மீது பழி விழும் நேரங்களில் அவரை எளிதாகக் கைது செய்ய முடியும். இப்படித்தான் மைராய்ட் வழக்குகளில் பில்லா சேர்க்கப்பட்டு 2001 முதல் அலைக்கழிக்கப்பட்டு வருகிறார். ஆனால், பில்லா தலைமறைவாக இருப்பவரல்ல.

2004 ஆம் ஆண்டு மூன்றாமாண்டு படிப்பை இடை நிறுத்தும் வரை அவர் உள்ளூரிலுள்ள டெக்கான் கல்லூரியில் பி.இ., சிவில் பயின்று வந்தார். அவர் சமூக நிகழ்வுகளில் தொடர்ச்சியாகப் பங்கேற்று வந்தார். அவர் கைபேசி ஒன்றையும் பயன்படுத்தி வந்தார். அதைக்கொண்டு அவர் எங்கிருக்கிறார் என்பதை அறிவது எளிது.

சிமி உறுப்பினர்களைப் பழைய வழக்குகளில் தொடர்புப்படுத்துவது என்ற உத்தியைக் காவல் துறை வழக்கமாகக் கொண்டிருந்தது. 2004-இல் மௌலானா நசிருத்தீன் கைது செய்யப்பட்டதற்கு மறுநாள், ஆத்திரமடைந்த முஸ்லிம்கள் காவல் துறை மீது கல்வீசினர். அப்போது கல்லறைக்கு எடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்த பில்லாவின் சகோதரர் உடல் உள்ள சவப்பெட்டி சேதமடைந்தது. காவல்துறை மீண்டும் ஒரு வழக்குப் பதிவு செய்தது. அவ்வழக்கு பதிவாகி மூன்றாண்டுகள் வரை பில்லா அதில் குற்றவாளியாகச் சேர்க்கப்படவில்லை. ஆனால், 2008 மார்ச், 5-இல் அவர் கைது செய்யப்பட்டதும் காவல்துறை அந்த வழக்கிலும் அவரைக் குற்றவாளியாகச் சேர்த்தது.

நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டபோது, தான் எந்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் காவல்துறையிடம் அளிக்கவில்லை என்றும் வெற்றுத் தாளில் கையெழுத்திடக் கட்டாயப் படுத்தப்பட்டதாகவும் நீதிபதியிடம் பில்லா தெரிவித்தார். ஆனால் அவரது நிலைமை மிக மோசமாக இருந்தது. சிமியின் தலைவரான சப்தர் நகோரி என்ற சிமியின் தலைவரோடு பில்லா தொடர்பில் இருந்து வந்ததாகக் காவல்துறையின் ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறப்பட்டிருந்தது.

நகோரி 2008 மார்ச், 26 அன்று இந்தூரில் கைது செய்யப்பட்டிருந்தார். காவல்துறைக்குக் கடைசியாகக் கிடைத்த அப்பாவி இளைஞர், விசாரணை இன்னும் தொடங்காத நிலையிலேயே மிகப்பெரிய பயங்கரவாதியாக ஊடகங்களால் சித்தரிக்கப்பட்டார்.

வினோதமானது என்னவெனில், காவல் துறை பில்லா மீது தொடர்ந்த வழக்குகள் எதிலும் அவர் சிமியின் உறுப்பினர் என்று குறிப்பிடப்படவே இல்லை. அவர் சிமி உறுப்பினர் ஒருவரின் சகோதரர் (அவரது குடும்பமும் சிமியும் இதையும் மறுத்தன) அல்லது சிமியின் 'ஆதரவாளர்' அல்லது சிமி உறுப்பினர்களோடு 'தொடர்புடையவர்' என்றே குறிப்பிடப்பட்டிருந்தார். ஆனால் ஹைதராபாத் உயர் காவல்துறை அதிகாரிகளில் ஒருவரான அமித் கார்க் மட்டும் தடை குறித்தது விசாரிக்கும் தீர்ப்பாயத்தில், பில்லா சிமியின் உறுப்பினர் என்ற உறுதிபடத் தெரிவித்தார். இது அமித் கார்க்கின் முன் முடிவாக அல்லது தீர்ப்பாயத்தைத் திசை திருப்பும் திட்டமிட்ட முயற்சியாக இருக்கலாம். தீர்ப்பாயத்தின் முன் ஆந்திராவில் பதிவு செய்யப்பட்ட சிமி வழக்குகள் அனைத்திலும் ஆந்திரக் காவல்துறையின் சார்பைப் பிரதிநிதித்துவம் செய்யும் அதிகாரி (பொறுப்பானவர்) என்ற முறையில் தீர்ப்பாயத்தின் முன் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார் கார்க்.

அப்போது அவர், எந்த விதத்திலும் அவ்வழக்குகள் குறித்து நேரடியான, தனிப்பட்ட தொடர்பில்லை என்றும், பல்வேறு புலனாய்வுத் துறை அதிகாரிகள் அளித்திருக்கும் ஆவணங்களை அடிப்படையிலேயே தான் சாட்சியமளிப்பதாகவும் அப்போது கூறினார். ஆனால் கார்க் சொன்னதைத் தவிர, பில்லா சிமியின் ஒரு ஆதரவாளர் என்று எந்த ஆவணங்களிலும் குறிப்பிடப்படவில்லை.

பில்லாவின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் முன்முடிவுகளின் அடிப்படையில் தொடுக்கப்பட்டவை. முந்தைய தீர்ப்பாய விசாரணைகளின்போது சிமியின் சட்ட உதவிக்குழுவுக்கு உதவுவது என்று பில்லா எடுத்த துணிச்சலான முடிவினால், காவல் துறை தந்திரமாக அவரை 2006 முதல் பல்வேறு வழக்குகளில் சிக்க வைத்துள்ளது.

**காவல்துறையினர் என்னிடம் வந்து, "நீ சிமி உறுப்பினர் இல்லையென்றால் பின் ஏன் இங்கு வந்தாய்?" என்று கேட்டனர். "நீ பயங்கரமானதொரு தவறைச் செய்கிறய் என்று அவர்கள் என்னிடம் கூறினர்" என்று பில்லா நினைவு கூர்ந்தார்.**

(ஆதாரம் - டெகல்கா இதழ், வால் 5, இதழ்-32, 2008, ஆகஸ்ட்-16)



சிலுவைப் போர்கள் 2.0

# கலீபா உமர் (ரழி) அவர்களின் அறிவுரை

## போர்களில் இஸ்லாம் கடைபிடித்த இங்கிதங்கள்

"உங்கள் எதிரியை நீங்கள் கொன்ற பின் அவர்களின் உடலைச் சின்னாபின்னாப்படுத்தாதீர்கள். அவர்களின் உடல்களை உருக்குலைக்காதீர்கள். குழந்தைகளைக் கொல்லாதீர்கள். அதேபோல் போர் செய்ய முடியாத வயோதிகர்களையும் கொல்லாதீர்கள். பெண்களை எதுவும் செய்து விடாதீர்கள். (அவர்களைக் கொலை செய்யவும் கூடாது). உணவளிக்கும் மரங்களையோ, தாவரங்களையோ அழிக்காதீர்கள். கொள்ளையடிப்பதில் இறங்காதீர்கள். கனி தரும் மரம் ஒன்றைக்கூட வெட்டிப் போட்டு விடாதீர்கள். (விறகு வேண்டமே என்பதற்காகக்கூட அவ்வாறு செய்யக்கூடாது). உணவுக்குத் தேவைப்படும் அளவே மிருகங்களை அறுங்கள். நீங்கள், ஆலயங்களுக்கும், பிற வழிபாட்டுத் தலங்களுக்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட துறவிகளைச் சந்தித்தால், அவர்களை விட்டவிடுங்கள். அவர்கள் எதற்காக இந்த உலகத்தைத் துறந்தார்களோ அதனை அவர்கள் தொடரட்டும். (இஸ்லாத்தை அவர்களுக்குச் சொல்வதோடு உங்கள் எல்லை முடியும்)"

இஸ்லாம் வகுத்து வழங்கும் போர்களின் நியதி என்னவென்பதை மேலே உள்ள வரிகள் அடிக் கோடிட்டுக்காட்டும்!

இஸ்லாம் போர்களைப் பற்றிப் பேசுவது கலகங்களையும், கலவரங்களையும், அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்துமு விடுவதற்கல்ல என்பது இங்கே தெளிவாகப் புரியும்.

அதேபோல் இஸ்லாம் வகுத்துத் தந்துள்ள போர் விதிகள் மனித இனத்திற்கோர் அருட்கொடை என்பதையும் தெள்ளிதின் தெரிந்திடலாம். இந்த அடிப்படையில் இஸ்லாம் சந்திக்கும் போர்கள் ஒன்று வெற்றியில் முடியலாம், அல்லது சமாதான உடன்படிக்கையில் முடியலாம்.

முஸ்லிம்கள் ஒப்பந்தங்களைச் செய்தால், அவற்றின்படி கண்டிப்புடன் நடந்துகொள்ள வேண்டும். இஃதோர் மார்க்கக் கடமையாகும். அந்நிலையில் அவை அல்லாஹ்வுடன் செய்து கொண்ட ஒப்பந்தகளாகக் கருதப்படும்.

இறைமறையில் இதை இறைவன் இப்படிச் சொல்லுகிறான் :

**"நீங்கள் அல்லாஹ்வின் பெயரால் செய்யும் உடன்படிக்கையைப் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வைச் சாட்சியாக வைத்து சத்தியம் செய்துஅதனை உறுதிப்படுத்திய பின்னர், அந்தச் சத்தியத்தை நீங்கள் முறித்து விடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய செயலை நன்கறிவான்."**

(அல்குர்ஆன் - 16:91)

முஸ்லிம்கள் வெற்றி பெற்றால், அது அல்லாஹ்வின் திருப்தியை இலட்சியமாகக்

கொண்ட ஒரு சமுதாயத்தின் வெற்றி என்றே எடுத்துக் கொள்ளப்படும்! அதில் அந்தப் போரில் இறந்து போகின்றவர்கள் அல்லாஹ்வின் அழகிய வழியில் உயிரைத் தந்த தியாகிகளாகக் கருதப்படுவார்கள்.

ஏனெனில், இந்தச் சமுதாயம் மேற்கொள்ளும் போர், நீதியை நிலைநாட்டுவதற்கும், உண்மையை நிலை நிறுத்துவதற்குமேயாகும். இந்த அணி வெற்றி பெற்றால் அது சத்தியத்தின் கால்களை உறுதிப்படுத்தி நிலைபெறச் செய்யும். அநியாயங்களுக்கும், குழப்பங்களுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கும். அல்லாஹ்வைத் தொழுது தீமையைத் தடுக்கும், நன்மையை ஏவும்.

இந்த அணியை - இந்தச் சமுதாயத்தை - அல்லாஹ் இப்படிக் குறிப்பிடுகிறான் :

**"அவர்கள் எத்தகையோர் என்றால், நாம் அவர்களுக்குப் பூமியில் ஆதிக்கம் கொடுத்தால், அவர்கள் தொழுகையைக் கடைப்பிடித்து தொழுகுவார்கள் ; ஜகாத்தும் கொடுப்பார்கள் ; நன்மையான காரியங்களைக் கொண்டு ஏவி பாவமான காரியங்களைத் தடை செய்வார்கள். சகல காரியங்ளின் முடிவும் அல்லாஹ்விடமே இருக்கின்றது."**

**(அல்குர்ஆன் - 22:41)**

வெற்றியை முஸ்லிம்கள் எப்படிப் பெற்றிட வேண்டும்? அவர்கள் எந்த வெற்றியை எதற்குப் பயன்படுத்திட வேண்டும் என்பவை மேலே தெளிவுபடுத்தப்பட்டன. இவை இஸ்லாமிய நாகரிகம் இந்த உலகுக்குக் கற்றுத் தந்த இங்கிதங்கள். அவற்றின் சுருக்கம், சத்தியம், நீதி, கருணை, ஒப்பந்தங்களை நிறைவேற்றுதல் என்பனவாய் அமைகின்றன.

இவை வாய்ப் பந்தல்களல்ல..!

மேலே நாம் கோடிட்டுக் காட்டிய கொள்கைகள், வாய்ச்சொல் வேதாந்தங்களாக மட்டுமே வாழ்ந்தவையல்ல. அவை வரலாற்று உண்மைகளால் மெருகேற்றப்பட்டு வாழ்ந்து மிளிர்ந்துக் கொண்டிருப்பவை.

இறைவன் வகுத்து வழங்கிய இந்த நாகரிகம், அதாவது இஸ்லாமிய நாகரிகம், இறைவனின் இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் வழியாகத்தான் நமக்கு வந்து கிடைத்தது.

ஆகவே, இங்கே அவர்களுடைய வாழ்க்கை யிலிருந்து முதல் மேற்கோளை எடுத்துத் தருகின்றோம்.

இறைவனின் வழிகாட்டுதல்களை மனிதர்களுக்குக் கொண்டு வந்து தந்திடுவதில் இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் சந்தித்த இன்னல்களை எழுதி மாளாது.

பதின்மூன்று ஆண்டுகள் இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் மக்காவில் சந்தித்த சவால்கள் கண்டோர், கற்றோர் கண்கலங்க நம்முன் நிற்கின்றன.

இந்தக் காலக்கட்டத்தில் இறைவனின் இறுதித்தூதர் (ஸல்) அவர்களும், அவர்களை ஏற்றுக்கொண்ட தோழர்களும் எண்ணற்ற இழப்புகளுக்கும், கொடுமைகளுக்கும் ஆட்படுத்தப்பட்டார்கள்.

இந்தக் கொடுமைகள் எந்த அளவுக்கு உக்கிரம் பெற்றவையாக இருந்தனவென்றால், இவற்றையெல்லாம் தாங்கிக்கொண்ட அவர்களைக் கொலை செய்யவே அந்த எதிரிகள் முன் வந்தார்கள்.

மக்காவிலிருந்து மதீனாவுக்கு வந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் அங்கேயும் அல்லல்களுக்கு ஆளாக்கப்படாமல் விட்டு வைக்கப்படவில்லை.

நபி (ஸல்) அவர்களும் அவர்களைச் சார்ந்து நின்ற அணியினரும் அங்கேயும் தாக்குதல்களுக் குள்ளானார்கள். பல போர்களை அவர்கள் சந்தித்தார்கள். அவர்களின் உயிரை இறைவன் கைப்பற்றிக்கொள்ளும் காலம் வரை அவர்கள் எதிரிகளை சந்தித்திக் கொண்டே இருந்தார்கள்.

வாழ்நாள் முழுவதும் இன்னல்களையும், கொலை பாதகத் தாக்குதல்களையும் சந்தித்துக் கொண்டிருப்பவர்கள் வாளெடுத்து சுழற்றினால் வையத்தில் என்ன நடக்கும் என்பதை ஏனைய சமுதாயங்களின் வரலாறு நமக்கு மிகவும் நன்றாகவே கற்றுத் தந்துள்ளது.

எப்படித்தான் விட்டுத் தந்தாலும் நாங்கள் விடமாட்டோம் எனக் கொடுமைகளைச் செய்த சமுதாயங்களைச் சந்திக்கப்போந்த வாள்கள் வரையறைகளைக் கடந்தே தங்கள் வலிமையைக் காட்டியிருக்கின்றன. ஆனால், அல்லாஹ்வின்

தூதுர் அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் கலந்துகொண்ட போர்களை ஏறெடுத்துப் பார்த்தாலே எண்ணற்ற இங்கிதங்கள் புரியும்.

இந்தப் போர்களில் பெரும்பாலானவை அவர்கள் மேல் திணிக்கப்பட்டவை. எனினும் இந்தப் போர்களின் வழி அவர்கள் கற்றுத் தந்த நாகரிகம், மனிதநேயத்தை மனித குலத்திற்கு கற்றுத்தந்த அழகிய முன்மாதிரி.

## உஹதுப் போரின் போது ஓர் அதிர்ச்சியான நிகழ்ச்சி!

இறைவனின் தூதுர் முஹம்மது (ஸல்) அவர்கள் இந்தப் போரில் நேரில் கலந்து கொள்கின்றார்கள். போரில் ஒரு உத்தியாக சில கட்டளைகளையும் ஆலோசனைகளையும் தருகின்றார்கள் தன் படையைச் சார்ந்தவர் களிடம்.

இந்த ஆலோசனையை - கட்டளையைச் சரிவர நிறைவேற்றாததால் பேரிழப்புக்கு ஆளா கின்றார்கள் முஸ்லிம்கள். இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு பல்லை இழக்கின்றார்கள். அவர்கள் அணிந்திருந்த கவசம் அவர்கள் கன்னத்தைக் கிழித்தது. தலையிலும் காயம். இந்நிலையில் அவர்களின் தோழர்கள் சுற்றி நின்று அவர்களைப் பாதுகாக்கின்றார்கள்.

இப்படி, இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் இரக்கமற்ற அளவில் தாக்கப்படும்போடு நொந்து நின்ற தோழர்களின் சிலர் இறைவனின் தூதர் (ஸல்) அவர்களிடம், இந்த எதிரிகளைச் சபியுங்கள் என்று வேண்டினார்கள். ஆதங்கத்தில் தங்களது தோழர்கள் எடுத்து வைத்த இந்த கோரிக்கைக்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படி பதில் சொன்னார்கள்.

"இவர்களைச் சபிப்பதற்காக அல்லாஹ் என்னை அனுப்பவில்லை. இவர்களுக்கோர் அருட்கொடையாகவே அல்லாஹ் என்னை அனுப்பினான். அத்தோடு இவர்களை உண்மையின் பக்கம் (ஏகத்துவத்தின் பக்கம்) அழைப்பதற்காகவே அல்லாஹ் என்னை அனுப்பினான்."

உண்மையை நிலைநாட்டிட வேண்டும் என்ற வேட்கையினாலேயே அல்லாஹ்வை நம்பி நிற்பவர்கள் ஆயுதம் ஏந்துகின்றார்கள். அல்லாமல் ஆதிக்க வேட்கையோ, தன் பெருமையை நிலை நாட்டுவதற்கோ அல்ல. தன்னையே ஊனப்படுத்திய போர்க்களம் ஒன்றில் பெருமானார் (ஸல்) அவர்கள் உதிர்த்த சொற்கள், இந்த உண்மையைப் பறைசாற்றுகின்றன.

## இந்த உஹத் போரின் போதுதான் பிறிதோர் அதிசயமும் இடம்பெற்றது.

ஹம்ஸா (ரழி) அவர்கள் இந்தப் போரின் போதுதான் அல்லாஹ்வின் வழியில் தங்கள் உயிரைத் துறந்தார்கள். ஹம்ஸா (ரழி) அவர்கள் மிகச்சிறந்த போர் வீரராவார்கள். (இறைவனை நிராகரித்தவர்கள் அணியில் நின்ற அடிமை வஹ்ஷி என்பவர்தான் ஹம்ஸா (ரழி) அவர் களைக் கொலை செய்தார்.) ஹம்ஸா (ரழி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையுமாவார்கள். இந்தக் கொலை எதேச்சையாக நடந்த ஒன்றல்ல. மிகவும் நுட்பமாகத் திட்டம் போட்டு நிறைவேற்றப் பட்ட ஒன்றாகும். இந்தக் கொலையைத் திட்டம் போட்டு நிறைவேற்றியதில் அபூஸுஃப்யான் என்பவரின் மனைவி ஹிந்தா என்பாளுக்கு மிகவும் பங்குண்டு.

போர்க்களத்தில் ஹம்ஸா (ரழி) அவர்கள் கொலை செய்யப்பட்ட பின்னர் அபூஸுஃப்யா னின் மனைவி ஹிந்தா, ஹம்ஸா (ரழி) அவர்களின் உடலைத் தேடினாள் ; கண்டுபிடித்தாள். அவர்களின் ஈரலை அகழ்ந்தெடுத்து மென்றாள். இத்துணை கர்ண கொடூரமானதொரு வெறி அந்தப் பெண்மணியை ஆட்டிப் படைத்தது.

காலச் சக்கரமும் சுழன்றது. அபூஸுஃப்யான், அவரது ஆணவமும், வெறியும் நிறைந்த மனைவி, இன்னும் இதுபோன்றவர்கள் அனைவரும் தோற்றுப் போனவர்களாக பெருமானார் (ஸல்) அவர்களின் முன் நின்றார்கள். மக்கத்து முழு வெற்றியின்போது, தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள். ஹிந்தாவும், வஹ்ஷியும், பெருமானார் (ஸல்) அவர்கள் முன் நின்றார்கள். பெருமைக்குப் போர் புரிபவர்கள் பழி வாங்கி யிருப்பார்கள். ஆனால், இஸ்லாத்தின் நிழலில் இவர்களுக்கெல்லாம் பொது மன்னிப்பை வழங்கினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள்,



இவர்களையெல்லாம் மன்னித்து விடும்படியும் இறைவனிடம் இறைஞ்சினார்கள்.

வஹ்ஷியிடம் மட்டும் பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படிக் கூறினார்கள் :

"நீங்கள் எங்களிலிருந்து சற்று விலகியே குடியமருங்கள். இதுவே உங்களுக்கு நல்லது!"

பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் உற்ற உறவினராகவும், இஸ்லாமிய அணியின் அணிமணியாகவும் இலங்கிய ஹம்ஸா (ரழி) அவர்களைக் கொடூரமாகக் கொலைசெய்து, அவர்களின் ஈரலை மென்ற நபர்களை நடத்திய விதம் இதுவாகும்.

எத்துணை பிரகாசமானதொரு நன்னடத்தையை, நாகரிகத்தை பெருமானார் (ஸல்) அவர்கள் மனித இனத்திற்கு நடத்திக்காட்டி விட்டுச் சென்றுள்ளார்கள்.!

ஒருபோரின் போது, ஒரு பெண்மணி இறந்துக் கிடக்கக் கண்டார்கள். இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் உடனேயே அங்கிருந்த முஸ்லிம் படைகளை நோக்கி, "போர்களின் போது பெண்ணைக் கொலை செய்யாதீர்கள் என நான் தடை செய்யவில்லையா? அந்தப் பெண்மணி உங்களோடு போர் செய்ய வில்லையே!" எனக் கடிந்தார்கள்.

இஸ்லாமியப் படைகளை வழிநடத்திச் சென்ற பெருமானார் (ஸல்) அவர்களின் அழகிய எச்சரிக்கையன்றோ இது!

மக்கா வெற்றி கொள்ளப்பட்டது. வரலாற்றில் ஈடிணையற்று விளங்கிய பத்தாயிரம் மறவர்களோடு அந்த மக்கா நகருக்குள் நுழைந்தார்கள் இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள்.

அங்கே வரலாறு இன்றுவரை கண்டிராத நிகழ்வு ஒன்று!

பதினோரு ஆண்டு காலம் பெருமானார் (ஸல்) அவர்களுக்குத் தான்கொணா தொல்லைகள் தந்த மக்கள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள் தலை தாழ்ந்து.

எல்லா எல்லைகளையும் கடந்து தங்கள் ஆணவத்தைக் காட்டி, அநியாயங்களை அவிழ்த்துவிட்ட குறைஷியர்கள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள் தலை தாழ்ந்து.

அடுத்து தங்களுக்கு என்ன நேருமோ என்ற எண்ணத்தால் அலைக்கழிந்து அடங்கி ஒடுங்கி நின்ற அந்த மக்கள் முன் மக்கத்து வெற்றி வீரராய் மனிதகுல மாணிக்கமாய் நின்றார்கள். அகிலத்தாருக்கோர் அருட்கொடையாய் அனுப்பப்பட்ட அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள்!

நேர்மையின் சிகரமாய் நின்று கொண்டிருந்த அந்த மாண்பாளரின் கண்களை நேருக்கு நேர் சந்திக்கவியலாமல், நிலத்தில் விழிகளைப் பதித்துக் கொண்டிருந்த அந்த மக்களை நோக்கி ஒரு கேள்வியை வைத்தார்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் :

"ஏ குறைஷிகுல மக்களே! நான் இப்பொழுது என்ன செய்யப் போகின்றேன் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?"

"நிச்சயமாக நாங்கள் உங்களிடமிருந்து மிகவும் நல்லதொரு தீர்ப்பையே எதிர்பார்க்கின்றோம். நீங்கள் கண்ணியம் மிக்கவர்கள். கண்ணியமிக்க ஒருவரின் சகோதரர்" எனப் பதில் தந்தார்கள். அந்த மக்கள் இதைச் செவிமடுத்த பெருமானார் (ஸல்) அவர்கள், "இன்று யார் மீதும் எந்த எதிர் நடவடிக்கையும் இல்லாதிருக்கட்டும். அல்லாஹ் உங்களை மன்னிக்கட்டும். கருணை காட்டுபவர்கள் எல்லோரையும் விட அல்லாஹ்வே அதிமாகக் கருணை காட்டுவான். குற்றம் சாட்டப்படுவதிலிருந்தும், தண்டனைகள் வாங்குவதிலிருந்தும் விடுபட்டவர்களாக நீங்கள் இங்கிருந்து போலீர்களாக! என்று கூறினார்கள்.

கடின சித்தம், நயவஞ்சம் ஆகியவற்றை மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, அலை பாயும் பகையை அள்ளிக்கொட்டிப் போர்கள், கொடுவாள்கள் ஆகியவற்றைக் கொண்டு மட்டுமே அன்று வரை தன்னோடு பேசிக்கொண்டிருந்த அந்த மக்களை பெருமானார் (ஸல்) அவர்கள் நடத்திய விதம், இஸ்லாம் மேற்கொள்ளும் போர்கள் எதற்கு என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

இந்தப் பெருமானார் (ஸல்) அவர்கள் வார்த்தெடுத்த சமுதாயத்தின் முத்துக்களாய் மிளிர்ந்தவர்கள் நேர்வழீ பெற்ற கலீஃபாக்கள். அந்தக் கலீஃபாக்களின் ஆட்சியின் போதும் இந்த அற்புதங்களே இடம் பெற்றன.

இதைத்தான் இறைவன் இப்படிச் சுட்டி காட்டுகின்றான் :

**"நபியே! நிச்சயமாக நாம் உம்மை (மனிதர்களுக்கு)ச் சாட்சியாகவும், நன்மாராயங் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பி வைத்திருக்கின்றோம். அன்றி அல்லாஹ்வின் அனுமதியின்படி (மக்களை) அவன்பால் அழைப்பவராகவும், ஒளிவீசும் விளக்காகவும் (இருக்கின்றீர்)" (அல்குர்ஆன் - 33:45.46)**

## முஸ்லிம்கள் ஆட்சி செய்து கொண்டிருந்த நாள்களில் லெபனானைச் சார்ந்த மக்கள் கிளர்ச்சியொன்றில் ஈடுபட்டார்கள்.

அதுபோது லெபனானின் கவர்னாக அலீ அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி) அவர்கள் இருந்தார்கள். கவர்னர் அவர்கள் அந்தக் கிளர்ச்சியாளர்களைப் போரில் வெற்றி கொண்டார்கள். இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் முஸ்லிம்களல்ல. இவர்கள் மன்னிக்கப்பட்டால் மீண்டும் அணி சேர்ந்து கொண்டு கிளர்ச்சிகளைச் செய்யும் வாய்ப்புகள் இருந்தன.

இதனால் இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்ட அத்தனை பேரையும், அந்தக் குலத்தையும், கோத்திரத்தையும் சார்ந்த அத்தனை மக்களையும் நாட்டை விட்டு வெளியேற்றிவிடுவது என முடிவு செய்தார்கள் ஆட்சியாளர்கள் அவர்கள்.

ஆட்சியாளர் இந்த முடிவை செயல்படுத்தலாம் என்றிருந்த காலை, அவருக்கோர் "திருமுகம்" இஸ்லாமிய அறிஞர் ஒருவரிடமிருந்து வந்தது.

அதில் அந்த இஸ்லாமிய அறிஞர் இப்படிக் குறிப்பிட்டிருந்தார் :

"லெபனான் மலைக்குன்றைச் சார்ந்த முஸ்லிமல்லாத சிலரை நீங்கள் நாட்டை விட்டு வெளியேற்றிட முடிவு செய்திருப்பதாக அறிந்தேன். அவ்வாறு நங்கள் வெளியேற்றிட முடிவு செய்திருப்பவர்களில் பலர் தீங்கொன்றும் செய்யாதவர்கள். அவர்கள் கிளர்ச்சியில் கலந்து கொள்ளவும் இல்லை. கிளர்ச்சியாளர்களுக்கு உதவி செய்யவும் இல்லை. இவ்வாறிருக்க, நீங்கள் எந்த சட்டத்தின், (ஷரீஅத்தின் எந்த வழிகாட்டுதலின்கீழ்) அவர்களை வெளியேற்றுகின்றீர்கள் என்பதை எனக்குத் தெரிவியுங்கள்.

ஒரு குறிப்பிட்ட தனி நபர் அல்லது ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினர் செய்த தவறுக்காக அதில் ஈடுபடாதவர்களையும் சேர்த்து வெளியேற்ற ஷரீஅத்தில் இடமில்லை. நீங்கள் அவர்களை அவ்வாறு வெளியேற்றும்போது அவர்களின் வீடுகளை விட்டும், நிலபுலன்களை விட்டும் வெளியேற்றுகின்றீர்கள் என்பதை நினைவு கூருங்கள்."

கடிதத்தின் முடிவில் பின்வரும் இறைவசனம் இடம்பெற்றது :

**"எவன் நேரான வழியில் செல்கின்றானோ அவன், தன்னுடைய நன்மைக்காகவே நேரான வழியில் செல்கின்றான். எவன் தவறான வழியில் செல்கின்றானோ அவன், தனக்கே தீங்கிழைத் துக் கொள்கிறான். ஒருவருடைய பாவச் சுமையை மற்றொருவன் சுமக்க மாட்டான்." (அல்குர்ஆன் - 17:15)**

*வேறு வழியில்லை ஆட்சியாளருக்கு. அவர் தன் முடிவைக் கைவிட்டார்.*

*வேறெந்த நாகரிகத்திலும் இதன்மிகு முன்மாதிரி உண்டோ!*

*'இரண்டாவது உமர்' (அல்லாஹ் அவர்கள் மேல் அருளைப் பொழிவானாக!) என இஸ்லாமிய வரலாற்றில் அழைக்கப்படுபவர் உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கலீஃபா உமர்பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் அப்போதுதான் இஸ்லாமியக் குடியரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார்கள்.*

*அவர்கள் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளின் எல்லையில் வீற்றிருந்தது. 'சமர்கண்ட்' பகுதி! அந்தப் பகுதியின் எல்லையில் குதைபா என்ற இஸ்லாமியப் படைத் தளபதி தன் படைகளை நிறுத்தி வைத்திருந்தார்கள். படையின் ஒரு பகுதியினர் சமர்கண்ட் பகுதியில் மக்களிடையே விரவி நின்றார்கள். அந்நிலையில் சமர்கண்ட் பகுதி மக்களுக்கும் இஸ்லாமிய அரசுக்கு மிடையே ஒப்பந்தமிருந்தது. ஒப்பந்த காலம் முடியும் தறுவாயில் சமர்கண்ட் பகுதி மக்கள் முஸ்லிம்களைத் தாக்கிடும் வாய்ப்புகளும், அதற்கான திட்டங்களுமிருந்தன. இதனாலேயே தளபதி குதைபா அவர்கள் அவர்களிடையே படைகளை நிறுத்தியிருந்தார்கள்.*

*சமர்கண்ட் பகுதி மக்கள், இஸ்லாமியக் குடியரசுத் தலைவர் உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களை வந்து சந்தித்தார்கள். "இஸ்லாமியக் குடியரசுத் தலைவரின் கீழ்வரும் தளபதி அவர்கள் படைகளை எங்களிடையே நிறுத்தியிருக்கின்றார்கள். இதை நாங்கள் விரும்பவில்லை" எனக் குறிப்பிட்டார்கள்.*

*கலீஃபா உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் ஆவன செய்வதாகச் சொல்லி அனுப்பினார்கள்.*

*தளபதி குதைபா செய்தது தவறா, சரியா என்பதைக் கணிக்க நீதிபதி ஒருவரை நியமித் தார்கள். அவரது பெயர் ஜாமிஃ பின் ஹாதித்அல் பாஜி (ரஹ்), நீதி விசாரணை நடைபெற்றது. நீதிபதி அவர்கள் இப்படித் தீர்ப்பு வழங்கி னார்கள்.*

*"முஸ்லிம் படைகள் சமர்கண்ட் பகுதியி லிருந்து வெளியேற வேண்டும். படைகளை சமர்கண்ட் பகுதிக்குள் செலுத்த விரும்பினால் அதற்கான முன் அறிவிப்பைச் செய்ய வேண்டும். சமர்கண்ட் பகுதி மக்களோடு இஸ்லாமிய அரசு பல ஒப்பந்தங்களைச் செய்திருப்பதால், அந்த ஒப்பந்தங்கள் முடியும் வரை அல்லது அவர்கள் முறிக்கும் வரை காத்திருக்க வேண்டும். எந்த முன்னறிவிப்புமில்லாமல் அவர்கள் மீது போர்த் தொடுக்க முனைவது ஷரீஅத்தில் வழிகாட்டுதல் களுக்கு அப்பாற்பட்டது."*

*சப்தமின்றி தன் படைகளைப் பின்வலித்துக் கொண்டார்கள் குதைபா அவர்கள்.*

*இதைக் கண்ட சர்மண்ட் பகுதி மக்கள் தங்கள் முடிவகளை மாற்றிக் கொண்டார்கள், இப்படி :*

*'இத்துணை நாகரிகத்தோடும், நளினத் தோடும் நடந்துகொள்ளும் இஸ்லாமியர்களோடு நாம் போர் செய்ய வேண்டியதில்லை. அவர்களின் பாதுகாப்பின்கீழ் வந்திடுவது என முடிவு செய்தார்கள். மீண்டும் கஃலீபா அவர்களைச் சந்தித்து தங்கள் முடிவுகளைச் சொன்னார்கள்.'*

## வரலாற்றில் வனப்பானதோர் எடுத்துக்காட்டு

இஸ்லாமியப் படைகள் வெற்றிகளைக் குன்றெனக் குவித்துக் கொண்டிருக்கும் நாள்கள். டெமாஸ்கஸ், ஹம்ஸ், சிரியா போன்ற நாடுகள் இஸ்லாமிய வெண்கொற்றத்தின்கீழ் வந்தன.

வெற்றி கொள்ளப்பட்ட மக்களோடு செய்து கொண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில், அந்த மக்களைப் பாதுகாக்கும் (ஜிஸ்யா எனும்) பாதுகாப்பு வரி அவர்களிடமிருந்து வசூலிக்கப் பட்டது. ஆனால் பின்னர் முஸ்லிம்களுக்கோர் செய்தி வந்து கிடைத்தது. அந்தச் செய்தி, 'ஹெராக்கிளிட்டஸ் என்பவன் மிகப்பெரிய தொரு படையைத் திரட்டி வைத்திருக்கின்றான்.



அந்தப் படைகளை ஒருமுகப்படுத்தி முஸ்லிம்கள் மேல் பாய்ந்திட இருக்கின்றான்' என்பதே!

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட முஸ்லிம் தளபதிகள் தங்கள் படைகளை ஒன்று திரட்டி ஒருமுகப்படுத்தி ஹெராக்கிளிட்டஸின் படை களைச் சந்திப்பது என முடிவு செய்தார்கள்.

இந்த முடிவின் அடிப்படையில் அவர்கள் தாங்கள் வெற்றி கொண்டு கையகப்படுத்தியிருந்த டெமாஸ்கஸ் பகுதியையும், ஹம்ஸ் பதியையும் விட்டுவெளியேறி தங்கள் படைகளுடன் சென்று ஹெராக்கிளிட்டஸை சந்திக்கத் தயாரானார்கள், கிளம்பினார்கள்.

அப்போது ஹாலித் (ரழி) அவர்கள் ஹம்ஸ் பகுதியிலும் ஏனைய தளபதிகள் ஏனைய பகுதி களிலும் இப்படிப் பிரகடனப் படுத்தினார்கள்:

"நாங்கள் உங்களிடமிருந்து உங்கள் உயிர் களுக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதாக உங்களிடம் பாதுகாப்பு வரியை (ஜிஸ்யா) வசூலித்தோம். அதேபோல் நீங்கள் தந்த வரியில் வெளியிலிருந்து வரும் தாக்குதல் களிலிருந்தும் உங்களைப் பாதுகாப்பதாக இருந்தோம். நாங்கள் இப்போது ஒரு பெரும் படையைச் சந்திக்கும் முகமாக உங்களிடமிருந்து விடை பெறுகின்றோம். இதனால் உங்களை நாங்கள் இனி பாதுகாத்திட முடியாது. ஆகவே நாங்கள் வசூலித்த பாதுகாப்பு வரியை திரும்பத் தருகின்றோம்."


இந்த அறிவிப்பைச் செவிமடுத்த மக்கள், ஒன்று திரண்டு இப்படிக் கூறினார்கள் :

"இறைவன் உங்களோடு இருக்கட்டும்! வெற்றி பெற்றவர்களாய் நீங்கள் மீண்டும் இங்கே வர வேண்டும். உங்களது ஆட்சி, அதில் பிறந்த நீதியின் மாட்சி இவற்றில் நாங்கள் இதுவரை திளைத்தோம். உங்களுக்கு முன் எங்களை ஆட்சி செய்து வந்தவர்களோடு நாங்கள் மதத்தால் பிணைந்தவர்கள். ஆனால், நாங்கள் அவர்களிடம் அனுபவித்த கொடுங் கோன்மையைப் போல் எங்கேயும் எவரிடமும் அனுபவித்ததில்லை இறைவனின் பெயரால் கூறுகின்றோம். நீங்கள் இருக்குமிடத்தில் அவர்கள் இருந்திருந்தால் (அதாவது எங்களிடம் இதேபோல் வரிகளை வசூலித்த ஆட்சியாளர்களாக ரோமர்கள் இருந் திருந்தால்) எங்களிடம் வசூலித்த எதையும் அவர்கள் திரும்பத் தந்திருக்க மாட்டார்கள். மாறாக அவர்கள் எங்களிடம் இருப்பதை யெல்லாம் பிடுங்கிவிட்டுச் சென்றிருப்பார்கள். எங்களுடைய உடமைகள் எதையும் விட்டுச் சென்றிருக்க மாட்டார்கள்." எனக் கூறி பாசத்தால் பிணைந்து நின்றார்கள். கண்ணீர் அந்த மக்களின் கண்களில்!

இன்றைய நாள்களிலும் அன்றைய நாள்களிலும் எத்தனையோ மக்கள் தாங்கள் வெற்றி கொண்ட மனிதர்களை எப்படி நடத்தினார்கள் என்பதைப் படித்திருக்கின்றோம்.

அல்லாஹ்வை நம்பி நின்றவர்கள் மேற்கொண்ட போர்கள், அவற்றில் அவர்கள் கடைப்பிடித்த இங்கிதங்கள், அவர்கள் வெற்றி கொண்ட மக்கள், அந்த மக்களிடம் அவர்கள் நடந்துகொண்ட நாகரிகம் இவற்றிற்கு இணை யானவற்றை நாம் வரலாற்றில் எங்கேயும் கண்டிட இயலாது.

**- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் தொடரும்**



# இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ரயிஸ் முஹம்மத்-வுடன் ஒரு நேர்காணல்

**நமது நிருபர் :**

இஸ்லாம் மதத்தை தேர்ந்தெடுத்திற்கான காரணம் என்ன?

**ரயிஸ் முஹம்மது:** இஸ்லாம் மார்க்கத்தை ஏன் தேர்ந்தெடுக்கின்றேன் என்று இருப்பதை விடவும் ஏன் இந்து மதத்தை விட்டு வெளி யேறினீர்கள் என்று கேட்பது சரியாக இருக்கும்.

இந்து மதத்தில் இருக்கிற தீண்டாமை, சாதிக் கொடுமை போன்றவைகளை தாண்டி, மேற்பார்வையில் நாம பார்க்கிறது என்னென்ன பல்லனையும், பறையனையும், சக்கிலியனையும் ஒருத்தன் அடிச்சாதான் சாதி அப்படி நினைச் சுக்கிறோம். அதுதான் இந்துத்துவ பாசிசம்னு சொல்வாங்க. நான் என்ன சொல்றனா சாதி என்பதே இந்துததுவ பாசிசம். என்னுடைய உடல் அதனுடைய அங்கங்களை பிரித்துப் பார்ப்பதே அதான் சாதியம். அதான் சாதியத்தி னுடைய அபாயம். அபாயம்னா என்னென்னா எங்க அப்பா, அம்மாவையே, செத்த பின்னாடி தீட்டுனு சொல்றது, எங்க அப்பா அம்மாவையே எரிக்கனுங்கிறது. அப்படி எரிக்கும் போது குடிச் சுக்கிட்டு, கும்மாலம் அடிச்சுக்கிட்டு அதையே ஏத்துக்கிறது.

ஒரு சாமிங்கும் போது ஒரு முனீஸ்வரன் கோயில்னு வச்சிக்குங்க.அங்க வந்து ஆடு வெட்டுங்க, கெடா வெட்டுங்கடா. ஆனா கோயில் வந்து தண்ணியடிச்சுட்டு வந்து சண்டை போடுவாங்க.

ஒவ்வொரு கோயில் திருவிழாக்களிலும் சாமி எதுக்கு கும்பிடுரோம்னா நம்முடைய வாழ்க்கையோட தரம் நல்லாயிருக்கனும், அமைதி நிலவுனுங்கிறது நாளதான்.

ஒவ்வொரு சாமி பண்டிகையிலும் சரி, ஏன் விநாயகர் சிலையை தலித்துகள் வைத்தார்கள் என்பதற்காக விநாயகர் சிலையைக் கூட உடைத்தார்கள். அப்படி இருக்க இதுகூட ஒரு பிரச்சனை. இது இல்லாமல் இன்னொன்றும்,

எங்க அப்பா, அம்மா என்ன சொல்றாங்கன்னா, ஒரு கவுண்டரை பார்த்த உடனே நீ அவங்கள சாமி கும்பிடச் சொல்றாரு. இதுல யாரு சாமினு நமக்கே கேள்வி எழுது.

தீண்டாமை என்பது ஒரு காலை இன் னொருவர் கால் மீது பட்டாலே தீட்டு என்கிற மனோபக்குவ சாதியதான் வேரறுக்கப்பட வேண்டியது.

முடி வெட்டுனவன் அவன் கைப்பட்டது தீட்டுனு சொல்றது. பக்கத்தில உக்கார மாட்டேங்கிறது.

பஸ்ல போக முடியாத கிராமங்கள் இன்னும் இருக்கு. சைக்கிள் ஓட்ட முடியாத அவல நிலையும் இருக்கு.

திருமாவளவன் தொகுதியிலேயே பேரனி என்ற பகுதிகளில் பறையர்கள் செருப்பு போடாத நிலை இருக்கு. அப்ப திருமாவளவனையே பறையர் சாதியாத்தான் பாக்குறாங்கன்னு அவரே சொல்லிட்டு இருக்காரு. ஆனா அவரு என்ன சொல்றாரு பறையனா பார்க்காதிங்க தமிழ் இனத்தவரா பாருங்கங்கிறார்.

இந்து மதத்தில மேல் ஜாதிக்காரனுக்கும் பிரச்சனை, கீழ் ஜாதிக்காரனுக்கும் பிரச்சனை. மேல் ஜாதிக்காரனுக்கு என்ன பிரச்சனைனா, அவன் ஆணவத்தில் இருக்கிறதால தெரிய மாட்டிங்குது. அடக்குமுறையில் பாதிக்கப் படுகிறதுனால தலித்துகளுக்கு தெரியிது மேல் ஜாதிக்காரன் அவன் காலையே அவன் தீட்டுனு நினைக்கிறான். அவன் என்னைக்கு சுயமாக சிந்திக்கிறானோ அப்பதான் ஜாதிங்கிற பிரச்சனை வரும்னு நினைப்பான்.

நான் நீலகிரி மாவட்டத்தில் வாழுறேன். இங்கிருக்கிற தலித் இயக்கத்தைச் சேர்ந்தவனா இருந்தாலும் சரி, முற்போக்கு இயக்கத்தைச் சேர்ந்தவனா இருந்தாலும் சரி, கேட்டா, சாதி இல்லைகிறானுங்க.

அப்ப இந்த ஊருல சாதி எப்படி இருக்கணு. கேட்டா மேட்டுல இருக்கிறவன் மேல் சாதி, கீழே இருக்கிறவன் கீழ் சாதி.

மேடுங்கிறது என்னென்னா, அந்த மலைப் பிரதேசத்தில் நிலச்சரிவு ஆகாத பகுதிகள். மலையடிவாரங்களில் இருப்பவர்கள் கீழ் ஜாதிகள். கீழ் ஜாதி பகுதியில்தான் துப்புரவு பணியாளர், அதாவது அருந்ததியினர். எங்க சமூகம், நாங்க இருப்போம். துப்புரவு பணியாளருக்கு அரசாங்கம் கட்டின குடியிருப்புப் பகுதிகூட மலையரவாரங்களில் இருக்கு. மேல் ஜாதிக்காரன் இருக்கிற இடத்தில கூட கட்டில ஆனா கட்டினது. 1940-ல அப்ப கூட மேல கட்டல. துப்புரவாளர்களுக்கு கட்டின வீடுகூட ஒதுக்குப்புமாகத்தான் கட்டி வச்சுருக்காங்க.

அப்பும் மாரியம்மன் கோவில் தேர்த் திருவிழாவில அருளர்களுக்கு தேர் இல்ல..?, மற்றவர்களுக்கு இருக்கு.!

இப்படித்தான் என்னதான் படிச்சு மேலே வந்தாலும் கூட துப்புறவு சமூகத்தை வெளியே நின்னுதான் அட்னன்ஸ் எடுக்குறாங்க.

துப்புரவு பணியாளரும், ஒரு ஸ்டாப், போலீஸ்காரனும் ஒரு ஸ்டாப், போலீஸ்காரரை வெளியே வெச்சு எடுக்கறாங்க, அவன் உள்ள போய் உக்காறான். ஆனா, நம்மாளுங்க 7 மணிக்கு வரணும், 6.55-க்கே நம்ம தெருவுல உக்காரணும்.

எங்கயாவது போலீஸ்காரன் படிக்கட்ல உட்காரது, ரோட்ல உட்காரது நீங்க பார்த் துரீக்கீங்களா அவன் உள்ளதான் உக்காறான்.

நம்மாளுங்க பஞ்சாயத்து போடுல வேலை செய்ற ரோல் எடுக்கிருக்கு. நான் பார்த்ததில் இருந்து இப்படித்தான். கிட்டத்தட்ட 40 - 50 வருசமாக இப்படித்தான் ஒட்டுமொத்த தமிழ்நாட்டுலயும் இருக்குங்கிறேன்.

இருந்துட்டு போ, சட்டம் இருக்கானு கேட்டா, சட்டமெல்லாம் இல்லை. இது பரம்பரையா பின்பற்றப்பட்டு வருகிறது.

துப்புறவு தொழிலாளர்களை உள்ள கொண்டு போய் உட்கார வைக்க தமிழ்நாடு முழுவதும் ஒரு சட்டம் போடணுமாம்.

அம்பேத்கர் என்ன சொல்றாரு, சாதிய விட்டு வெளியே போணுங்கிறார். இந்து மதத்தில இருக்கக்கூடாது. திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டே இருக்குது.

இப்ப பாருங்க, மேட்டுப்பாளையத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவன் மலம் கழீச்சான்னு ஒரு வன்னியர் ஒருத்தன் அடிக்கிறான்.

கழிவறையை கட்டக்கூடாதுனு சொன்னது இந்து மதம். அப்ப கழிவறை இல்லைங்கிறதுனால தான் அவன் வெளியே போறான்.

அவனும் இந்து மதம், இவனும் இந்து மதம். இரண்டு பேரும் ஒரே சாமியக் கும்பிட்டான். இவன் அடிச்சுக் கொல்றளவுக்கு தீண்டாமை பாக்குறான அந்த மதத்தில. நா எதுக்கு இருக்கணும். எனக்கு சுய மரியாதை வேணும். சுய மரியாதைங்கிறதை விடவும், என்னை தாழ்த்திக்கிட்டு இருக்கிற மதத்தை நான் என் தூக்கிப் பிடிச்சுட்டு இருக்கனும்.

ஐயப்பன் கோவிலுக்கு நான் ஆறு வருசம் போயிருக்கேன். அப்பா 20 வருசமா போயிட்டு இருக்காரு. எங்கப்பா மாதிரி நிறைய பேர் துப்புரவு வேலை செய்யும்போது புதைக்குழி, மலக்குழில இருந்துருக்காங்க. எந்த இந்துக்களாவது கண்டனம் தெரிவிச் சுருக்கானுங்களா?, சாகடிச்சது எவன் சாகடிச்சா இந்துக்களதான் சாகடிச்சான். எவனும் கேட்கல.

இப்ப தீண்டாமை சுவர் கட்டிருக்காங்க. அவன் எதற்கு கட்டுன சுயமா கட்டுனானா இந்து மத கோட்பாட்டின் படி கட்டுன. இவன்

மட்டுந்தான் கட்டுனானா அவன பார்த்து பறையனுகளும் கட்டியிருக்கானுங்க. இப்ப அவனுகள ஒதுக்கி வச்சுருலாம்.

நீ கீழ் ஜாதிக்காரன கட்டுனா வெட்டுவேன்னு சொல்றது, எங்க சொல்றாங்க இந்து மதத்தில தான் சொல்றாங்க.

அன்னைக்கு சுவர் இடிந்து விழுந்தப்போ என்ன பன்னாங்க நியாயம், நீதி வேண்டும் போராடுனாங்க, ஆனா அவன் இந்து மத கோட்பாட்டின்படிதான் கட்டின. ஆனா, இன்னைக்கு அது விட்டுறாங்க.

மன்னிக்கனும் திருமாவளவனே இந்து மதத்தே வேரறுப்போம் சொன்ன அவரே நானும் இந்து, பறையன் சுத்த பறையன்னு சொல்றாரு. எங்கம்மா கோயில் கட்டி கும்புறாங்கக் கூறாரு. அப்படி இந்து இந்து மதத்தில தீண்டாமை ஒழிஞ்சிருச்சுனு சொல்றாரா? சமுத்துவம் இருக்குங்கிறாரா? தலைவரே இப்படி பன்னா, தொண்டர்கள் எல்லாம் என்ன பன்னுவாங்க?

ஆக இந்து மதத்தை விட்டு போறதுக்கு ஆயிரம் காரணம் இருக்கு. ஆனால் இஸ்லாம் மார்க்கத்திற்கு போரதுக்கு நட்சத்திரம் போல, லட்சக்கணக்கான காரணம் இருக்கு.

இந்து மதத்தில் சொன்ன ஒரு பிழைக்கூட இஸ்லாத்தில் இல்லை. இதுபோதுமே சிறந்த வழி இஸ்லாம் தான்ங்கிறது.

**நமது நிருபர் :** சாதி ஒழிப்புமாநாட்ல திருமாவளவன் இந்து மதத்தை விட்டு வெளி யேறினால்தான் சாதியவன்கொடுமைகள் தீரும் என்று திருமாவளவனே பேசிருக்காரு

**ரயிஸ் முஹம்மது :** எனது சான்றிதழிலேயே இந்துதான் இருக்கு. இதையும் பேசுறாருனா எப்படி!

அவர் பேசிய நிறைய தகவல் இருக்கு. இந்த சுவர் விஷயத்தில சிலைகள் சம்மந்தம்மா அசிங்கமா வந்துச்சுல அப்பக்கூட நான் கோயிலுக்கு தானம் பன்னிருக்கேன். எங்கம்மா பக்கா இந்து இன்னும் கும்பிடுவாங்க. நான் கும்பிடமாட்டேன். நா யாருனு கேட்ட இந்து பறையன் சமீபத்தில் சொன்னது.

இவர் புத்தகம் போட்டாரு, மீனாட்சிபுரம் மதமாற்றம் அந்த புத்தகத்தை பத்தி ஏன் பேச மாட்டேங்குறாரு.



**நமது நிருபர் :** நம்ம வைகறையில தொடர்ந்து எழுதிக்கிட்டு இருக்கோம்.

**ரயிஸ் முஹம்மது :** நீங்க எழுதுறீங்க அவர் ஏன் பேசமாட்டிங் குறாரு. PFI மாநாட்டில நான் தலித்துகளுக்கு சுய மரியாதை வேணும்னா இஸ்லாம்தான் இருக்குல.

P. ரஞ்சித் புத்த மதத்தில ஜாதி இருக்கு, இருக்கு. அதுக்காக போராட்ரா, தோழர்கள் இஸ்லாம் மதத்திற்கு போகும் போது அங்கேயே போறீங்க புத்த மதத்திற்கு வாங்கங்கிறார்.

தமிழ்நாட்டுல உள்ள ஒரு தலித்துக்கூட எங்கூட பேசனதில்லை. மீனாட்சிபுரமா ரஹ்மத் நகர் தான சொல்லனும், அப்படிப் பன்னவங்க ரயிஸ் முஹம்மத். அழிக்க ஒரு சுண்டு விரல் போதுமே.

இஸ்லாமியர்கள் எதுக்கு நிக்குராங்க, நான் இஸ்லாமியர் என்கிறது நூல இல்ல, இறைவன்

என்ன சொல்றான் ஒருவனுக்கு அநீதி இழைக்கும்போது தோலோடு தோல் கொடுத்து நிற்கணும்னு சொல்றான்.

எனக்கு உதவி செய்த தலித் இயக்கம், ஆதித் தமிழர் பேரவை ஐக்கையன் மட்டுமே. அப்ப தமிழ் புலிகள் தலைவர் நாகைத் திருவள்ளுவன் சிறையில் இருந்தார். இனவேனில் போன்றோர் ரொம்ப முக்கியம்.

சந்தையூர் தீண்டாமை சுவருக்கு இந்துமத கோவிலுக்கு பன்றிவால் போராடனது. திருமா வளவன் கட்சிக்காரனுங்க பயங்கர மூர்க்கமாக பண்ணாங்க. எனக்கு சாதி எங்கிருந்தாலும் எதிர்ப்பேன் திருமாவளவனானாலும், மற்றைய அருந்ததி சமூகத்தினரா இருந்தாலும் எதிர்ப்பேன்.

தலித் சமூகம் பேர் வைச்சுக்கிட்டு இருக் கிறவுங்க, சாதிய வேரறுப்போம் சொல்றவுனுங்க இந்து மதத்தை காப்போனு மட்டும் சொல்லல.

BJP காரன் அவ்வளவு கழுவி ஊத்துறான். நாங்களெல்லாம், அவங்க பேர் கேட்டுத்தான் வளந்தோம். தோழர்களுக்கு கோபம் வர வேணாம். இந்து மதத்தில இருக்கிறனாலதான்னு வெளியே வர வேண்டாம்.

நாங்க ஏன் இந்து மதத்தை தாங்கிப் புடிக்கனும், இன்னும் கோத்தகிரியில் இரண்டு சுடுகாடு இருக்கு. 1. இந்து சுடுகாடு. 2. கிருத்துவ சுடுகாடு. இந்த இரண்டு சுடுகாட்டுக்கும் புதைக்கிறது, குழி நோண்டுறது எல்லாமே தலித்துதான். ஆனா கப்ரஸ்தானில் இஸ்லாமி யர்களே பண்ணிக்கிறாங்க.

தலித்துகள் விடுதலை அடையாத சமூக மாகத்தான இருக்கு. ஏன் நான் கூட ஆய்வு செய்ததில் மதுரையில பல இடங்கள்ல திருமா வளவன் நுழைய முடியாது. ஏன் அவர் இந்து பறையங்கிறது நாளதான். அப்பேறப்பட்ட தலை வருக்காகவும் பேசுறேன். இஸ்லாம் சமூகத்தை எப்படி பாக்கனும்னா திரும்பிப் பாக்கனும். ஏனா? அவங்களுக்கு விடியல் தேவை. விடியலை இஸ்லாம் சமூகத்துலனாலதான் கொடுக்க முடியும்.


துப்புரவு தொழிலாளர்கள் இறந்தாங்கன்னா முன்னாடி வந்து நிக்கிறது (எ-கா) சொல்லும்னா மேட்டுப்பாளையத்தில் 17 பேர் இறப்புக்கு முன்னாடி வந்தது இஸ்லாமிய சொந்தங்கள்தான். ஆனா தலித் தலைவர்கள் தனக்கு சுயமரியாதை இருக்குனு நினைச்சுக்கிறாங்க. ஆனா, மேட்டுப் பாளையத்தில் காவல் ஆய்வாளர் உங்ககிட்ட நாங்க கெஞ்சனும்னு கேட்டாங்க. 17 பேர் இறந்தப்ப அந்த ஊர் கிராமங்கூட அழல. ஏன்? கோவைல ஒருத்தன அடிச்சா ஒட்டுமொத்த இஸ்லாமியர்களும் ஒன்னு கூடுறாங்க. ஒரு நாளைக்கு நாளு தலித் பெண்கள் கற்பழிப்பு செய்றாங்க, சென்னைல இது திருமாவுக்கும் தெரியும். எல்லாத்துக்கும் தெரியும். ஒரு நாளைக்கு எத்தனையோ தலித்துகள் கொல்லப் படுறாங்க, இது ஆவணப்படுத்தப்பட்டது. வன்கொடுமை நடக்கலைன்னு சொல்லல, இவங்க மேல எழுச்சி வராததுக்கு காரணம் என்ன சாதிதான் இவன பிரிச்சு வைச்சிருக்கு. உடலை அங்கங்கமாக உன் கால், செருப்பு, தலை, வாய், உடல் உறுப்புக்கள் எல்லாம் தீட்டு தீட்டுனு சொல்லி எல்லாத்தையும் பிரிச்சு வைச்சமாறி, சமூகத்தை பிரிச்சு வச்சிருக்கான், பலவிதமாக பிரிச்சு வச்சிருக்கான்.

இந்த பிரிவினையை விட்டு நாம எப்படி களையறுதுனு பார்த்தான இஸ்லாம் மார்க்கத்தின் மூலமாகத்தான் களைய முடியும்.

தலித் தலைவர்களுக்கும் சுய மரியாதை வேணும்னு நினைக்கிறேன். அதற்கு மதமாற்றம் தேவைதான். அம்பேத்கர் சொல்றாரு. நான் எனன் சொல்றனா அம்பேத்கர் ஜாதிய பார்த்த தவிடவும், பெரியார் ஜாதிய பார்த்தத தான் நான் ஏற்றுக்குவேன்.

**நமது நிருபர் :** ஆனால், பெரியார் கூறியிருப் பார். ஒருத்தன் 5 மணிக்கு இஸ்லாத்தை ஏற்றால், 5.05 மணிக்கு அவனை விட்டு தீண்டாமை போய்விடும் என்று சொல்லிருப்பார். அதைக் கூட நாங்க "வைகறை வெளிச்சம்" இதழ்ல போட்டுருக்கோம்.

**ரயிஸ் முஹம்மது :** இதுபற்றி எனக்குத் தெரியாது. கொளத்தூர் மணிக்கிட்ட போய் பேசுறேன். ஒருமுறை ருத்திரத் தாண்டவமாய் இருக்கங்கிறார். தலித் இயக்கங்களே என்ன தெரிஞ்சிக்கினும்னா, நீங்கள் நிறைய போராட்டம் பன்னிருக்கீங்க, அத ஆவணப் படுத்திருக்கீங்க, மேலவளவு, காரன்சூடு, சுண்டுர், ஆந்திராவில் அதிகமாக இருந்தது.




ஆந்திராவை சொல்றேன், ஏன் ரஹ்மத் நகரை ஆவணப்படுத்திறவில்லை, கிருத்துவ மதத்திற்கு மாறுன நிறைய ஆவணமிருக்கு, அவன் செத்து பிணத்திற்கு கொண்டு போவான அவன் கரிவறைக்கு கொண்டு போக மாட்டான், சக்கிலியனையும் போக விடமாட்டான். ஆனா ரஹ்மத் நகரில் இந்த மார்க்கத்தை ஏற்ற மக்களுடைய வரலாற்றை ஏன் மறைச்சீங்க.

**நமது நிருபர் :** ஆனா, "வைகறை வெளிச்சம்" சார்பாக ரஹ்மத் நகர்னு சொல்லி ஆவணப் படமாக வெளியிட்டிருக்கோம். மீனாட்சிபுரம் மதமாற்ற பின்னணி என்ன என்ற கருப்பாயி (எ) நூர்ஜஹான் நூலை (Times of India) ஒரு கள ஆய்வை நடத்தி முஸ்லிமான பெண்களுக்கு திருமணமே நடக்கிறதில்லனு ஒரு புத்தகம் போட்டாங்க, அந்தப் புத்தகம் அன்வர் பாலசிங்கம் என்ற பெயரில் போட்டாங்க.

எனக்கு அந்தப் புத்தகத்தை குடுங்க, மேட்டுப் பாளையம் வந்தினிங்கன்னா, இல்லாட்டி பஸ்ல போட்டுவிட்றேன், நம்ம ஒரு கள ஆய்வு செய்து இஸ்லாத்திற்குள் நுழைந்து அவங்க எவ்வளவு கண்ணியத்தை அடஞ்சிருக்காங்க, அவங்களே சொல்றங்க. இது நாங்க ஆறு மாசத்துக்கு முன்னாடி நாங்க குறும்படமாகவே எடுத்துறுக்கோம்.

இந்த மாதிரியான தலித் சமூகத்திற்கு உற்ற நண்பனாகவும், உறுதுணையாகவும் இருக்கிற நம்முடைய ஆசிரியர் "குலாம் முஹம்மத்"க்கு தான் காயிதே மில்லத் விரத விசிக கட்சியின் மூலம் வழங்கப்பட்டது.

நாம என்னைக்கு தலித் சமூகத்தோடு ஒன்றிணைந்த சமூகமாகத்தான் இருக்கோம். ஆனா தலித் சமூகம் அடி வாங்கிற சமூகம் இல்ல, அடி குடுக்குற சமூகமாத்தான் இருக்குனு நாம வரலாறு ரீதியில் நாம காமிச்சிருக்கோம்.

இராமநாதபுரத்தில் செல்லையா என கான்ஸ்டபிள் தேவர்களுக்கும், தலித்துகளுக்கும் நடக்கிற சண்டையில சிறைக்குப் போயி இஸ்லாத்தை ஏற்றாரு. அவர் பெயர் முஹம்மத் அலி ஜின்னா. இவரும் இராமநாதபுரம் மாவட்டத்தில் முக்கியமான நபர்தாம்.

இராமநாதபுரத்தில அதிகமான முஸ்லிம்கள் இருக்கிறதுக்கு காரணம் இவர்தான். ரஹ்மத் நகருக்கு காரணமும் இவர்தான். அந்த டாக்குமண்டும் இருக்கு, நீங்க Mulah's theary, you tube போய்க்கூட பார்க்கலாம்.

அதுக்கூட ஐக்கரியாங்கிறவர் இருக்கிறார். அவர், TM மணியண்ணன் கூட வேலை செய்தவர்.

இந்த மாதிரி நிறைய பேர் பல இன்னல்களைச் சந்திச்சிருக்காங்க. அதில தமிழ்நாட்டுல ஒரு நீதிபதி அவர் தலித்தா இருந்தது நாள கோபால கிருஷ்ணன் என்கிறவர் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு கடைசியில இஸ்லாத்தை ஏற்று அவருடைய பெயர் குலாம் முஹம்மத் என்று வைச்சு ஒரு புத்தகம் வெளியிட்டிருக்காரு.

நம்மிடம் உள்ள 80 புத்தகத்தில் 60% சதவீதம் புத்தகங்களே தலித் சமூகத்திற்கு இஸ்லாம்தான் தீருவு சொல்லிருப்போம்.

இப்ப நீங்களெல்லாம் ஜனநாயக ரீதியாக போராடுறீங்க, இதுக்கு முன்னாடி இருந்த ஆளுங்கெல்லாம் ஆயுதமேந்தி போராடக் கூடியவர்களாக இருந்தார்கள். அவங்களெல் லாம் தேர்ந்தெடுத்த மார்க்கம் இஸ்லாம்தான்.

அதனால நீங்களும் இஸ்லாத்தை நோக்கிப் பயணிங்கள். இறைவன் மாபெரும் வெற்றியைத் தருவான்.



# தமிழக அரசுப் பணிகளில் ஆர்.எஸ்.எஸ்

## சுப்புலட்சுமி ஜெகதீசன் எச்சரிக்கை!

திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் 2020 ஜூன் 14 ஆம் தேதி அக்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் காணொலிக் காட்சி மூலமாக நடந்தது.

இதில் பேசிய திமுகவின் துணைப் பொதுச் செயலாளர் சுப்புலட்சுமி ஜெகதீசன், "ஓபிசி இட ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருக்கிறது அதை எதிர்த்து நாம் குரல் கொடுக்க வேண்டும்" என்று கூறியபோது குறுக்கிட்ட ஸ்டாலின், "அதற்காகத்தான் உச்ச நீதிமன்றம் சென்றோம். அதன் பின் உச்ச நீதிமன்ற அறிவுரைப்படி இப்போது உயர்நீதிமன்றம் சென்றுள்ளோம்" என்று கூறினார்.


தொடர்ந்து பேசிய சுப்புலட்சுமி ஜெகதீசன், "சில வருடங்களாகவே தமிழக அரசுப் பணி நியமனங்களில் ஆர்.எஸ்.எஸ். சிந்தனையுள்ளவர்களை திட்டமிட்டு நுழைக்கும் போக்கு அதிகரித்துள்ளது. டி.என்.பிஎஸ்.சி., தமிழகத்தின் மத்திய அரசுப் பணிகளில் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் அதிக அளவு இடம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்கவில்லை என்றால் எல்லா அரசுப் பணிகளுமே ஆர்.எஸ்.எஸ். வசம் போய்விடும். அதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்" என்று கூறினார். அதை ஸ்டாலின் தன் குறிப்பேட்டில் குறித்துக் கொண்டார்.

தமிழக அரசுப் பணிகளில் வெளிமாநிலத்தவர் சேர்வது குறித்து பல கண்டனக் குரல்கள் எழுந்த நிலையில், திமுகவின் மாநில செயற்குழுக் கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் சுப்புலட்சுமி ஜெகதீசனின் இந்த கருத்தை அடிப்படையாக வைத்து விரைவில் திமுக போராட்டங்களை வகுக்கக் கூடுமென்கிறார்கள் திமுக நிர்வாகிகள் வட்டாரத்தில்.

- வேந்தன்



# பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்




## ஹேமந்த் கர்கரேயின் புலனாய்வுக்குப் பின்

'பிற்றை நாள்களில் நடந்த நிகழ்வுகள், 2003 ஆம் ஆண்டு முதல், 2008 ஆம் ஆண்டு வரை நடந்த குண்டு வெடிப்புகள் அனைத்தும், இந்த சதியின் வெளிப்பாடுகள் என்பதை உறுதி செய்தன.

மத்திய உளவுத்துறை (IB Intelligence Bureau) இந்தப் பிராமிணிட்டு, பயரங்கரவாதிகளுக்கு எல்லாவகையிலும் நடைமுறை உதவிகளை வழங்கிற்று.

இந்த மத்திய உளவுத்துறை இதுபோன்ற சதிகளை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்வதற் காகவே இருக்கின்றது. ஆனால், அது இது, அபிநவ் பாரத், ஆர்.எஸ்.எஸ். இவற்றின் கிளை அமைப்பு இவையெல்லாம் தீட்டிய சதித் திட்டங்களை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லிடவில்லை. முற்றாக மறைத்துவிட்டது.

மாறாக, மத்திய உளவுத்துறை, இந்தக் குண்டு வெடிப்புகள் நடந்து முடிந்தவுடன் முஸ்லிம் அமைப்புகளின் பெயர்களை உடனேயே ஊடகங்களுக்குத் தந்துவிடும். அந்த முஸ்லிம் அமைப்புகளின் பெயர்கள், ஜெய்சே முஹம்மத் - ஹாஜி, ஹரக்கத்துல் ஜிஹாத், யஹ்தர் இ-தொய்பா. சிபி - இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம் என்பனவாக அமையும். இப்படி இஸ்லாமிய அமைப்புகளின் பெயர்களைச் சொன்ன பின்பு, மாநிலங்களில் செயல்படும், தீவிரவாத தடுப்பு சிறப்புப்படை யின் வழி சில அப்பாவி முஸ்லிம்களைக் கைது



செய்து விடுவார்கள். இந்த மாநில தீவிரவாத தடுப்பு சிறப்புப் படைகள், மத்திய உளவுத் துறையின் எடுபிடிகளே அல்லாமல் வேறில்லை.

ஊடகங்களிலிருக்கும் இந்த பிராமணிஸ்ட்டு விஷமிகள், காவல்துறை தரும் பொய்ச் செய்தி களுக்கு மிகப்பெரிய விளம்பரங்களைத் தரும்.

சில மாதங்களுக்குப் பின்னால், ஒரு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும். இந்தக் குற்றப் பத்திரிகை, அந்த முஸ்லிம்களைச் சித்திரவதைச் செய்து பெறப்பட்ட வாக்கு மூலங்களின் அடிப்படையில் இருக்கும். அதேபோல் போலியாக உருவாக்கப்பட்ட பஞ் சநாமாக்களின் வழியுமிருக்கும்.

சில மாதங்கள் கழித்து, இன்னொரு குண்டு வெடிப்பு நடக்கும். இதே முறைமைப் பின்பற்றப்படும். இப்படி தொடர் குண்டு வெடிப்புகளின் வழி ஓர் சூழலை உருவாக்கி னார்கள். அதன்வழி எல்லாக் குண்டு வெடிப்பு களையும், முஸ்லிம்களே செய்கின்றார்கள் என்று மக்களை நம்ப வைத்துவிட்டார்கள். எந்த அளவுக்கு என்றால், முஸ்லிம்களில் சிலரே நம்மவர்களில் சிலர்தான். இஸ்லாத்தைப் புரிந்து கொண்டு, இப்படிக் குண்டு வெடிப்புகளை நடத்துகின்றார்கள் என எடுத்துக்கொண்டார்கள். இல்லை நம்பினார்கள்.

காலப்போக்கில் சில முஸ்லிம் அமைப்புகள் இஸ்லாத்தின் இதுபோன்ற வன்முறைகளுக்கு வழி இல்லை. சில வழிகெட்டுப்போன முஸ்லிம்கள்தாம் இதைச் செய்கின்றார்கள் எனப் பேசிடத் தொடங்கினார்கள். அறிக்கை களை அடிக்கடி விட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த அறிவிப்புகளால் இந்தக் குண்டு வெடிப்பு களை நடத்திய மத்திய உளவுத்துறை, ஆர்.எஸ்.எஸ்., அபிநவ் பாரத் இவற்றிலுள்ள பிராமிணிஸ்ட்டுகள் மிகவும் மகிழ்ச்சியடைந் தார்கள். தங்கள் திட்டங்களின் வெற்றி குறித்து 'சபாஷ்' போட்டுக் கொண்டார்கள். அவர்களு டைய இறுதி இலக்கு, குழப்பங்களையும் கொந்தளிப்புகளையும் உருவாக்குவதாகவும். அவற்றை மையமாகக் கொண்டு இருக்கின்ற ஜனநாயக அமைப்பை சீர் குலைப்பதாகும். அதன் பின்னர் அவர்கள் நினைக்கும் ஆரியவர்த் இந்து ராஷ்ட்ராவை நிலைநாட்டுவதாகும். இன்னும் சில குண்டு வெடிப்புகள் நடந்திருக்கு மேயானால், அவர்களின் இலக்கு எப்போதோ கைக்கூடி இருக்கும். ஆனால், அது நடக்க வில்லை.

ஹேமர்ந்த் கர்கரே (மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புக் காவல் சிறப்புப் படையின் தலைவர்) வந்தார். இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகத்தைக் கண்டெடுத்து உலகுக்கு அறிவித்தார்.

ஜூன் *2008* -ஆம் ஆண்டு அவர் ஹேமந்த் கர்கரே மராட்டிய மாநிலத்தின் தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவராகப் பொறுப்பேற்றார். செப்டம்பர் திங்கள் *2008* ஆம் ஆண்டு மாலேகான் குண்டு வெடிப்பு நடந்தது.

இதற்கு முன்னால் நடந்த குண்டு வெடிப்பு களில் அவை நடந்து முடிந்தவுடனேயே மத்திய உளவுத்துறை (IB) சில முஸ்லிம் அமைப்புகளின் பெயரையே சொல்லின. அதே பாணியில் இப்போதும் (IB) மத்திய உளவுத்துறை சில முஸ்லிம் அமைப்புகளின் பெயர்களையே சொன்னது. ஆனால், ஹேமர்ந்த கர்கரே அவற்றைக் கண்டுகொள்ளவில்லை. மத்திய உளவுத்துறை சொல்வதைக் கேட்க வேண்டும் அவர்கள் ஏதேனும் ஆதாரத்தைத் தந்திட வேண்டும் என வலியுறுத்தினார்.

ஹேமர்ந்த் கர்கரே அந்த மாலேகான் குண்டு வெடிப்பை அவருடைய பாணியில் நேர்மையாக புலனாய்வுக்கு உட்படுத்தினார். அதன்வழி நாடு முழுவதும் இந்தியாவுக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பும், அபிநவ் பாரத் என்ற அமைப்பும் பின்னியிருந்த சதிகளைக் கண்டுபிடித்தார்கள்.

*2008* மாலேகான் குண்டு வெடிப்புனால் அபிநவ் பாரத் என்ற அமைப்பு முக்கிய பங்காற்றியது. உடன், ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பும், இன்னும் உள்ள இந்துத்துவ அமைப்புகளும் ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக் கப்பட்டது. அவை மாலேகான் குண்டு வெடிப்பில் மட்டுமல்ல, அதற்கு முன்னால் நடந்த இன்னும் பல குண்டு வெடிப்புகளிலும் இந்த இந்துத்துவ அமைப்புகள் ஈடுபட்டிருந்தது தெரியவந்தது. அவை, பின்வரும் ஆதாரங் களிலிருந்து பெறப்பட்டவை.

*1) இராணுவ இணை தளபதி பிரசாத் புரோகித் -இன் மீது நடத்தப்பட்ட மரபணு சோதனை.*

(Source : Times of India, Pune, 7-November, 2008. 11,November-2008. 12,November 2008. 15,November 2008. and 16,November 2008. Pune Mirror (Times of India Group). 15&19 November 2008 The Indian Express, Pune, 14&24 November 2008.; Marathi Dailies Sakal, Pune and Pudhari, Pune 15, November 2008.

The Transcripts of Video or Audio Recording of the Meetings of Abhinav Bharath.

*= அபிநவ் பாரத் என்ற அமைப்பின் ஒலிப் பேழைகள், ஒளிப் பேழைகள், இவற்றிலிருந்து பெறப்பட்ட எழுத்து வடிவங்கள்.*

*ஆதாரம்* = Volume : No :'111B' Enclosed with the charge sheet of Malegaon 2008. (ATS. Maharashtra C.R.No. 18/20085.

*இராணுவ இணை தளபதி = கலோனல் - பிரசாத் புரோகித், இதே வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் பேசிய தொலை பேசியின் பேச்சுக்கள். (ஆதாரம் - மேலே சொன்னவை)*

*முந்தைய குண்டு வெடிப்புகளில் உள்ள எல்லா முக்கிய தடயங்களும் வேண்டுமென்ற மறைக்கப்பட்டன. இவை பிராமணிஸ்ட்டு களைக் காப்பாற்றுவதற்காகவே மறைக்கப் பட்டன.*

*மேற்கொண்டு நடந்த விசாரணைகள் குண்டு வெடிப்புகளின் போக்கை மாற்றின.*

*மாலேகான் குண்டு வெடிப்புகளில் மட்டுந்தான், இந்துத்துவ வாதிகளின் கைவரிசை வெளிப்பட்டன என்றில்லை. மாறாக அதற்கு முன்னால் உள்ள பல குண்டு வெடிப்புகளும் இந்துத்துவ - பிராமிணிஸ்ட்டுகளின் வேலைதான் என்பதை ஊர்ஜிதப்படுத்தும், தடயங்கள் கிடைக்கவே செய்தன. ஆனால், அவையெல்லாம் வேண்டுமென்றே மறைக்கப்பட்டன.*

*ஆனால், ஹேமந்த் கர்கரே அவற்றை அம்பலப்படுத்தினார். அன்றிலிருந்து எல்லாமே மாறிப்போனது.*

**- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் தொடரும்**







# பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் என்ற பெயரில் மதவெறியர்கள்

## தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக் குழு தமிழ்நாடு முதல்வரிடம் புகார்

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் பகுதியில் செல்போன் கடை நடத்தி வந்த தந்தை மகன் என இரு வணிகர்கள் ஜெயராஜ், பென்னிக்ஸ் படுகொலை சம்பவத்தில் காவல் துறை அதிகாரிகளால் சிறுபான்மை மக்கள் மீது நடத்தப்பட்ட சித்ரவதைகள், மனித உரிமை மீறல்கள் மீது வழக்கு பதிந்து கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும் பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் என்ற பெயரில் மதவெறியர்கள் சாத்தான்குளத்தில் நடத்திய அட்டூழியங்கள் குறித்தும் தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக் குழு சார்பாக தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு புகார் மனு அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக் குழுவின் மாநிலத் தலைவர் எஸ்.நூர்முகமது, மாநிலப் பொதுச்செயலாளர் எம்.ராமகிருஷ்ணன் ஆகியோர் அனுப்பியுள்ள அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் வணிகர்கள் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர் காவல் நிலையத்தில் காவலர்களால் கொடூரமாக தாக்கப்பட்டதனால் மரணமடைந்துள்ளனர். இந்த காவல் நிலைய படுகொலையை தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. சாத்தான்குளம் காவல் நிலையத்தில் இதுபோன்ற தாக்குதல்கள் சமீப காலத்தில் அதிகமாக நடந்து வருவதாக தெரிகிறது.

உயர் அதிகாரிகளுக்கும் இது சம்பந்தமான புகார்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.எனவே இந்த தாக்குதலுக்கு பின்னால் இருக்கக்கூடிய காரணங்களை உரியமுறை யில் கண்டறிய அரசு முன்வர வேண்டும் என வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

### பஞ்சாயத்து தலைவரையே அடித்து விரட்டிய போலீஸ்

ஏனென்றால் இந்த குறிப்பிட்ட சாத்தான் குளம் காவல் நிலையதுணை ஆய்வாளர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன், ஆய்வாளர் ஸ்ரீதர் ஆகியோர் இணைந்து ப்ரண்ட்ஸ் ஆஃப் போலீஸ் சிலரோடு சேர்ந்துகொண்டு ஒரு குறுகிய காலத்தில் 40க்கும் மேற்பட்டவர்களை இதுபோன்று கடுமையாகத் தாக்கியிருக் கின்றனர்.

இவ்வாறு தாக்கப்பட்டு இருப்பவர்கள்

குறிப்பாக மதவழி சிறுபான்மை மக்களாக இருக்கின்றனர்.கடந்த பிப்ரவரி மாதம் 21ஆம் தேதி ஜெபக்கூட்டம் நடத்திக் கொண்டிருந்த மதபோதகர் லாசர் பர்னபாஸ் உள்ளிட்ட பத்து கிறிஸ்தவர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இதேபோன்ற ஒரு தாக்குதலை அவர்கள் நடத்தி இருக்கிறார்கள்.



இந்த தகவல் தெரிந்து அவர்கள் ஊர் பஞ்சாயத்து தலைவர் காவல் நிலையத்திற்கு விசாரிப்பதற்கு வந்த போது காவல்துறையினர் அடித்து விரட்டியிருக்கிறார்கள்.ஒரு தேர்ந் தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவரிடமே காவல்துறை இவ்வாறு நடந்திருக்கிற அளவிற்கான தைரியத்தை இந்த காவல் நிலைய அதிகாரிகளுக்கு யார் வழங்கினார்கள் என்பது தெரியவில்லை. தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சி இதன்மூலம் கேள்விக்குறியாகி இருக்கிறது.

## மத போதகர் உட்பட 10 பேர் மீது சித்திரவதை - தாக்குதல்

வணிகர்கள் ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸை தாக்கியது போலவே இந்த அப்பாவி மத போதகர்களை தாக்கிவிரட்டி அடித்துள்ளனர். அன்று இரவு முழுவதும் வலி தாங்க முடியாமல் மறுநாள் காலையில்பாதிக்கப்பட்டவர்கள் அரசு மருத்துவமனையில் சேர்ந்து ஒரு வார காலம் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் 21ஆம் தேதி பகல் முழுவதும் காவல் நிலையத்தில் வைத்து தாக்கிவிட்டு மாலை நேரத்தில் இவர்களை மிரட்டி அனுப்பி வைத்திருக்கிறது.

அன்றைக்கு எந்த வழக்கும் பதிவு செய்யப் படவில்லை ஆனால் மறுநாள் காலையில் சிகிச்சைக்காக மருத்துவ மனையில் சேர்ந்ததற்கு பிறகு இவர்கள்மீது பொய்யான வழக்குகள் புனையப் பட்டுள்ளது. நீதிமன்றத்தில் பிணை ஜாமீன் பெற்று வந்திருக்கின்றனர். ஜாமீனில் வெளிவந்த பின்பு பாதிக்கப்பட்ட லாசர் பர்னபாஸ் நெல்லை சரக டிஐஜியிடம் புகார் மனு அளித்துள்ளார்.அதன் மீது அந்தப் பகுதி டிஎஸ்பி பாதிக்கப்பட்ட மத போதகர் லாசர் பர்னபாஸ் உள்ளிட்டவர்களை அழைத்து விசாரணை நடத்தி இருக்கிறார்.

நடந்தஉண்மைகளை அவர்கள் கூறுகையில்,

தாங்கள்அமைதியாக புளியங்குளம் பகுதியில் ஜெபக்கூட்டம் நடத்திக் கொண்டிருந்தபோது காவல்துறை உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் தங்களை காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி அழைத்து வந்ததாகவும் காவல்நிலைய எல்லை யிலேயே உதவி ஆய்வாளர் ரகுகணேஷ்முகத்தில் பலமாக தாக்கி காவல் நிலையத்திற்குள் வைத்து 10 பேர்கள் மீதும் கையாலும், கட்டையாலும் கடுமையாக தாக்கி குனிய வைத்து பின்புறத்தில் தாக்குதல் நடத்தி சித்ரவதை செய்ததையும், இது எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தது மட்டுமில்லாமல் காவல்நிலைய ஆய்வாளரும் வந்து தாக்கியதோடு, காவல்நிலை யத்தில் இருந்த பலரும் தங்களை தாக்கியதாகவும், அதனால் ஏற்பட்ட காயங்கள் அதற்கு எடுக்கப்பட்ட சிகிச்சைகள் பற்றிய விவரங்களை எல்லாம் விளக்கமாக டிஎஸ்பி இடம் தெரிவித்திருக் கிறார்கள். ஆனால் அந்த விசாரணை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பிப்ரவரி, மார்ச் மாதங்களில் இவர்கள் மீது இதுபோன்ற செயல்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அதற்கு பின்பு ஏற்பட்ட மரணங்களும் துயரங்களும் தவிர்க்கப் பட்டிருக்கும்.

### மதவாத சக்திகள் உறுதுணை

நடவடிக்கை எடுக்காத காரணத்தால் இதே அராஜக உதவி ஆய்வாளர்களால் ஜெயராஜ், அவருடைய மகன்பென்னிக்ஸ் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கடந்த சில மாதங் களில் மட்டும் இந்த காவல் நிலையத்தில் இந்த பொறுப்பு அதிகாரிகளால் 40-க்கும் மேற்பட்ட சிறுபான்மை மக்கள் இதே போன்று தாக்குதலுக்குள்ளாகி பாதிக்கப்பட்டிருக் கிறார்கள்.


இந்த காவல்நிலைய ஆய்வாளர், உதவி ஆய்வாளர்கள், காவல்துறையை சார்ந்தவர்கள் திட்டமிட்டு குறிப்பிட்ட சிறுபான்மை மக்களை இவ்வாறு தாக்கி வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு உறுதுணையாக ப்ரண்ட்ஸ் ஆஃப் போலீஸ் என்ற பெயரில் சில மதவாத சக்திகளும் இணைந்து கொண்டு இந்த செயலில் ஈடுபட்டிருப்பதாக உறுதியாக தெரிகிறது.

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட வேண்டிய காவல் நிலையத்தில் மத ரீதியான இதுபோன்ற பாகுபாடுகளும் தாக்குதல்களும் சட்ட வரம்புக்கு மீறிய செயலாகும். எனவே இந்த காவல் நிலையத்தில் பணியாற்றிய காவல்துறை அதிகாரிகள், காவலர்கள் மற்றும் ப்ரண்ட்ஸ் ஆஃப் போலீஸ் மீதும், உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்க தவறிய மாவட்ட காவல் அதிகாரிகள் மீதும் விசாரணையை உரிய முறையில் நடத்தி நீதியை நிலைநாட்ட வேண்டும் என தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக்குழு கேட்டுக்கொள்கிறது.

### கொலை வழக்கு பதிவு செய்க !

சாத்தான்குளத்தில் காவல்துறையினரால் படுகொலை செய்யப்பட்ட ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் படுகொலைக்கு காரணமான அனைத்து காவல்துறையினர் மீதும் கொலை வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்ய வேண்டும். எனவும், பாதிக்கப்பட்ட அனைவரு க்கும் நீதியும் நியாயம் கிடைக்கச் செய்ய விசாரணை கமிஷன் அமைத்து நீதியை நிலைநாட்ட வேண்டும். இக்கொடுமைகளுக்கு காரணமான காவல்துறையினர் மீது உரிய வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழக அரசு உரிய நிவாரணம் அளிக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளனர்

- Seithikkural POSTED ON JULY 2, 2020





# RK நகர், நேதாஜி நகரில் நடந்த உண்மை சம்பவம்

## அத்துமீறும் காவல்துறை

வருடம் வருடம் பள்ளிவாசல்களில் புனித மிகு ரமலான் மாதத்தில் ஒரு மாதம் நோம்பு கஞ்சி பொது மக்களுக்கு வழங்கப்படும்.

ஆனால் தற்போது கொரானா என்கிற தோற்று நோய் பரவலாக இருப்பதால். இந்த வருடம் பள்ளி வாசல்களில் நோம்பு கஞ்சி விநியோகம் செய்ய வேண்டாம். என்று அரசாங்கம் கேட்டு கொண்டதற்காக இந்த வருடம் பள்ளிவாசல்களில் நோம்பு கஞ்சி வழங்கப்படவில்லை.

மாறாக அவர் அவர்கள் வீட்டில் அவர்களுக்கு தேவையான நோம்பு கஞ்சி செய்ய துவங்கினார். யாருக்கும் எந்த இடையூம் இல்லாமல் செய்துவந்தனர்.

ஆனால் காவல்துறை NRC, NPR, CAA. போன்ற கருப்பு சட்டத்திற்கு எதிராக போராடிய அந்த நிகழ்வை காவல்துறை மனதில் வைத்துக்கொண்டு தொடர்ந்து வடசென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட RK நகரில் தனது குறுக்கு புத்தியைகாட்ட துவங்கினார்.

முஸ்லிம்கள் நோம்பு திறக்கும் சமயத்தில் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு உள்ளே நுழைந்து பிரச்சனை செய்ய ஆரம்பித்தனர். தொடர்ந்து நாமும் அவர்கள் இடத்தில் சொன்னோம் நாங்கள் சட்டத்தை மதிக்காமல் இல்லை நாங்கள் எங்கள் வீடுகளில் தான் எங்களுக்கு தேவையான பொருள்களை செய்து கொள்கிறோம்.

ஆனால் நீங்கள் தொடர்ந்து சட்டத்தை மதிக்காமல் மனதில் அதோ வைத்து கொண்டு செயல்படுகிறார்கள். அது ஆரோகியம் இல்லை நீங்கள் சட்டத்தின் அடிப்படையில் செயல்படுங்கள் என்று நாம் சொன்னோம். ஆனால் அவர்கள் அதை மதிக்கவில்லை. மாறாக வீட்டுக்குள் நுழைவது, பொருள்களை சேதப்படுத்துவது, கேவலமாக பேசுவது என்று தொடர்ந்து கொண்டே சென்றார்கள்.

ஒரு கட்டத்தில் அவர்கள் செயல் எல்லைமீறி சென்றது. இதை தட்டி கேட்டவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இன்னும் ஒருபடி மேலே பொய் பொதுமக்களை அடிக்க ஆரம்பித்தார்கள். பிறகு ஊர் பொது மக்கள் நிலைமை மோசமான சூழல் போவதை எண்ணி அனைவரும் வீதிக்கு வந்து நீதி கேட்டார்கள்.

பிறகு காவல்துறை எப்போதும் போல் ஒன்றுமே தெரியாதாதுபோல் திரும்பி சென்றது. பிறகு காவல் துறையால் தாக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த பெண்கள் இளைஞர்கள் சிகிச்சை பெற்று வந்தனர்.

காவல்துறை சூழ்ச்சி செய்து சமரசம் செய்து கொள்வோம் என்று சொல்லி ஊர் பெரியவர்களை வைத்து சமரசம் செய்தனர் பிறகு சமுதாய நலன் கருதி சமரசம் ஆனது.

சமரசம் செய்து கொண்டு அனைத்தும் முடிவுக்கு வந்தது. ஆனால் தற்போது 35 பேர் மீது வழக்கு பதிவு செய்து உள்ளதாக தகவல் வருகிறது. தொடர்ந்து என் சமூகம் துரோகத்தால் மட்டுமே வீழ்த்தப்படிகிறது.

இன்ஷா அல்லாஹ்... இறைவன் நாடினல் துரோகத்தை வீழ்த்துவோம்.

# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்)

## ஓர் அறிமுகம்



**வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.**

நபி (ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர் களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித் தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095-இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம் களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம் களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையும் கொலை செய்தனர்.

சிலுவைப் படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர் களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்பவர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு

நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப் பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங் கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது.

முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து "எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட் டோம். பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது" என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத் தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை.

இனி வரலாறு உள்ளே...

## எகிப்தை நோக்கி

கிபி 559 ஹிஜ்ரி 559 கிபி 1164 இந்த வருடத்தில் தான் முதன்முதலாக நூருத்தீனின் படைத் தளபதிகளில் ஒருவரான அசதுதீன் ஷேர்கு இப்னு ஷாதி என்பவர் எகிப்தை நோக்கி படையெடுத்தார். எகிப்தின் நிலங்களை கைப்பற்றி தன்னுடைய அரசாங்கத்தை விரிவுப்படுத்தினார்.

அசதுதீன் அவர்கள் ஷாதி குர்திஷ் என்பவரின் மூத்த மகன். இந்த படையெடுப்பிற்கு முன்னர் அவரும் அவருடைய சகோதரர் நஜிமுதீன் அய்யூப் அவர்களும் எகிப்திற்கு வந்தனர்.

அப்போது ஈராக்கை முஜாஹிதீன் பஹ்ருஸல் காதிம் என்பவர் ஆட்சி செய்து வந்தார். இரு சகோதரர்களின் நன்னடத்தைகளை கண்ட அந்த ஆட்சியாளர் நஜிமுதீன் அவர்களை திக்ரித் பகுதியின் ஆட்சியாளராக நியமித்தார். அதன் பின்னர் தன் நஜிமுதீன் தன் சகோதரருடன் திர்ரித்துக்கு சென்றார். ஹிஜ்ரி 526ம் ஆண்டு ஈராக்கில் நூருத்தீன் அவர்களின் தந்தை இமாதுதீன் ஸங்கி அவர்கள் தன் தோல்விக்கு பின்னர் திக்ரித் நகரத்தை நோக்கி சென்றார். அங்கே நஜ்முதீன் அவர்கள் அவருக்கு பல உதவிகளை செய்தார். இமாதுத்தீன் அவர்கள் அங்கிருந்து தப்பிச் செல்ல சில கப்பல்களை செய்து கொடுத்து உதவினார். இதன் காரணமாக அவர் அங்கிருந்து திக்ரிஸ் ஆற்றை கடந்து

தப்பிச் சென்றார். அவரைத் தொடர்ந்து அவருடைய படைவீரர்களும் பின்னர் அதே போல் தப்பிச் செல்ல உதவி செய்தார். இவ்வாறு தப்பிச் செல்வதற்கு நஜிமுதீன் மிகப் பெரிய அளவில் உதவியாக இருந்ததோடு மட்டுமல்லாமல் அந்த படை வீரர்களை பண்போடு நடத்தினார்.

இந்த நிகழ்வுகளுக்கு பின்னர் சில காலம் கழித்து அசதுதீன் அவர்கள் திக்ரித் நகரில் கிறித்தவர் ஒருவரை அவருடன் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக கொன்றுவிட்டார். இந்த விவரம் முஜாஹிதீன் அவர்களுக்கு தெரிய வந்து அவர் நஜ்முதீன் அவர்களையும் அவருடைய சகோதரரையும் நகரை விட்டு வெளியேறும்படி கட்டளையிட்டார். இதன் காரணமாக அவர்கள் இருவரும் நகரை விட்டு வெளியேற நேர்ந்தது. இது அசதுதீன் அவர்களின் மனதில் ஆறாத ரணமாக இருந்தது.

அய்யூப் அவர்கள் அம்பு எய்வதில் வல்லவர். பஹ்ருஸ் அவர்களின் பணியாட்கள் ஒருவரை அய்யூப் அம்பு எய்தி கொன்றுவிட்டார். இதன் பின்னர் தனக்கு ஏதும் பிரச்சினை வருமோ என்று கருதி அய்யூப் லெவான்தை விட்டு வெளியேறி ஸங்கி அவர்களுடன் இணைந்து கொண்டார் என்ற ஒரு செய்தியும் உண்டு.

அசதுதீன் கொன்ற கிறித்தவர் பஹ்ருஸ் அவர்களுக்கு மிகவும் வேண்டப்பட்டவர். எனவே, அசதுதீன் மொசூலை விட்டு தப்பி ஓடினார். அவரை பின் தொடர்ந்து அய்யூப் அவர்களும் சென்றுவிட்டார் என்று மற்றொரு செய்தியும் உண்டு.

ஆக மொத்தத்தில் அய்யூப் அவர்களும் அசதுதீன் அவர்களும் திக்ரித் நகரை விட்டு வெளியேற்றப்பட்டதால் ஸங்கியிடம் சென்று இணைந்து கொண்டனர். இமாதுதீன் ஸங்கி அவர்கள் அந்த இருவரையும் பண்புடன் நடத்தினார். நன்கு கவனித்துக் கொண்டார். இமாதுத்தீனுக்குப் பிறகு நூருத்தீன் இந்த இருவரையும் தன்னுடைய படையின் முக்கிய மான படைத்தளபதிகளாக ஆக்கிக்கொண்டார்.

பஃலாபக் கோட்டை வெற்றிக்கு பிறகு ஸங்கி அவர்கள் நஜ்முதீனை அந்த கோட்டையின் ஆட்சியாளராக அறிவித்தார். ஸங்கி அவர்களின் மரணத்திற்கு பின்னர் டமாஸ்கசின் இராணுவம் நஜ்முதீனை முற்றுகையிட்டது. உடனடியாக நஜ்முதீன் அவர்கள் ஸய்ஃபுதீன் காஜி என்பவருக்கு தன் நிலைமை குறித்து செய்தி அனுப்பினார். ஆனால் ஸய்ஃபுதீன் காஜி அவர்கள் பஃலாபக் கோட்டையின் மீது கவனம் செலுத்தாமல் வேறு பணிகளில் மும்முரமாக இருந்து விட்டார்.

டமாஸ்கஸில் ராணுவம் விதித்த தடைகளை முற்றுகையை பஃலாபக் கோட்டையின் மக்களால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. எனவே, அவர்கள் பதற்றப்பட ஆரம்பித்தனர். நஜிமுதீன் அவர்கள் டமாஸ்கஸ் ராணுவத்தால் தன்னுடைய கோட்டை கைப்பற்றப்பட்டு விடும் என்று பயந்தார். எனவே அவர் இப்போது டமாஸ்கஸ் ஆட்சியாளரிடம் செய்தி அனுப்பினார். அதில் டமாஸ்கஸ் ஆட்சியாளர் ஏற்கனவே கேட்ட இருந்த நிலத்தை தந்து விடுவதாகவும் அதற்கு பதிலாக பஃலாபக் கொட்டையை விட்டுக்கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

டமாஸ்கஸ்-இன் ஆட்சியாளரும் இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். கோட்டை நஜிமுதீன் வசம் ஒப்படைக்கப்பட்டது. நஜிமுதீன் டமாஸ்கஸ்-இன் நம்பிக்கை மிகுந்த ஆளுளர் களில் ஒருவராக மாறினார்.

ஸங்கியின் மரணத்திற்குப் பிறகு அசதுதீன் நூருத்தீன் அவர்களின் இராணுவத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். அங்கு தனது திறமைகளை வெளிப்படுத்தினார். நூருத்தீன் அவருடைய போர் திறமைகளை கண்டறிந்து கொண்டார். இதன் காரணமாக அசதுதீனுக்கு ஊதியத்தையும் சன்மானங்களையும் உயர்த்தி கொடுத்துக்கொண்டே வந்தார்.

ஹிம்சையும் அர்ரஹ்பாஹ்வையும் கைப் பற்றும் வரை இவ்வாறு அசதுதீனின் ஊதியம் உயர்ந்து கொண்டே சென்றது. ஒரு கட்டத்தில் அவர் நூருத்தீன் அவர்களின் இராணுவத்தின் தலைவராகவும் மாறினார். நூருத்தீன் அவர்கள் டமாஸ்கஸை வெற்றி கொள்ள விரும்பியபோது அவர் அப்பணியை அசதுதீனிடம் ஒப்படைத் தார். உடனடியாக அசதுதீன் தன்னுடைய சகோதரர் நஜ்முதீன் அவர்களிடம் டமாஸ்கஸை வெற்றி கொள்ள உதவி கோரினார்.

நஜிமுதீன் இதற்கு ஒப்புக்கொண்டார். அதற்குப் பதிலாக அவர் டமாஸ்கஸ் வெற்றி கொள்ளப்படும் போது அதிலிருந்து தனக்கு சில பகுதிகளை கூடுதலாக அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நூருத்தீன் அவர்களும் இந்த கோரிக்கைக்கு ஒப்புக்கொண்டார். இதன்படி நூருத்தீன் அசதுதீன் நஜிமுதீன் ஆகியோர் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி அந்நகரம் வெற்றி கொள்ளப்பட்டது. எனவே, இந்த இரு சகோதரர்களும் நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் உயர்ந்த அந்தஸ்தில் வைக்கப்பட்டனர். குறிப்பாக நஜிமுதீன் அவர்களுக்கு தனி அந்தஸ்து வழங்கப்பட்டது. எந்த அளவுக்கு எனில் நூருத்தீன் அவர்களின் முன்னிலையில் அனுமதியின்றி உட்காரக்கூடிய ஒருவராக நஜிமுதீன் அவர்கள் திகழ்ந்தார்.

கிபி 1564 இல் நூருத்தீன் அவர்கள் தன்னுடைய இராணுவத்தை எகிப்தை நோக்கி அனுப்ப முடிவு செய்தார். இந்த காரியத்தை தொய்வில்லாமல் முடிக்கக் கூடிய தகுதி வாய்ந்த நபராக அவருக்கு ஒரே ஒருவர் மட்டுமே கண்ணில் பட்டார். அவர் அசதுதீன். இவ்வாறு நூருத்தீன் அவர்கள் எகிப்திற்கு தன்னுடைய இராணுவத்தை அனுப்ப முடிவு செய்ததற்கு முக்கிய காரணம் ஷவார் இப்னு முஜீர் என்பவருக்கு உதவி செய்ய விரும்பினார். இந்த ஷவார் என்பவர் யார் என்றால் எகிப்தின் கடைசி வாரிசுகளில் ஒருவரான அளாதுலித்தீனில்லாஹ் என்பவரிடம் உயர்ந்த பதவியில் இருந்தவர். அவர் கிபி 1563இல் டமாஸ்கஸ்-ஐ வந்தடைந்து நூருத்தீன் அவர்களிடம் உதவி கோரினார். அப்போது அவருடைய பதவி அவரிடமிருந்து பலவந்தமாக பறிக்கப்பட்டிருந்தது.

பலஹீனமானவர்களுக்கு அவர்களுடைய இழந்த நிலைகளை அடைய பலமுள்ளவர்கள் உதவி செய்யும் வழக்கம் அப்போது எகிப்தி னரிடையே இருந்து வந்தது. ஷவார் அவர்கள் பதவியில் இருந்த போது அவருக்கு எதிராக திர்காம் இப்னு ஸவாத் என்பவர் புரட்சி செய்து அவரை பதவியில் இருந்து இறக்கினார். இதன் காரணமாக தன் பதவியை இழந்து ஷவார் கெய்ரோவை விட்டு வெளியேற நேர்ந்தது. எனவே, இழந்த தன் பதவியை மீட்டுத்தர உதவி கோரி ஷவார் நூருத்தீன் ஸங்கி



அவர்களை அணுகினார். ஷவார் நூருத்தீன் அவர்களிடம் தன்னுடன் ஒரு படையை அனுப்பித்தர கோரினார். அதற்கு பகரமாக எகிப்தில் பங்கையும் மேலும் நூருத்தீன் அவர்களுடைய உத்தரவின்படி ஆட்சி நடத்த தயாராக உள்ளதாகவும் கூறினார். எனவே, நூருத்தீன் அவர்கள் இந்த விஷயத்தில் தன்னை சரியான வழியில் நடத்துமாறு இறைவனிடம் இஸ்திகாமத் தொழுமையை தொழுது அதன் பின்னர் அசதுதீன் அவர்களை ஷவாருடன் உதவிக்கு செல்லுமாறு உத்தரவிட்டார்.

அசதுதீன் அவர்கள் ஹிஜ்ரி 559இல் (கி.பி 1164) ஜமாஅத்துல் ஆகிர் மாதம் ஷவாருடன் படையெடுத்தார். நூருத்தீன் ஸங்கி அவர்கள் அசதுதீனுக்கு ஷவாருடைய பதவியை மீட்டுத் தரவும் அவருக்கு மந்திரி சபையில் யாரெல்லாம் போட்டியாக இருந்தார்களோ அவர்களை யெல்லாம் பழிவாங்க உதவவும் ஆணையிட்டி ருந்தார். அசதுதீன் தன்னுடைய படைவீரர் களுடன் பாதுகாப்பாக எகிப்தை வந்தடைந்தார். ஷவாரின் எதிரி இந்த விஷயத்தை கேட்டறிந்த வுடன் தப்பி ஓடினார். ஆனால் அசதுதீனின் படைவீரர்களை அவரை விரட்டிப்பிடித்து கொன்றனர். இதன் பின்னர் ஷவார் தன்னுடைய பதவியை மீட்டெடுத்தார். அதனை உறுதியாக தக்கவைத்துக் கொண்டார்.

அசதுதீன் கெய்ரோவின் வெளிப்பகுதியில் புறநகரில் தன்னுடைய படைகளை நிலைநிறுத்தி இருந்தார். ஷவார் இப்போது நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் தான் செய்த உறுதிமொழிகளில் இருந்த பின்வாங்க ஆரம்பித்தார். அசதுதீனுக்கு துரோகமிழைக்க துவங்கினார். எகிப்தின் நிலங்களில் தான் அளிப்பதாக கூறிய பகுதிகளை அசதுதீன் வசம் ஒப்படைக்கவில்லை. மீண்டும் ஒருமுறை அசதுதீன் ஷவாரிடம் வாக்குறுதியை நிறைவேற்றும்படியும் துரோகமிழைக்க வேண்டாமென்றும் எச்சரித்து செய்திகளை அனுப்பினார். ஆனால் ஷவார் அதனை சட்டை செய்யவில்லை. எனவே, அசதுதீன் தன் படைகளை அனுப்பி பில்பிஸ் என்ற நகரத்தை கைப்பற்றிக் கொண்டார். அது மட்டுமன்றி எகிப்தின் கிழக்கு நகரங்களின் மீது தன் ஆதிக் கத்தை செலுத்துவதில் வெற்றியும் கண்டார்.

ஷவார் இப்போது முற்றிலும் துரோகியாக மாறிப்போய் ஃபிரான்குகளிடம் தூதனுப்பினார். தன்னுடைய அதிகாரத்தை மீட்டுத்தரும்படி அவர்களிடம் கோரினார். இல்லையெனில் ஒட்டுமொத்த எகிப்தும் நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் சென்று விடும் என்று அவர்களை மிரட்டினார். இந்த மிரட்டல் நன்றாக வேலைசெய்தது. ஒருவேளை எகிப்து நூருத்தீன் ஸங்கி அவர்களின் வசம் வந்தால் தாங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிடுவோம் என்று ஃபிரான்குகள் உறுதியாக நம்பினர். எனவே, ஷவார் அனுப்பி வைத்திருந்த செல்வத்திலிருந்து ஒரு படையை ஆயத்தம் செய்து ஷவாருக்கு உதவி செய்ய அந்த படையை அனுப்பினர்.

ஃபிரான்குகள் ஆயத்தமாக எகிப்தை நோக்கி படையை நகர்த்தி செல்கிறார்கள் என்பதை அறிந்த நூருத்தீன் ஸங்கி அவர்கள் அதனை தடுக்கும் வண்ணம் ஒரு திட்டம் தீட்டினார். ஃபிரான்குகளுக்கு அருகாமையில் இருந்த தங்களுடைய எல்லையை நோக்கி தன்னுடைய படைகளை நகர்த்தினார்கள். இதன் மூலம் ஃபிரான்குகள் மொத்தமாக எகிப்தை நோக்கி சென்றால் நூருத்தீன் இங்குள்ள பகுதிகளை கைப்பற்றி விடுவார் என பாவ்லா காட்டினார். ஃபிரான்குகளுக்கு இப்போது இருப்பதை பாதுகாப்பதா அல்லது எகிப்தை விட்டு கொடுப்பதா என்று புரியவில்லை.

எனவே, ஃபிரான்குகளில் ஒரு பகுதியினர் தங்களுடைய பகுதிகளை பாதுகாப்பதற்காக தங்களுடைய இடத்திலேயே இருக்க வேண்டிய தாகிப்போனது. மீதமுள்ளவர்கள் மட்டுமே இப்போது ஜெருசலத்தின் மன்னருடன் எகிப்தை நோக்கி படைகளை நகர்த்தி சென்றனர். இதன் மூலம் நூருத்தீன் ஸங்கி அவர்கள் அசதுதீனுக்கு எதிரான ஆபத்தில் பாதியை குறைத்து விட்டார்.

இதற்கிடையே ஜெருசலத்தில் ஃபிரான்கு களின் பெரும் கூட்டத்தினர் ஒன்று புனித பயணத்திற்காக வந்து சேர்ந்தது. ஜெருசலத்தின் மன்னன் அவர்களிடம் உதவி கோரினார். தங்களுடன் படையில் வந்து சேர்ந்து கொண்டு இந்த புனிதப் போரில் பங்களிக்குமாறு அவர்களிடம் கேட்டுக்கொண்டான். அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டனர்.

அவர்களில் ஒரு பிரிவினர் ஜெருசலத்தின் மன்னனுடன் எகிப்தை நோக்கிப் புறப்பட்டனர். மீதமுள்ளவர்கள் ஜெருசலத்தை பாதுகாக்க அங்கேயே தங்கி விட்டனர். இப்பொழுது எகிப்தின் படையினரும் ஃபிரான்குகளின் படையினரும் ஒன்றுசேர்ந்து அசதுதீனை நோக்கி படையெடுத்துச் சென்றனர். அசதுதீன் அந்த நேரத்தில் பில்பிஸ் நகரில் தன்னையும் தன்னுடைய படையினரையும் பதுங்கி பாதுகாத்துக் கொண்டார். பில்பிஸ் நகரைச் சுற்றிலும் களிமண்ணால் ஆன சுவர் ஒன்று இருந்தது. இந்த சுவரும் மிக குறைந்த உயரமே கொண்டது. ஆனாலும் எகிப்து மற்றும் பிரான்ஸ் படைகள் அசதுதீனை வெற்றிகொள்ள முடியவில்லை. அவர்கள் மூன்று மாதங்கள் வரை அவர்களை சுற்றிவளைத்து முற்றுகையிட்டு இருந்தனர். ஆனாலும் அவரை வெற்றிகொள்ள முடியவில்லை.

**இதற்கிடையே அசதுதீனுக்கு உதவும் வகையில் ஃபிரான்குகளின் படையை தன்னுடைய தந்திரத்தினால் பாதியாக குறைத்த நூருத்தீன் ஸங்கி அவர்கள் இப்போது மற்றொரு உபாயத்தை கையாண்டார்.**

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்




# தமிழகத்தில் தீவிரவாத தாக்குதல்

## பதற்றத்தை உருவாக்கும் ஊடகங்கள்

கடந்த 23ம் தேதி ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் சார்பாக மிஷிமிஷி அமைப்பை பற்றியும் அதன் தாக்குதல்களையும் ஆய்வு செய்து ஒரு அறிக்கை சமர்பித்தார்கள். அதில் இந்தியாவை யும் இணைத்து சில தகவல்கள் இடம்பெற்றிருந்தது. அதனை இந்திய வெகுஜன ஊடகங்கள் பூதாகரப் படுத்தி செய்திகள் வெளியிட்டன. இது தேவை யில்லாத ஒரு பதற்றத்தை உருவாக்கும் செயல்.

### ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியாவிற்கு ஆபத்தாக குறிப்பிடப்பட்டிருக்கும் செய்திகள்

அல்கொய்தா என்ற தீவிரவாத அமைப்பு மொத்தமாக 150- 200 பேர்களை கொண்டு பங்களா தேஷ், மியான்மர், பாகிஸ்தான், இந்தியா ஆகிய பகுதி களில் இயங்குகிறது. இந்த அமைப்பின் முன்னாள் தலைவர் கொல்லப்பட்டதற்கு பதிலடி தாக்குதல் நடத்த திட்டமிட்டிருக்கிறார்கள். (pg 15, UN report)

மே,2019 ல் ஒரு ஐ.எஸ் தீவிரவாதியின் குறிப் புப்படி இந்தியாவில் 180லிருந்து 200 நபர்கள் ஐ.எஸ் அமைப்பில் இருக்கிறார்கள் என்று கூறப்பட்டது. அந்த அறிக்கையின் படி, கேரளா மற்றும் கர்நாடகா வில் ஐ.எஸ் தீவிரவாதிகள் குறிப்பிடத்தக்க அளவில் இருக்கிறார்கள். (pg 15, UN report)

மொத்தம் 24 பக்கம் கொண்ட அறிக்கையில் இந்த இரண்டு செய்திகள் மட்டும் தான் இந்தியா வுடன் தொடர்புடையது. இதில் இந்தியாவில் தாக்குதல் நடத்த திட்டம் என்று நேரடியாக குறிப்பிடவில்லை.

கடந்த பல ஆண்டுகளாகவே இந்தியாவில் ஐ.எஸ் தீவிரவாதிகள் ஊடுருவியிருக்கிறார்கள் என்ற செய்தி வெளிவந்து கொண்டே தான் இருக்கிறது. ஆனால், இதுவரை மத்திய புலனாய்வு அமைப்பு ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புடைய ஒருவரையும் கைது செய்து தண்டனை பெற்று தரவில்லை. ஆனால், அதற்கு மாறாக அப்பாவிகளை பிடித்து அவர்கள் மீது ஐ.எஸ் பட்டம் கட்டி அவர்கள் சட்ட போராட்டத்திற்கு பிறகு வெளிவரும் நிலை தான் இந்தியாவில் நீடிக்கிறது.

மே மாதம் வெளியிடப்பட்ட ஐ.எஸ் தீவிரவாதி களின் கூற்றுப்படி என்று வெளியிடப்பட்டிருக்கும் ஐக்கிய நாட்டு அறிக்கையும் கூட உண்மைக்கு மாறானது. மே மாதம் காஷ்மீரில் கிளர்ச்சியாளர் களுக்கும் இராணுவத்தினருக்கும் நடைபெற்ற மோதலுக்கு தாங்கள் தான் காரணம், இது எங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் இந்திய கிளை நடத்திய தாக்குதல் என்று அறிக்கை வெளியிட்டார்கள். ஆனால் அதனை ஜம்மு காஷ்மீரின் மூத்த காவல்துறை அதிகாரி முற்றிலும் மறுத்து விட்டார். (the print 25.07.2020)

எங்காவது மோதலும், குண்டு வெடிப்பும் நடந்தால் அதில் முதல் ஆளாய் நாங்கள் தான் செய்தோம் என்று உரிமை கொண்டாடும் ஒரு இயக்கம் ISIS. இப்படி செய்யும் போது தான் இதனை பயன்படுத்தி கொத்து கொத்தாக முஸ்லிம்களை சிறை வைக்க முடியும். முஸ்லிம்களை கொன்றொ ழிப்பதற்கும், அவர்கள் வாழ்வாதாரங்களை சிதைப் பதற்காக அமெரிக்காவில் உருவான தீவிரவாத இயக்கமே ISIS.

ஐ.நா அறிக்கையின் இந்தியாவை பற்றிய மொத்த செய்தியும் மே மாதம் ஐஎஸ் அமைப்பின் இந்திய கிளை என்று சொல்லிக்கொள்ளும் waliya of hindh என்ற அமைப்பின் பெயரில் வெளியானதை பொறுத்தே அமைந்திருக்கிறது. ஆனால், அந்த தாக்குதல் அவர்களால் நிகழ்த்தப்படவில்லை என இந்தியாவின் மூத்த காவலதிகாரிகள் கூறி அதனை அப்போதே முடித்து விட்டனர்.

**தற்போது இந்த செய்தியை எடுத்து அதில் மேலும் கதை கட்டி பதற்றத்தை உருவாக்கும் செயலை செய்து வருகின்றன பாஜகவுக்கு ஆதரவான இந்திய மற்றும் தமிழக ஊடகங்கள்.**

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் – ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் – மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு – மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது – டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு – பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் – 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் – விரிவாக்கப்பட்ட பதிப்பு – மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X – மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி – டி.எம். மணி, பக்கம் – 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் – முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் – 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது – கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் – செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் – 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் – பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? – விரிவாக்கப்பட்ட பதிப்பு – மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை – டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 – விசாரணை – நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் – அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்–
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? –
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் – பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? –
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் – அபூ. அஃப்ரஹ் – பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் – மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்–
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி – சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்–
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் – மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் –
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

## BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00

02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00

03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00

04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00

05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00

06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00

07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00

08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00

09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00

10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது – டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி – கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.